ட்ராஃபிக் டிக்கெட்
ட்ராஃபிக் டிக்கெட்டால் சட்டப் பிரச்சனையா?
Small Claims Court இல் வழக்கு உள்ளதா?
வீட்டில் வாடகைக்கு வசிப்போருடன் சட்டப்பிரச்சனையா?
இது போன்ற சட்டப் பிரச்சனைகளுக்கும் அழையுங்கள்
"ட்ராஃபிக்" குமார் எனும்
வினோத் குமார்
Licensed Paralegal
Mobile: 647-667-6034
Landline: 1-866-541-3966
Precision Paralegal Services LLP

29வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 29 | பாலம்: 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2019

# PEI மாகாணத்தில் பசுமைப்புரட்சி!

கனடாவில் முதற்தடவையாக மாகாண சட்டமன்றத்திற்கு எதிர்க்கட்சியாக பசுமைக் கட்சியைத் தெரிவுசெய்து பிரின்ஸ் எட்வேட் தீவு மக்கள் சாதனை நிகழ்த்தியுள்ளனர். PEIஇன் சட்டமன்றம் 27 உறுப்பினர்களைக் கொண்டது. 2019 மார்ச் 26இல் கலைக்கப் பட்ட சட்டமன்றத்தில் லிபரல் கட்சி 16 ஆசனங்களையும், பழமைவாதக் கட்சி 8 ஆசனங்களையும், பசுமைக்கட்சி 2 ஆசனங்களையும் மற்றும் ஓர் ஆசனம் சுயேட்சையாகவும் இருந்தன.

PEIஇன் தேர்தல் சட்டப்படி சட்ட மன்றத்திற்கு 2019 ஒக்ரோபர் 7இல் தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால் லிபரல் கட்சியின் அப்போதைய முதல்வரான Wade MacLauchlan சட்ட மன்றத்தை முன்கூட்டியே 2019 மார்ச் 26இல் கலைக்கும்படி மாகாண ஆளுநருக்குப் பரிந்துரை செய்திருந்தார்.

இதனால் PEI இன் 66ஆவது சட்ட மன்றத்திற்கான தேர்தல் 2019 ஏப்ரல் 23இல் நடைபெற்றது. பிரின்ஸ் எட்வேட் தீவு மக்கள் நூற்றாண்டு காலமாக லிபரல் கட்சியையும், பழமைவாதக் கட்சியையும் மட்டுமே ஆளும் கட்சியாகவும் எதிர்க் கட்சியாகவும் காலத்துக்காலம் தெரிவு செய்து வந்தனர்.

பத்து வருடங்களுக்கு மேல் ஆட்சியில் இருந்த பழமைவாதக் கட்சியைத் தோற்கடித்து லிபரல் கட்சி 2007இல் ஆட்சியைப் பிடித்தது. அதனைத் தொடர்ந்து 2011இலும், 2015இலும் லிபரல் கட்சி அரசே தொடர்ந்து பதவிக்கு வந்தது.

2015இல் லிபரல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற Wade MacLauchlan 2015இல் நடைபெற்ற தேர்தலில் மொத்தமாக இருந்த 27 ஆசனங்களில் 18இல் வெற்றி பெற்று முதல்வரானார்.



Peter Bevan-Baker
Leader of the Green Party

2007ஆம் ஆண்டில் இருந்து மூன்று தடவை தொடர்ச்சியாகப் பதவியில் இருந்த லிபரல் கட்சி நான்காம் முறையும் பதவிக்கு வரும் எண்ணத்தில் 2019 ஏப்ரல் 23இல் நடைபெற்ற தேர்தலில் போட்டி யிட்டது. தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து PEI மக்களிடையே நடந்த கருத்துக் கணிப்பில் என்றும் இல்லாத வாறு லிபரல் கட்சி இம்முறை மூன்றாம் இடத்திற்கே வரும் எனத் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வந்தது.

2012ஆம் ஆண்டில் பசுமைக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற Peter Bevan-Baker, 2015ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பசுமைக் கட்சியின் சார்பில் சட்ட மன்றத்திற்கு முதல் தடவையாகத் தெரிவானவர் என்ற பெருமையைப் பெற்றார். Peter Bevan-Bakerஇன் ஆளுமையின் வல்லமையால் இம்முறை தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து PEI மக்களிடையே நடந்த கருத்துக் கணிப்பில் என்றும் இல்லாதவாறு பசுமைக் கட்சி முதலிடத்தில் தொடர்ந்து இருந்தது. இவ்வாண்டு ஏப்ரல் மாத நடுப்பகுதியில் நடைபெற்ற கருத்துக்கணிப்பில் 40% மக்களின் ஆதரவைப் பெற்ற பசுமைக் கட்சி இம்முறை PEI சட்டமன்றத்தின் ஆட்சியை பிடிக்கலாம் என ஊடகவிய லாளர்களால் எதிர்வு கூறப்பட்டது.

1996இல் இருந்து Pat Binns தலைமையில் தொடர்ந்து மூன்று தடவை ஆட்சியில் இருந்த பழமைவாதக் கட்சி 2007இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. அதன்பின்னர் மூவர் பழமைவாதக் கட்சியின் தலைவர் பதவிக்கு ஒருவர் பின் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டாலும் சட்டமன்றத் தேர்தலில் தொடர்ந்தும் பழமைவாதக் கட்சி இரண்டாம் இடத்தைப்பெற்று எதிர்க் கட்சியாக வந்தது.

2019 பெப்ரவரியில் பழமைவாதக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று Dennis

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Sreet
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
HomeLife/GTA Realty Inc., Brokerage
www.divhomes.com

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154
supenthiran.subramaniam@td.com

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc. Brokerage
7 Eastvale Drive #205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977 Fax: 905.201.9229

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dentistry for children, adults and seniors
Dr. Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Monday to Saturday
10am to 8pm
Dr. Rashmi Jenojan
BDS, University Of London, UK

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104
email: uvakai100@gmail.com

JAFFNA COMFORT INC.
WE INSTALL ALL BRAND AC & Furnace. Gas line
THEEPAN
TSSA Licenced Contractor
416-358-5240
647-300-8550
jaffnacomfort.com

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Lic# M15001465
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
MORTGAGE ALLIANCE #10530
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

வீடு வாடகைக்கு...
வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan B.com
Sales Representative
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது இல்லமும் - 533



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனேடிய மத்திய வங்கியின் ஆளுனர் ஸ்ரீபன் போலஸ் (Stephen Polaz)இன் அறிவிப்பின் படி ஏப்ரல் 24, 2019 அன்று கனடிய வங்கியின் வட்டி வீதம் எதுவித மாற்றமும் ஏற்படாமல் 1.75% ஆகவே காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல அவரின் அறிக்கையின்படி நீண்ட காலத்திற்கு வட்டி வீத ஏற்றத்தை எதிர்பார்க்க முடியாது. சில ஆய்வாளர் களின் கருத்தில் இவ்வருடம் முழுவதும் வட்டி வீதத்தில் எதுவித ஏற்றமும் ஏற்படாது. இன்றைய காலத்தில் (மே 2019) அநேகரின் கேள்வியாகக் காணப்படு வது GTAஇல் அதிக வீடு/மனைகள் குறிப்பாக அடுக்குமாடி மனைகள் கட்டப்படுகின்றவா? இந்தக் கேள்விக்குப் பதிலாக கனடாவில் ரொறொன்ரோ பெரும் பாகம் மக்கள் வாழ்வதற்குச் சிறப்பானதாக உலகளாவிய மக்கள் தெரிவு செய்கின்றனர். ஏறக்குறைய 325,000 புதியவர் கனடாவை தமது இருப்பிடமாக வருடாவருடம் தெரிவு செய்வதனைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் மூன்றில் ஒருவர் ஏறக்குறைய 115,000 மக்கள் GTAஐ தெரிவு செய்கின்றனர். இவர்கள் குடியிருக்க அண்ணளவாக 30,000_40,000 வரையான புதிய இருப்பிடங்கள் தேவைப்படுகின்றது. ஆனால் 2016இலிருந்து ஆகக்கூடியதாக 40,000 வரையான புதிய இருப்பிடங்களை அமைக்கக் கூடிய நிலையிலேயே எமது நிர்மாண வசதிகள் காணப்படுகின்றது. இதனால் கட்டப்படும் வீடு/மனைகள் அதிகம் என்று கூற முடியாது. இந் நிலையில் பெரிய மாற்றம் ஏற்படும் என்றும் கூறமுடியாது. 2041ஆம் ஆண்டளவில் GTAஇன் சனத்தொகை 9.7 மில்லியனாக அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய மனை/வீடுகளின் விலையின் அதிகரிப்பு மிக அதிகமாக இருப்பதன் காரணம் என்னவாகலாம்?

புதிய மனை/வீடுகளின் விலை முக்கிய மாக மூன்று காரணிகளில் தங்கியுள்ளது. நிலத்தின் விலை (Land Value), தொழில்புரிபவர்களின் சம்பள அதிகரிப்பு (Labour Cost), நிர்மாண மூலப் பொருட்களின் விலை (Construction Material), அமைப்பாளர்களின் (Designers) செலவு மற்றும் அரசிற்கு செலுத்தும் தொகையுடன் (Develop ment Fee) வரிச்செலவு (Tax) குறிப்பாக 2006இலிருந்து இதுவரை நிலத்தின் பெறுமதி 300 வீதத்தினால் அதிகரித்துள்ளது.




அத்துடன் வீடு/மனைகள் நிர்மாணம் செய்யும்போது மொத்த செலவில் (22_ 24%)வரை அரசிற்கு செலுத்த வேண்டி யுள்ளது. (22% வீடு, 24% அடுக்குமாடி மனை) அத்துடன் அமைக்கும் இடம், வீடு/மனைத் தொகுதிகளின் அமைப்பும் செலவில் பெரும்பங்கு வகிக்கின்றது. எனவே விலையில் பெரிதான இறக்கத்தை எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் இன்றைய காலத்தில் வீடு/மனை வாங்கு பவர்களுக்கு அடமானக்கடன் பெறுவதில் மிகவும் இறுக்கம் காணப்படுகின்றது. அத்துடன் ஆதனத்தை வாங்குபவர்கள் அடமானக் கடன் பெறும்போது நிறுவனங்கள் ஆதனத்தின் பெறுமதியை அவர்களால் கணக்கிட்டு (Appraisal) அதன் பிற்பாடே அடமானக் கடனின் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது. இதனால் இன்றைய காலத்தில் ஆதனம், உங்கள் முற்பணத்தைப் பாதுகாக்கக் கூடிய வகையில் ஆதனத்தை வாங்குவதற்கேற்ப வாங்கும் பத்திரம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்பதனை கவனத்தில் கொள்க.

இதற்கு உங்கள் நலன் கருதும், முகவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது. ஆதன வியாபாரம் நீண்ட கால முதலீடு என்பதனை ஞாபகத்தில் கொள்ளவும்.

குறிப்பு - கனடியப் பொருளாதாரம் இறங்கு முகமாகச் செல்வதாலேயே மத்திய வங்கி வட்டி வீதத்தில் மாற்றம் செய்வதனை தவிர்க்கின்றது. நிலைமை மோசமடையும் சந்தர்ப்பத்தில் வட்டி வீத இறக்கம் தவிர்க்க முடியாமலும் போகலாம். ஜனவரி 01, 2018இல் கொண்டுவரப்பட்ட Stress test அதாவது அடமானக்கடன் பெற பொதுவாகப் பெறப்போகும் அடமானத்தை விட 200 புள்ளி அதாவது 2% அதிகமாகக் கணக்கிட்டே கடன் பெறும்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORTGAGE

## நல்ல ரேட்ல மோட்கேஜ்(OAC*)

## லைன் ஒப் கிரெடிட்(HELOC)

## ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

## Private 1st Mortgage (No Income Verification)

## 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

## பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

## எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

## பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

## And For All Your Real Estate Services

MORTGAGE CLINIC



நீங்களும் வெல்லலாம்
**$100,000***
எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது

**ஜெ (Jey) இராசதுரை** MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage Agent/Real Estate Broker

**416-613-2788 / 416-816-9011**

**Cell : 416 - 624 - 4843**

RIGHT AT HOME REALTY INC.

1504 Markham Road,
Toronto ON M1B 2V9
(Markham Road & HWY 401)

MORTGAGE ALLIANCE Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3 Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

*http://www.mortgagealliance.com/JeyRasathurai/minimize-your-mortgage-sweepstakes




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்குலையும் இயல்பு வாழ்க்கை




- ஆதித்தன் -

போருக்குப் பின்னர் கட்டம் கட்டமாக சீரமைந்து வந்த இயல்பு வாழ்க்கை மீண்டும் பழைய நிலைக்குள் செல்கின்றது. உலக பயங்கரவாத இயக்கமான ஐ.எஸ்.ஐ.எஸ் தலைமையில் இலங்கையில் நடத்தப்பட்ட பாரிய குண்டுத் தாக்குதல்களின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பொது மக்களின் இயல்பு வாழ்க்கையில் மீண்டும் கெடுபிடிகளை கொண்டு வந்துள்ளது. நடைபெற்ற தாக்குதல்களின் பின்னர் அரசாங்கம் எடுத்துள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியமானதெனினும், பொதுமக்களின் அன்றாட வாழ்வில் சங்கடங்கள் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது என்பதை மறுதலிக்க முடியாது. முப்பது வருட போரின்போது பல துன்பங்களை அனுபவித்த தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு இந்த நிலைமை கவலையளிப்பதாகவே உள்ளது.

வடக்கிலும் நடைபெறும் படையினரின் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்களின்போது மக்கள் சிரமங்களுக்கு முகம்கொடுக்கும் நிலை உருவாகியுள்ளது. முன்னர் பயணங்களின்போது இடம்பெற்று வந்த சோதனை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை, ஏ-9 பாதையில் பஸ்களில் பயணம் செய்யும் மக்களின் உடமைகள் சோதனையிடப்படுவதோடு, அடையாள அட்டையும் பார்க்கப்படுகின்றது. மாங்குளத்தில் பஸ் பிரயாணிகள் கீழே இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர்.

வடக்கில்-வவுனியா, மன்னார், கிளிநொச்சி. முல்லைத்தீவு பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக சுற்றிவளைப்பு தேடுதல்கள் நடைபெறுகின்றன. வீடுகளிலுள்ள பொருட்கள் அனைத்தும் சோதனையிடப்படுகின்றன.

இலங்கை முழுவதும் அவசரகால சட்ட சரத்துக்களை அமல்படுத்த நாடாளுமன்றம் ஏகமனதாக அனுமதி வழங்கியுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என இலங்கைக்கு சர்வதேச அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வந்த நிலையில், இந்த அவசர காலச் சட்டம் அமலுக்கு வந்துள்ளது. இதே வேளையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான அழுத்தங்கள் தளர்வடையும் நிலையும் இப்போது ஏற்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை கைது செய்வதற்குப் பொலிஸாருக்கு மாத்திரம் காணப்படுகின்ற அதிகாரம், அவசரகாலச் சட்டத்தின்படி தற்போது இலங்கையிலுள்ள அனைத்து பாதுகாப்பு தரப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ளது.




பொலிஸார் தவிர்ந்த ஏனைய பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு 24 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்துவதற்கான அதிகாரம் இச் சட்டத்தில் உள்ளது. இதனால் சாதாரண குற்றவாளிகள் அல்லது, சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படுகின்றவர்களும் பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

நாடளாவிய ரீதியில் அனைத்து வீடுகளையும் சோதனைக்குட்படுத்துமாறு நாட்டின் ஜனாதிபதி பாதுகாப்புத் தரப்பிருக்கு உத்தரவிட்டுள்ளார். நிரந்தர வதிவிடங்களில் வாழ்வோரைப் பதிவு செய்யுமாறும் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

வீடுகளில் பதிவுகள், சோதனைகளை படையினர் மேற்கொள்ளும்போது பொது மக்களுக்கு குறிப்பாக வீடுகளிலுள்ள பெண்களுக்கு துன்புறுத்தல்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன. மீண்டும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவ்வாறான துன்புறுத்தல்கள் நடைபெறலாம் என்கின்ற அச்ச நிலை தோன்றியுள்ளது.

தமிழ் பிரதேசங்களில் நடைபெற்று வந்த நியாயமான, அமைதி வழியிலான போராட்ட நடவடிக்கைகள் யாவும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்படும். எதிர்வரும் மே-18ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு நாள் நிகழ்வுகள் எதனையும் மேற்கொள்ள முடியாது. மேதினக் கூட்டங்கள் கூட நிறுத்தப் பட்டுள்ள நிலையில் இவ்வாறான கூட்டங்களுக்கு அனுமதி கிடைக்கப்போவதில்லை. இச் சட்ட நடைமுறையினால் சில தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்படும். குறிப்பாக கடற்தொழிலில் ஈடுபடுகின்றவர்கள். போர்க்காலத்தில் படையினரின் அழுத்தங்களால் அதிகம் பாதிக்கப்பட்டனர். தற்போதும் அவ்வாறான அழுத்தங்கள் ஏற்படுத்தப்படலாம். சாதாரண மனிதரின் நடவடிக்கைகளை கண்காணிப்பதென்பதே ஒரு மனித உரிமை மீறலாகும்.

இனிவரும் நாட்களில் இந்த கண்காணிப்புகள் அதிகரிக்கப்படலாம்.

முன்னாள் போராளிகளும் இச்சட்ட அமலாக்கம் தொடர்பில் அச்சம் கொண்டுள்ளனர். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மீண்டும் தங்கள் மீதான கெடுபிடிகளை படையினர் ஏற்படுத்தலாம் என அவர்கள் பயப்படுகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸ தற்போது தெரிவித்துள்ள விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்திருக்கும் அவர், தான் ஜனாதிபதியானால் என்ன செய்வார் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் புலனாய்வுச் சேவையை மீண்டும் கட்டியெழுப்புவதன் மூலமும் பொது மக்களைக் கண்காணிப்பதன் மூலமும், பயங்கரவாதம் பரவுவதை நிறுத்த முடியும் என்றும் தற்போதைய அரசாங்கம், தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கவில்லை என்றும் இன நல்லிணக்கம், மனித உரிமைகள், தனிப்பட்ட சுதந்திரங்களைப் பற்றியே அரசாங்கம் பேசிக் கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளார். நடைபெற்றுள்ள இந்த தாக்குதல் சம்பவங்கள் சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் எதிர்காலத்தில் தங்களின் பாதுகாவலன் இவரே என்ற எண்ணம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.

நாட்டின் தலைமையில் இவ்வாறானதொரு மாற்றம் ஏற்பட்டால் பொதுமக்களின் நிலை குறிப்பாக, தமிழ் மக்களின் நிலை என்னவாகும் என்பதை சிந்தித்துப் பார்க்கலாம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் அரசாங்கத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும், சில சாதகமான தன்மைகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. ஜெனீவா அழுத்தங்கள் குறித்து அரசாங்கம் இனி அதிகம் கவலைப்படத் தேவையில்லை. தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு என்பதை விடவும், தற்போதுள்ள பயங்கரவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பதே பிரதான தேவையாகக் காட்டக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 48



குரு அரவிந்தன்

சென்ற தலைமுறையில் போதிய வசதிகள் அற்ற காலத்தில், முதற்குடி மக்கள் வேட்டை ஆடுவதையே தங்கள் முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர். வேட்டை ஆடும்போது பலவிதமான உத்திகளைக் கையாண்டு மிருகங்களையும், பறவைகளையும் வேட்டையாடினர். அதேபோல கடலிலும், நீர் நிலைகளிலும் உணவுக்காகக் கடல் வாழ் உயிரினங்களைப் பிடித்தனர். சில சமயங்களில் நேரடியாகத் தாக்காமல், கண்ணிவைத்தும் மிருகங்களை வேட்டையாடினர். பலவிதான பொறிமுறைகளைக் கண்ணிவைப்பதற்குப் பயன்படுத்தினர். பள்ளம் தோண்டி அதை தடிகள் இலைகளைக் கொண்டு மூடி வைப்பர். அதற்குள் விழும் மிருகங்களை உணவுக்காகவும், தோலுக்காகவும பாவித்தனர். நாரினால் அல்லது தோலினால் செய்யப்பட்ட சுருக்குக் கயிறு முறை மூலமும் சிறிய மிருகங்களையும், பறவைகளையும் பிடித்தனர். பொதுவாக ஓநாய், நரி, முயல், மான், காட்டுக்கோழி, மலையாடு, பீவர் போன்றவை இந்தப் பொறிக்குள் சிக்கிக் கொள்வதுண்டு. 1991 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி சுமார் 1.5 கோடி வேட்டையாடுபவர்கள் கனடாவில் இருந்தனர். 1980களில் கனடாவில் கணக்கெடுத்தபோது, அரைக் கோடி மக்கள் வேட்டையாடுவதற்கான அனுமதிப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்திருந்தது பதிவு செய்யப் பட்டிருந்தது.

கனடாவில் வேட்டையாடுவது இன்றும் முதற்குடி மக்கள் சிலரின் தொழிலாக இருக்கின்றது. இதைவிட வேடிக்கைப் பொழுது போக்குவதற்காகவும் மிருகங்கள், பறவைகளைச் சிலர் வேட்டையாடுகின்றனர். வேட்டையாடுவதற்கு அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அதேபோல கடல் வாழ் உயிரினங்களைப் பிடிப்பதற்கும் அனுமதி வேண்டும். அரிய உயிரினங்களைப் பாதுகாப்பதற்காகவே இத்தடைகளை அரசு விதித்திருக்கின்றது. அனுமதிப் பத்திரம் உள்ள முதற்குடி மக்களோடு வேறு வேட்டைக்காரரும் சேர்ந்து செல்வதுண்டு. உணவுக்காக கரிபோ என்ற மானினம்தான் அதிகமாக வேட்டையாடப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் சுமார் 350 தொடக்கம் 400 இறாத்தல் வரை நிறையுள்ளதாக இருக்கும். அடுத்ததாக இடம் பெறுவது காட்டுப் பன்றி, இலக்குத் தவறினால் வேட்டையாடுபவரையே அகோரமாகத் தாக்கிவிடும். இந்தக் காட்டுப்பன்றி வேட்டைக்கு வேட்டை நாய்களையும் உதவிக்காகக் கொண்டு செல்வர். அடுத்து வேட்டையாடப்படுவது வடஅமெரிக்காவில் உள்ள றொக்கி மவுண்டன் எல்க் என்று சொல்லப்படுகின்ற மலைகளில் வாழும் மான் வகையாகும். இதன் நிறை சுமார் 700 இறாத்தல் வரை இருக்கும். பறவை வேட்டை என்று சொல்லும்போது காடுகளில் உள்ள ரேக்கி என்று சொல்லப்படுகின்ற வான்கோழி வேட்டை முக்கியமானதாகவும், பிரபலமானதாகவும் இருக்கின்றது. அடுத்து இடம்பெறுவது கனடா மூஸ் என்று சொல்லப்படுகின்ற மானினமாகும். மானினங்களில் மிகப் பெரியதும், சுமார் ஆறு அடி உயரமும் 1,500 இறாத்தல் நிறையும் கொண்டது ஆகும்.

அடுத்து இடம்பெறுவது புறோங்ஹோர்ன் என்று சொல்லப்படுகின்ற ஆடுகளின் குடும்பத்தைச் சேர்ந்த விலங்காகும். பார்ப்பதற்கு மானினம்போலத் தெரிந்தாலும், வடஅமெரிக்காவின் மேற்குக் கரைப்பக்கம் அதிவேகமாக அதாவது 55 மைல் வேகத்தில் ஓடக்கூடிய விலங்காக இருக்கின்றது. சிறுத்தைகளுக்கு அடுத்ததாக வேகமாக ஓடக்கூடிய இவை வடஅமெரிக்காவில் இருந்து மெக்ஸிகோ வரை உள்ள மேற்குக்கரை நீண்ட நிலப்பரப்பில் வசிக்கின்றன. அடுத்ததாக வேட்டையாடப்படுவது பிக்கோன் சீப் என்று சொல்லப்படுகின்றன மலை ஆடுகளாகும். சுமார் 500 இறாத்தல் வரை நிறை உள்ளன. அடுத்ததாகக் குறிப்பிடத்தக்கது பைசன் என்று சொல்லப்படுகின்ற எருமை வகைகளாகும். வடஅமெரிக்க நிலத்தில் வாழும் மிகப் பெரிய மிருகமாகப் பைசன் இருக்கின்றது. சுமார் 2,000 இறாத்தல் வரை நிறையுள்ள இவை 30 மைல் வேகத்தில் ஓடக்கூடியன. குதிரையில் சென்று வேட்டையாடுபவர்களையும் வேகமாக முட்டி மோதக் கூடியது. அடுத்து இடம் பெறுவது வைற்ரெயில் டியர் என்று சொல்லப்படுகின்ற மானினமாகும். 300 இறாத்தல் வரை நிறையுள்ள இவை வடஅமெரிக்காவில் றொக்கிமலைப் பகுதியிலும், மற்றும் சில இடங்களிலும் காணப்படுகின்றன.

1867ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட 'இந்தியர்களும் அவர்களுக்கான நில ஒதுக்கீடும்' என்ற சட்டத்தின்படி (Indians and Lands reserved for the Indians) முதற்குடி மக்கள் தமக்கான உரிமைகளை ஓரளவு பாதுகாக்க முடிந்தது. இந்த நிலங்களில் அவர்கள் பாரம்பரிய முறைப்படி வாழ்வதற்கும், வேட்டையாடுதல், மீன் பிடித்தல் போன்றவற்றைத் தொடருவதற்கும் இச்சட்ட மூலம் உதவியாக இருந்தது. இந்தச் சட்ட மூலத்தை The British North America Act (BNA) என்று அழைத்தனர். 1871 தொடக்கம் 1921 வரை உள்ள காலத்தில் கனடாவின்




வடமேற்குப் பகுதிகளில் பெரிய தொழிற்சாலைகளையும், தொழில் நிறுவனங்களையும் ஏற்படுத்துவதற்கு இந்தியர்களான முதற்குடி மக்களுடன் ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கை பெரிதும் உதவியாக இருந்தது.

அன்றொருநாள் மக்டோனால்ஸ் உணவகத்தில் உணவருந்திக் கொண்டிருந்தபோது அருகே இருந்த மேசையில் உணவருந்திக் கொண்டிருந்த ஒருவர் 'இங்கிருந்து நூலகத்திற்கு எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?' என்று கேட்டார். நானும் அந்த நூலகத்திற்கு முன்பு சென்றிருந்தேன் என்பதால் அவர் போகவேண்டிய இடத்தைக் குறிப்பிட்டேன். தான் பேருந்தில் வந்ததாகவும், பிழையான இடத்தில் இறங்கிவிட்டதாகவும் சொன்னார். அவர் முதற்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவராக இருந்தார். தனது பெயர் 'மடி லெஜன்ட்' என்றும் தான் பிறந்தது வடக்கே உள்ள 'தண்டர்பே' என்றும் அறிமுகம் செய்தார். முகச்சவரம் செய்யாதவர் போல இரண்டு, மூன்று நாள் முடி முகத்தில் வளர்ந்திருந்தது. அவர் பிறந்து வளர்ந்த அந்த இடத்திற்கு நான் போயிருந்தேன் என்பதை அவரிடம் சொன்னேன். என்னைப்பற்றி விசாரித்தார். நான் புலம் பெயர்ந்த காரணத்தைச் சொன்னேன். எவ்வளவு தூரத்திற்கு அப்பால் இருந்து வந்திருக்கிறாய் என்று ஆச்சரியப்பட்டார். அவருக்கு சுமார் நாற்பது வயதிருக்கலாம், 27 வருடங்களாக ரொறன்ரோவில் இருப்பதாகவும் சொன்னார். அவர் கதைக்கும்போது மதுபானம் கொஞ்சம் அருந்தியிருப்பார் போலத் தெரிந்தது. பகல் நேரத்தை நூலகங்களில் செலவிடுவதாகச் சொன்னார். அவரிடம் வாசிப்புப் பழக்கம் இருப்பதைப் புரிந்து கொண்டேன்.

கதைத்துக் கொண்டிருக்கும்போது, அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார், 'ஒரு வருடத்தில் எத்தனை செக்கன்ட்?'. என்று கேட்டார். மாதத்தைக் கேட்டால் சொல்லியிருப்பேன், கிழமையைக் கேட்டால் சொல்லியிருப்பேன், ஏன் நாட்களைக் கேட்டாலும் சொல்லியிருப்பேன், ஆனால் செக்கன்ட் என்றதால் மனதில் கணக்குப் பார்க்க வேண்டியிருந்தது. முதலில் மணித்தியாலங்களைக் கணக்குப் போட்டு, அதன்பின் எத்தனை செக்கன்ட் என்று மனதில் கணக்குப் போட்டேன். அவர் அதைப் புரிந்து கொண்டார், இது அவ்வளவு கடினமான கேள்வி இல்லை, ஜனவரி செக்கன்ட், பெப்ரவரி செக்கன்ட், மார்ச் செக்கன்ட் என்று இரண்டாம் திகதியை எண்ணிக்காட்டினார். அவருடைய நகைச்சுவையைப் பாராட்டினேன், தான் சிறிய மேடைகளில் 'ஸ்ரான்ட்டப் நகைச்சுவை' செய்வதாகக் குறிப்பிட்டார். அவர் ஏன் நூலகத்திற்குச் செல்கிறார் என்பதை அப்போது புரிந்து கொண்டேன்.

அவர் எழுந்து செல்லும்போது தனது சட்டைப் பைக்குள் கையைவிட்டு ஒரு சிறிய அட்டையை எடுத்து நீட்டினார். அவருடைய 'விசிட்டிங்கார்ட்' என்று நினைத்தேன். வாங்கிப் பார்த்தேன், அது ஏழு கொபி ஸ்டிக்கர் நிரப்பப்பட்ட ஒரு 'மக்டொனால்ட் கொபி' காட்டாக இருந்தது. 'இல்லை வேண்டாம் நீங்களே வைத்திருங்கள்' என்று அவரிடம் நீட்டினேன். 'வேண்டாம் என்று சொல்லாதீங்க, இது எங்களுடைய விருந்தோம்பல், யாராய் இருந்தாலும் எங்களிடம் இருப்பதை முடிந்ததைக் கொடுப்போம் அதுதான் எங்க கலாச்சாரம்' என்றார் அந்தக் கனடிய முதற்குடிமகன். இந்தக் கலாச் சாரம் அவர்கள் உடம்பிலே ஊறிப் போயிருக்கின்றது, இல்லாவிட்டால் அல்லற்பட்டு வந்த எங்களைத் தங்கள் சொந்த மண்ணில் அன்போடு அரவணைத்து வாழ்வு தந்திருப்பார்களா?

1st & 2nd MORTGAGES... that meets your needs
MORTGAGE ALLIANCE
Mortgage Alliance
1585 Markham Road, Unit 110,
Scarborough, ON. M1B 2W1
Tel 647-350-7050
• Commercial Mortgages.
• Construction Mortgages
• Secured Credit line
• Consolidate 1st, 2nd, 3rd mortgages
SAM SURENDRAN
Mortgage Broker Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca

Corporate Office: Mortgage Alliance, 2005 Sheppard Ave. E. Suite 200, Toronto ON. M2J 5B4 Tel: 1-877-366-3487



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் போர்!

**- விகிர்தன் -**

இலங்கைக்குள் மீண்டும் ஒரு போர் ஆரம்பித்துள்ளது. முப்பது வருட காலமாக இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்து பத்து வருடங்கள் கழிகின்ற நிலையில் மீண்டும் ஒரு போர் தொடங்கியுள்ளது. இந்தப் போர் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப் போகின்றதோ என்கின்ற அச்சம் மக்கள் மனங்களில் இப்போது குடியேறியுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் சாதாரணமானவை அல்ல. இதனை ஒரு சம்பவமாகப் பார்க்க முடியாது. தொடரப் போகின்ற ஒரு பெரும் போரின் தொடக்கமாகவே பார்க்கத் தோன்றுகின்றது. கிறிஸ்தவ தேவாலயங்கள், மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இவ்வாறு, சடுதியாகப் பாரிய தாக்குதல்கள் நடைபெறும் என்று யாரும் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.

கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கும் உயிர்த்த ஞாயிறு தினமான அன்று கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்திலும், மட்டக் களப்பு சியோன் தேவாலயத்திலும், நீர் கொழும்பிலுள்ள தேவாலயம் ஒன்றிலும் மக்கள் அதிகளவில் கூடியிருந்த நிலையில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதே சமயத்தில் கொழும்பிலுள்ள மூன்று நட்சத்திர ஹோட்டல்களிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேவாலய வழிபாடுகளில் கலந்து கொண்டிருந்த அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஹோட்டல்களில் தங்கியிருந்த பல வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்த தாக்குதலில் 359 பேர் உயிரிழந்ததாக முன்னர் தகவல் வெளியிடப்பட்டிருந்த போதும் இறுதியாக இலங்கையின் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தகவலில் உயிரிந்தவர்கள் 253 பேர் என அறிவிக்கப் பட்டுள்ளது. குண்டுவெடிப்பில் உடல் பாகங்கள் சிதறிக் காணப்பட்டதால் தவறான எண்ணிக்கை வெளிவந்ததாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 45இற்கும் அதிகமான வர் சிறுவராவர். பல சிறுவர்கள் காயங் களுடன் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் சில சிறுவர் பெற்றோரை இழந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த குண்டுவெடிப்புக்களுக்கு ஐ.எஸ். ஐ.எஸ் என்கின்ற பயங்கரவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது. உயிர்த்த ஞாயிறன்று தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் மூவரின் புகைப்படங்களும் ஐ.எஸ் பயங்கர வாத முகவர் நிறுவனத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வெடிப்பு சம்பவங்களின் பின்னர் இலங்கை பாதுகாப்புப் படையினர் நாடு முழுவதும் தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர். இத்தேடுதல்களின் போது, பலர் கைது செய்யப்படுகின்றனர். ஆயுதங் கள், வெடிபொருட்கள் கைப்பற்றப்படு கின்றன. மோதல்களும் இடம்பெறுகின்றன.

கடந்த 26ஆம் திகதி இரவு கிழக்கில் கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்தில் படையினரால் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றபோது துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுள்ளது. சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து அடுத்த நாள் காலை 15 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆறு ஆண்களினதும், மூன்று பெண்களினதும், ஆறு சிறுவர்களினதும் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. சிலர் படு காயமடைந்துள்ளனர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்தவர்களில் ஆறு பேர் தற்கொலை குண்டுதாரிகள் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த ஆறு பேரில், மூன்று பேர் தங்களது குடும்பத்துடன் இறந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது நபரொருவர் குண்டைவெடிக்கச் செய்ததில் இந்த அனர்த்தம் இடம்பெற்றதாகவும் பொலிஸ் தகவல் தெரிவிக்கின்றது.

சாய்ந்தமருதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்திலேயே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. குறித்த பகுதியிலுள்ள வீடொன்றை வாடகைக்குப் பெற்று, அதில் வெளியூரைச் சேர்ந்த சிலர் தங்கி யிருந்துள்ளனர். இவர்களின் நடவடிக்கை களில் சந்தேகம் கொண்ட அப்பகுதி மக்கள், இவர்கள் குறித்து அங்குள்ள பள்ளிவாசல் நிர்வாகத்திடம் முறையிட்டுள்ள னர். பள்ளிவாசல் நிர்வாகத்தினருடன் அந்த வீட்டில் தங்கியிருந்தவர்கள் முரண்பட்ட நிலையில், பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்துக்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் வந்தபோது, அந்த வீட்டில் இருந்தவர்கள் குண்டை வெடிக்கச் செய்துள்ளனர். அதற்கு முன்னதாக துப்பாக்கிச் சண்டையும் நடைபெற்றுள்ளது. குண்டை ஒரு தற்கொலை குண்டுதாரி வெடிக்கச் செய்ததாலேயே இந்த உயிர் இழப்புக்கள் ஏற்பட்டதாகச் சொல்லப்படு கின்றது.

21ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புகளின் பின்னர் சுமார் ஒரு வாரத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் தேடுதல் நடவடிக்கைகளின் போது மேலும் இவ்வாறான குண்டுவெடிப்புகள் நடை பெறலாம் என்கின்ற அச்சத்தில் பொதுமக்கள் காணப்படுகின்றனர்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய குண்டுத் தாக்குதல்களுக்கு உரிமை கோரியுள்ள ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பு அதற்கான காரணத்தை வெளியிடவில்லை. கொழும்பு கொச்சிக்கடை, மட்டக்களப்பு மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங் களிலுள்ள தேவாலயங்களில் தமிழ் கிறிஸ்தவர்களே அதிகம் வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். இந்து சமயத்தவர்களும் இந்தத் தேவாலயங்களுக்குச் செல்லும் வழக்கம் உள்ளது. எனவே, தமிழர் கூடும் இத்தேவாலயங்களை இலக்கு வைக்க என்ன காரணம் என்கின்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

உலகின் மிக மோசமான பயங்கரவாத வன்முறைகளில் ஈடுபட்டு வரும் ஐ.எஸ் அமைப்பு அகன்ற இஸ்லாமிய தேசம் என்கின்ற குறிக்கோளின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது. அது இலங்கையை குறிவைத்து இவ்வாறான தாக்குதலை மேற்கொள்ளும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் இந்த அமைப்பு உலகம் முழுவதுமுள்ள இஸ்லாமிய அமைப்புக்களில் ஊடுருவி வருவதாகவே கூறப்படுகின்றது. இலங்கை யிலுள்ள முஸ்லிம் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களுக்கு வெளிநாடுகிளில் பயிற்சிகளை வழங்கியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

கடந்த சில வருடங்களாகவே இலங்கையில் ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புள்ள முஸ்லிம் அமைப்புகள் உள்ளதாகவும், இந்த அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் பயிற்சி வழங்கப்பட்டு இலங்கை வந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி வந்தன. எனினும், இதனை யாரும் பாரதூரமானதாக நினைக்கவில்லை. அரசாங்கமும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏனெனில், இவ்வாறான கருத்துக்களை கூறிவந்தவர்கள் கடும் போக்கு பௌத்த தேரர்கள். இத்தேரர்களின் கருத்தை முஸ்லிம் அமைப்புக்களும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் கடுமையாக எதிர்த்து வந்தனர். ஆனால், புலனாய்வுப் பிரிவினர் இரகசியமாக இந்த விடயங்களை கண்காணித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் இவ்வாறான பாரிய அனர்த்தம் ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

அரசாங்கத்திலுள்ளவர்கள் தங்களுக்குள் முரண்படுவதிலேயே காலத்தைப் போக்கி யுள்ளனர். பாதுகாப்பு தொடர்பில் அவர்கள் அக்கறை செலுத்தவில்லை. இன்று நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் இதனை மக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.



இலங்கையின் அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துவேறுபாடுகளை கைவிட்டு பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ள கருத்தும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இந்த தாக்குதல்கள் காரணமாக பொருளாதார ரீதியாகவும் இலங்கை வீழ்ச்சி கண்டுள்ளது. நாட்டிற்கு கூடுதல் வருமானத்தை ஈட்டித் தந்த சுற்றுலாத்துறை கடுமையான வீழ்ச்சிக்குள்ளாகியுள்ளது. அனைத்துப் பொருளாதார சிக்கல்களும் பொதுமக்களையே நேரடியாகத் தாக்கும்.

எவ்வாறெனினும், உலகின் அதிபயங்கர வாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் தலைமை யில் தொடுக்கப்பட்டுள்ள இலங்கை மீதான இந்தப் போர் முடிவிற்கு வருமா? முறியடிக்கப்படுமா? அல்லது தொடருமா? என்பதுதான் இன்று பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள விடை தெரியாத கேள்வி.

ஒன்றைப்பற்றி நிச்சயமாக
நம்ப வேண்டும்மென்றால்
எதையும் சந்தேகத்துடனே துவக்க
வேண்டும்.

29 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | பிரசாந்தி அருள்தாசன் |
| பதிப்பு: | Canyon Press Inc. |

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்வித்தரத்தின் நிலை

## நாடும் நடப்பும் - 08



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

எமது கல்வித் தரத்தை பரீட்சைகளே நிர்ணயம் செய்கின்றது. பரீட்சைகள் என்பவை மாணவர் கொண்டுள்ள அறிவின் பெறுமானங்களைத் தீர்மானிப்பதாக உள்ளது. இப்போதெல்லாம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒவ்வொரு பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின்போதும் இது பேசு பொருளாகிவிட்டது. வடக்கு மாகாணம் கல்வியில் அண்மைக் காலமாக இறுதி இடங்களில் நிற்கும் நிலை காணப்படுகின்றது. தவறுகளிலிருந்து பாடம் கற்காத எந்தச் சமூகமும் முன்னேற்றம் காணமாட்டாது என்பதற்கு நாம் முன்னுதாரணமாக இருக்கக் கூடாது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் ( O/L ) (க.பொ.த.பரீட்சையில்) முதலாவது தடவை தோற்றிய மாணவர்களது விபரம் தொடர்பாக நோக்கின், 2011ஆம் ஆண்டு, வடமாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றிய மாணவர் 18021. க.பொ.த. உயர்தரத்தில் கற்கத் தகுதி பெற்ற மாணவர் 54.26%. இதேபோன்று கிழக்கு மாகாணதில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்குத் தோற்றிய மாணவர் 20848. க.பொ.தா. உயர்தரத்தில் கற்கத் தகுதி பெற்ற மாணவர் 56.38%. 2012ஆம் ஆண்டு வடமாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றிய மாணவர்கள் 15720. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் 59.99%. கிழக்கு மாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றியோர் 20,701 மாணவர். உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் 62.20% ஆகும். 2013ஆம் ஆண்டு வடமாகாணதில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றிய மாணவர் 15,280. உயர் தரம் கற்கத் தகுதி பெற்றோர் 65.33%. கிழக்கு மாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றிய மாணவர் 20,525. உயர் தரம் கற்கத் தகுதி பெற்றோர் 65.43% ஆகும். 2014ஆம் ஆண்டு வடமாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றிய மாணவர் 15,266. உயர் தரம் கற்கத் தகுதியுடையோர் 64.19% ஆகும். கிழக்கு மாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றிய மாணவர் 20,164. உயர் தரத்துக்குத் தகுதி பெற்றோர் 66.71% ஆகும். தமிழர் செறிந்து வாழும் வட, கிழக்கு மாகாணங்களில் போருக்குப் பின்னர் தேசிய ரீதியான பெறுபேறுகளுக்கு குறைவாகவே உயர் தரத்துக்கு தகுதியானோர் காணப்பட்டனர். பொதுவாக இந்தப் பிரதேசங்களில் கல்வி அடைவு குறைவாக இருந்தது. ஏனைய மாகாணங்களுடன் பெறுபேறுகளை ஒப்பு நோக்கும் போது மிகப் பெரும் பின்னடைவுகளைக் காணமுடிகின்றது

சாதகமான அடைவு மட்டத்தை அடைவதற்கு, வகுப்பறைகள் வினைத் திறனாக்கப்பட வேண்டும், ஆசிரியர் மனப்பாங்கு - அர்ப்பணிப்பு - தலைமைத்துவத் தகுதி ஆழமாக நோக்கப்பட வேண்டியுள்ளது. கற்றல் கற்பித்தல் சாதனங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும், ஆசிரியர் மதிக்கப்பட வேண்டும், அரசியல் தலையீடுகள் அற்ற முறையில் அதிபர், ஆசிரியர், மாணவர் பிரச்சனைகள் மனிதாபிமான அடிப்படையில் அணுகப்பட வேண்டும்.

2015ஆம் ஆண்டு வடமாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றியோர் 17,752. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் 60.38%. கிழக்கு மாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றியோர் 21,693. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் 63.54%. 2016 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றியோர் 17,413. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் 60.66%. கிழக்கு மாகாணத்தில் ஐந்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தோற்றியோர் 23,744. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் 61.56% ஆகும்.

கல்வி வலய அடிப்படையில் 2016 முதலாவது தடவை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களது பெறுபேற்றை நோக்கின்

| கல்வி வலயம் | உயர்தரத்துக்கு தகுதியானோர் | சகலபாடங்களிலும் சித்திபெறாதோர் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 119 - (3.56%) | 113 - (3.38%). |
| வடமராட்சி | 49 - (3.04%) | 52 - (3.23%). |
| வவுனியா | 34 - (1.65%) | 57 - (2.77%) |
| மன்னார் | 18 - (1.34%) | 15 - (1.1%) |
| மட்டக்களப்பு | 60 - (2.53%) | 112 - (4.74%) |
| திருகோணமலை | 56 - (3.15%) | 53 - (2.99%) |
| தீவகம் | 00 - | 38 - (6.14%) |
| தென்மராட்சி | 12 - (1.20%) | 72 - (7.17%) |
| வலிகாமம் | 18 - (0.63%) | 165 - (5.78%) |
| கிளிநொச்சி | 07 - (0.33%) | 170 - (8.08%) |
| முல்லைத்தீவு | 07 - (0.60%) | 53 - (4.58%) |

2015ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றிய மாணவர்களது பெறுபேறு மாவட்ட அடிப்படையில்

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PEI மாகாணத்தில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

King, 2019 ஏப்ரல் 23இல் நடைபெற்ற தேர்தலை எதிர்வு கொண்டார். இம்முறை தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து PEI மக்களிடையே நடந்த கருத்துக் கணிப்பில் பழமைவாதக்கட்சி தொடர்ந்து இரண்டாம் இடத்தில் இருந்து வந்தது.

2018ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற Joe Byrneஇன் தலைமையில் புதிய ஜனநாயகக் கட்சியினர் 2019 ஏப்ரல் 23இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்வு கொண்டனர். PEIஇன் சரித்திரத் திலேயே 1996ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலேயே புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் Dr. Herb Dickieson முதல் தடவையாகச் சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரே PEIஇன் சட்டமன்றத்தில் முதன்முறையாகத் தெரிவு செய்யப்பட்ட மூன்றாவது கட்சியை சேர்ந்தவர் ஆவார். அதற்கு முன்னரும் சரி, அதற்குப் பின்னரும் சரி PEI சட்ட மன்றத்திற்கு வேறு ஒரு புதிய ஜனநாயகக் கட்சி சட்டமன்ற உறுப்பினரும் தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இம்முறை தேர்தல் அறிவிக்கப் பட்ட நாளில் இருந்து PEI மக்களிடையே நடந்த கருத்துக்கணிப்பில் புதிய ஜனநாயகக்கட்சி தொடர்ந்து நான்காம் இடத்தில் இருந்து வந்தது.

இம்முறை தேர்தல் நடைபெற இருந்த 2019 ஏப்ரல் 23ஆம் திகதிக்கு ஒருசில நாட்களின் முன்னர் ஒரு தொகுதியில் பசுமைக்கட்சியின் சார்பில் வேட்பாளராக இருந்தவர் படகு விபத்து ஒன்றில் உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்தத் தொகுதியின் தேர்தல் பிற்போடப்பட்டது. இதனால் PEI சட்ட மன்றத்திற்கான 27 தொகுதிகளில் 26இல் மட்டுமே ஏப்ரல் 23இல் தேர்தல் நடைபெற்றது.




தேர்தல் முடிவுகளின்படி PEI மாகாணம் முழுவதும் 36.5% வாக்குகளைப் பெற்ற பழமைவாதக் கட்சி 12 ஆசனங்களைப் பெற்றது. 30.6% வாக்குகளைப் பெற்ற பசுமைக் கட்சி 8 ஆசனங்களை பெற்றது. 29.5% வாக்குகளைப் பெற்ற லிபரல் கட்சி 6 ஆசனங்களைப் பெற்றது. 3.0% வாக்குகளை பெற்ற புதிய ஜனநாயகக் கட்சி எந்த ஆசனத்தையும் பெறவில்லை.

ஒரு கட்சி பெரும்பான்மை அரசை அமைக்க 14 ஆசனங்களைப் பெற வேண்டும். எந்தவொரு கட்சியும் 14 ஆசனங்களைப் பெறவில்லை. இதனால் 12 ஆசனங்களைப் பெற்ற பழமைவாதக் கட்சி சிறுபான்மை அரசை அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் தலைவரான Dennis King, பிரின்ஸ் எட்வேட் தீவு மாகாணத்தின் சட்ட மன்றத்தில் 33ஆவது முதல்வராகப் பதவி ஏற்பார். பசுமைக் கட்சியை சேர்ந்த Peter Bevan-Baker எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி ஏற்பார்.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் லிபரல் கட்சியின் தலைவரும் முன்னாள் முதல் வருமான Wade MacLauchlan தனது தொகுதியில் வெற்றி பெறவில்லை. PEI மாகாணத்தில் ஏப்ரல் 23இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பலவிதத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்றது.

கனடாவிலும் சரி, வட அமெரிக்காவிலும் சரி பசுமைக்கட்சி உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சி அந்தஸ்தை எந்தவொரு மத்திய, மாகாண, மாநில அரச மட்டத்தில் பெறுவது இதுவே முதன்முறையாகும்.

1890ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதற்தடவையாக PEI மக்கள் சிறுபான்மை அரசு ஒன்றினைத் தெரிவு செய்துள்ளனர். PEIஇன் வரலாற்றில் லிபரல் கட்சி மற்றும் பழமைவாதக் கட்சி தவிர்ந்த மூன்றாவது கட்சி ஒன்றுக்குக் குறிப்பிடத்தக்க அளவு (30%இற்குக் கூடிய) மக்கள் வாக்களித்தது இம்முறைதான்.

தற்போது நடைபெற்ற தேர்தலில் PEI மக்கள் மாகாணம் தழுவிய கருத்துக் கணிப்பு ஒன்றுக்குத் தமது கருத்தைத் தெரிவித்திருந்தனர். அவர்களுக்கு இனி வரும் சட்டமன்றத் தேர்தல் நடத்தும் முறையை தற்போதைய தொகுதி வாரியாக வெற்றி பெறுவோரைத் தெரிவு செய்யும் FPTP தேர்தல் முறையில் இருந்து MMP எனப்படும் கலப்பு உறுப்பினர் விகிதாசார வாக்களிப்பு முறைக்கு (Mixed Member Proportional) மாற்ற விரும்பமா? எனக் கேட்கப்பட்டிருந்தது.

இந்த கருத்துக்கணிப்பில் பெரும்பான்மை மக்கள் மாகாணம் முழுவதும் ஆதரிப்பது டன் 60%ஆன தொகுதிகளிலும் (17) ஆதரிக்கப்பட்டாலே இக்கருத்துக்கணிப்பில் கேட்கப்பட்ட கேள்வி வெற்றி பெற்றதாகக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கருத்துக் கணிப்பின் முடிவின்படி மாகாணம் தழுவிய வாக்காளரின் 49% MMP முறைக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். அதேவேளை 12 தொகுதிகள் மட்டுமே MMP முறைக்கு ஆதரவு தெரிவித்தன. இதனால் தொடர்ந்தும் FPTP தேர்தல் முறையே PEI மாகாணத் தேர்தல் நடைமுறையில் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

TUTORING
Math / Science / English
Over 10 years of Experience (M.Sc., Mathematics)
University Math: (www.paramjyothiacademy.ca)
.CALCULUS 1,2 &3
.LINEAR ALGEBRA
Universtiy courses for:
York,Ryerson,UOFT,UOIT,
Waterloo and Mcmaster
*Grade 9:MPM-1D *Grade 10:MPM-2D
*Grade 11:MCR-3u(Functions)
*Grade 12:MHF-4U(Advanced Functions)
*Grade 12:MCV-4U(Calculus and Vectors)
University Courses:Calculus 1,2 &3 and Linear Algebra
* Learn from a person who holds masters degree in Mathematics(M.Sc,Maths)
* Limited students per session
GR.9/10:Science(SNC1D)/SNC2D
GR.11/12:Physics(SPH3U)/SPH4U
Chemistry(SCH3U)/SCH4U
Call today to find out more!
Δ Grade 1-8: Math/Science/English
Δ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
Δ Principles of Mathematics. Δ Calculus. Δ Vectors.
Δ Functions. Δ Advanced Functions.
Δ University: Calculus-1, Calculus-2, Calculus -3
PARAM JYOTHI ACADEMY
7393 Markham Road . Door #90
647.426.6329

# சீர்குலையும்...

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசாங்கத்திற்கு எதிராகத் தொழிற் சங்கங்கள் தொடர்ந்து நடத்திவரும் போராட்டங்களும் இனி முடங்கிப்போகும். விலைவாசி உயர்வு போன்ற மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கும் பயங்கரவாதத் தாக்குதலைக் காரணம் காட்டி தப்பிக்கொள்ளலாம்.

இன்று நாடு எதிர்கொண்டுள்ள நிலைமைக்கு அனைத்து தரப்பு மக்களும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. படையினர் மேற் கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கை களுக்கு தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றே தமிழ் அரசியல் வாதிகளும் தற்போது வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். ஆனால், மக்களின் இயல்பு வாழ்க்கை மோசமடையாத வகையில், மக்களை



துன்புறுத்தாத வகையில் பாதுகாப்புத் தரப்பினர் அவர்களின் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். அரசியல் வாதிகளும் இவ்விடயத்தில் கண் காணிப்புடன் இருக்க வேண்டும்.

யோகா சோதிடம்
● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருந்துளை ஒன்றின் முதலாவது அரிய படம்



- கனி -
ptons@hotmail.ca
416.261.1348



மேலே இருப்பது அறிவியலாளர்களை மிகவும் உற்சாகப்படுத்திய ஓரரிய படம். ஏப்பிரல் 10இல் இப்படத்தினை வெளியிட்டு உலகினரையே வியக்க வைத்தனர். எங்களது உழுந்து வடைக்கா இப்படியான பெரிய பீடிகை போடுகிறாய்? எனக் கேட்கிறீர்களா? இல்லை! இது வடையுமல்ல, டோநட்டும் அல்ல. பல அறிவியலாளர்கள் பல வருடங்கள் ஒன்றிணைந்து வேலை செய்து ஏப்ரல் 10, 2019இல் வெளியிட்ட எம்87 என்ற கருந்துளையின் படம். இதன் முக்கியம் என்னவென்றால், இதுதான் கருந்துளை ஒன்றின் முதலாவது (புகைப்)படம்.

ஆம், அறிவியலாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து மனித மூளையின் வலிமையை இப்படமாகக் வெளிக் காட்டியுள்ளனர். 200க்கும் மேற்பட்ட அறிவியலாளர்கள் சேர்ந்து செய்த முயற்சிய பயன் பற்றியும் அதன் பின்னால் உள்ள விடயங்கள் பற்றியுமே விளம்பரம் பத்திரிகை ஊடாகத் தருகிறேன்.

முதலிற் கருந்துளை எம்87 பற்றியக் கூறுகிறேன். ஏம்87 என்பது புவியில் இருந்து 55 மில்லியன் ஒளியாண்டு தொலைவில் உள்ள எம்87 என்ற பென்னம் பெரிய கலக்சி ஒன்றின் மையத்தில் உள்ள மிகவும் பெரிய கருந்துளை. எங்களின் ஞாயிற்றுத் தொகுதி அளவு பருமனான அக் கருந்துளையின் திணிவோ, எங்களின் கதிரவனின் (சூரியனின்) திணிவினைப் போல் 6.5 பில்லியன் மடங்காகும். பில்லியன் என்பது ஒன்றுடன் 9 பூச்சியங்கள் ($10^9$) கொண்ட எண். அவ்வளவு பெரும் திணிவானதுதான் கருந்துளை எம்87. கலக்சி என்பது விண்வெளியிற் பல பில்லியன் எண்ணிக்கையிலான விண்மீன்களையும் பிரமாண்டமான நெபுலாக்களையும் (தூசுக் கூட்டங்கள்) கொண்ட ஒரு தொகுதி. எங்களின் கதிரவன் பால்வெளி என்கிற கலக்சியில் உள்ள ஒரு விண்மீன் ஆகும். திணிவு என்பதைப் இலகுவாகப் பாரம் என எண்ணிக் கொள்ளலாம். செக்கனுக்கு முந்நூறாயிரம் (300,000) கிலோமீற்றர் தூரம் செல்லும் ஒளி (வெளிச்சம்) ஒரு வருடத்தில் செல்லும் பெருந் தூரத்தைத்தான் ஒளியாண்டு என்கின்றர்.

எம்87 இருக்கும் தூரம் 55 மில்லியன் ஒளியாண்டு, ம்,ம்,ம், மிகப் பெரிய தூரம்தான் இல்லையா! ஆனால் ஒரு விசித்திரத்தைப் பாருங்கள். எங்களது அறிந்து கொள்ளப்படக் கூடிய 93 பில்லியன் ஒளியாண்டு விட்டப் பேரண்டத்தில் இந்த 55 மில்லியன் ஒளியாண்டு தூரம் என்பது ஒன்றும் அப்படிப் பெரிய தூரமில்லை. பேரண்டத்துள், பால்வெளி கலக்சியும் எம்87 கலக்சியும் அருகருகில் இருப்பவை போன்றன. இன்னமும், 2.5 மில்லியன் ஒளியாண்டு தூரத்தில் உள்ள அன்றொமேடா போன்ற வேறு சில கலக்சிகளும் எங்களின் கலக்சியிற்கு அருகில் உள்ளன. இப்படியாகப் பேரண்டத்துள் உள்ள சில கலக்சிகள் தங்களின் பொதுஈர்ப்பினால் ஒன்றிணைந்து ஓர் உட்கட்டமைப்புக் கலக்சித் தொகுதி (Local Galaxy Group) ஒன்றினை உருவாக்கும். இதனை கலக்சிக் கொத்தணி என்பர். எங்களின் பேரண்டம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான கலக்சிக் கொத்தணிகள் உள்ளன.

கருந்துளை என்றால் என்னவென்று நினைவுபடுத்திக் கொள்வோம். ஆம். கருந்துளை என்ற பதத்தின் அடிப்படைக் காரணியாக இருப்பது ஈர்ப்பாகும். நியூட்டனின் ஈர்ப்புவிதியாயினும் சரி, ஐன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்துவமாயினும் சரி, பொருட்கள் ஒவ்வொன்றும் மற்றைய பொருட்களை ஈர்க்கின்றன என்ற உண்மையைக் கூறுகின்றன. இந்த ஈர்க்கும் வல்லமையானது பொருளின் திணிவிலும் தங்கியுள்ளது. பெரிய பொருட்களின் ஈர்ப்புப் பெரியதாக அமைந்து விடுவதனால் பெரிய பொருட்கள் தம்முடன் மற்றப் பொருட்களை இழுத்துக் கொள்ளுகின்றன. இதனையும் இலகுவாக விளங்கிடுவோம். கதிரவன் எங்களின் புவியை இழுத்து வைத்துத் தன்னைச் சுற்ற வைக்கிறது. புவியோ தனது பாரம் காரணமாகத் தன்னை விடப் பாரம் குறைந்த சந்திரனை இழுத்து வைத்துத் தன்னைச் சுற்ற வைக்கிறது.

**கருந்துளைகள்** - கல் ஒன்றை (அல்லது வேறு எந்தப்

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)

டிராஃபிக் குமார் எனும் வினோத் குமார் Precision Paralegal LLP எனும் முன்னணி நிறுவனத்துடன் இணைகிறார். இனி Ontario மட்டும் இல்லாது Alberta சட்டப் பிரச்சனைகளுக்கும் நாங்கள் தீர்வு வழங்குவோம்.
Traffic Ticket மட்டும் இல்லாது Small Claims Court ($ 25,000 கீழ் இருக்கும் சட்டப் பிரச்சனைகள்), Landlord tenant tribunal ( வீட்டில் வாடகைக்கு இருப்பவர்களுடன் சட்டப் பிரச்சனைகள்) போன்ற விடயங்களுக்கு சட்டத் தீர்வு கொண்டு வருவோம்.

22 வருடங்களாக Ontario மற்றும் Alberta வில் செயல்படும் எமது நிறுவனத்தில் நாங்கள் கையாளும் வழக்குகள்

ஒப்பந்தக்காரர் மற்றும் கட்டிடவேலை தகராறு
Construction/Contracts Dispute

செலுத்தப் படாத தங்களுக்கு வருமதியான பணம்
Unpaid receivables

TOW Truck ஓட்டுனருடன் சட்டப் பிரச்சனை
Repairs and Storage Liens Act

டிராஃபிக் டிக்கெட் சட்டப் பிரச்சனை
POA Offences and Traffic Ticket



டிராஃபிக் குமார் எனும்
வினோத் குமார்
அழையுங்கள்:
647-667-6034
1-866-541-3966

Precision
PARALEGAL SERVICES LLP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல் நீக்கும் இயற்கை – 48



– அகணி –
authorakani@gmail.com

இன்று நாங்கள் பொதுவாக உண்ணும் உணவுகள் சிலவற்றில் உள்ள மருத்துவப் பயன்பாடுகள் பற்றிக் கவனிப்போம்.

தினையை மாவாகவும் கஞ்சியாகவும் உண்ணலாம். தினை உண்பதால் சிறுநீர் அதிகமாக வெளியேறும். உடலில் உள்ள தசைகள் இறுகச் செய்யும். உடலில் பசி ஏற்படச் செய்யும். தினை மாவை வறுத்து தேனுடன் சாப்பிடக் களைப்பு நீங்கும்.

வரகு உடலில் உள்ள பித்தத்தை வெளியேற்றும். ஆனால் இதில் அதிகளவில் கொழுப்புச்சக்தி உண்டு. சோளம் அதிக சத்துடையது. சோளத்தை சாப்பிடுவதால் உடல் பலம் பெறும்.

பார்லி சாப்பிட சிறுநீர் அதிக அளவில் வெளியேறும். நீர்த்தாகம் குறையும். குடலின் அழற்சித் தன்மையை நீக்கும். சமிபாடு வலுவடையும். பார்லியில் கஞ்சி செய்து தொண்டைப்புண், சிறுநீர் எரிவு, நாவறட்சி பிரச்சினைகளுக்குத் தீர்வாக அருந்தலாம்.

பயறும் மிகவும் சத்துக் கொண்ட உணவாகும். தோலில் உள்ள எண்ணெய்த்தன்மை குறையப் பயற்றம் மாவை உடலில் தேய்த்துக் குளிக்கலாம். அதிகமாக பயற்றை உட்கொண்டால் வாயுத் தன்மை ஏற்பட்டு விடும்.

உளுந்தையும், எள்ளையும் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. பயற்றங் கஞ்சி, உழுத்தங்கஞ்சி ஆகியவற்றைச் சாப்பிடுவதால் ஆண்களுக்கு வீரிய சக்தியும், தாய்மாருக்கு பால் பெருக்கமும் ஏற்படும். பெண்களின் கருப்பைக்கு நல்ல பலமும், வளர்ச்சியும் உளுந்தால் கிடைக்கும். எள்ளு உடலில் உள்ள அழற்சித்தன்மையைக் குறைக்கும். எள்ளு உடலில் உள்ள இரத்தக்கட்டைக் கரைக்கும். எள்ளினால் கண்ணின் ஆரோக்கியம் சிறப்பாகும்.

கொள்ளு உடலில் உள்ள சூட்டுத் தன்மையைச் சீராகப் பேணவல்லது. எளிதில் சளியால் சிரமப்படுபவர்களுக்கு கொள்ளு மிகவும் நல்லது. கொள்ளும் அரிசியும் சேர்த்துக் கஞ்சி செய்து குடித்து வந்தால் உடலில் சுறுசுறுப்பு, வீரிய விருத்தி, உடற்பலம் ஆகியவை ஏற்படும்.

கரிசலாங்கண்ணிக் கீரை இரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. கண் பார்வையை மேம்படச் செய்கிறது. உடலுக்கு உரத்தைக் கொடுக்கிறது. மண்ணீரலில் வீக்கம் ஏற்பட்டால் கரிசலாங்கண்ணிக்கீரை அதற்கு மருந்தாகும்.

குப்பை மேனி இருமலைக் கட்டுப்படுத்தும். விசக்கடி, ரத்தமூலம், வாத நோய், குடற்புழுக்கள், மூட்டுவலி, தலைவலி போன்ற நோய்களைக் குணப்படுத்துகிறது.

கொத்தமல்லிக் கீரை இரைப்பையில் எரிவைத் தணிக்கும். குடல் வறட்சியை போக்கும். கொத்தமல்லிக் கீரையுடன் நெய், தேன் சேர்த்துச் சாப்பிட வயிற்றுக் கடுப்புக் குறையும். வாந்தி குறையும். உணவுச் சத்தை உடலில் சேரச் செய்யும்.

மல்லியையும், சோம்பையும் சேர்த்து இடித்து அதில் இருந்து நாளாந்தம் சிறிதளவு எடுத்து வாயில்போட்டு மென்று சாப்பிட்டு வந்தால் வாயின் துர்நாற்றம், ஏப்பம் போன்றவை நீங்கும்.



செம்பருத்தியின் வேர், இலை, மொட்டு, பூ எல்லாவற்றிலும் மருத்துவத்தன்மைகள் உள்ளன. இலைகள் தசையில் ஏற்படும் வலியைக் குறைக்கும். இலையிலிருந்து பெறப்படும் சாறு தலைமுடியின் ஆரோக்கியத்தைக் கூட்டும். காலையில் பூவிதழ்களைப் பறித்து மென்று தின்று நீரைப் பருகி வந்தால் வயிற்றுப் புண் குணமாகும். இந்தப் பூக்களால் கர்ப்பக் கோளாறுகளும், இதயக் கோளாறுகளும் நீங்கும். செம்பருத்திப் பூவில் குடிநீர் செய்து காய்ச்சல் நேரத்தில் குடித்தால் காய்ச்சல் குறையும்.

தாமரையின் பூ, தண்டு, விதை, இலை ஆகியவற்றில் எல்லாம் மருத்துவக் குணங்கள் உள்ளன. தாமரை மலர்களின் இதழ்களைக் காயவைத்து கசாயம் சேர்த்து அருந்தி வந்தால் இதயநோய் குணமாகும். தாமரை மலரின் விதைகளை சாப்பிட்டால் இதயம் பலமடையும்.

துளசி எங்கள் உடலின் வியர்வையை அதிகமாகப் பெருக்கச் செய்யும் தன்மை கொண்டது. துளசிச் சாறு சரும நோய்களுக்குச் சிறந்த நிவாரணியாகும்.



துளசியை இடித்து சாறாக்கி எலுமிச்சைச் சாறு கலந்து தலைக்குப் பூசி சிறிது நேரம் கழித்து முழுகி வந்தால் தலையில் உள்ள பொடுகு நீங்கும். துளசிச் சாற்றுடன் கற்பூரம் கலந்து பூசினால் பல் வலிக்கு மருந்தாகும்.

துளசி இலை நரம்புகளின் பலத்தைக் கூட்டும், நினைவாற்றலுக்கு உகந்தது. துளசிமணி மாலை அணிவதாலும் மருத்துவப் பயன்பாடு உள்ளதாகக் கூறப்படுகிறது. துளசி இலை எளிமையான கருத்தடைச் சாதனமாகும். நாளாந்தம் காலையில் வெறும் வயிற்றில் ஆணும், பெண்ணும் 15 கிராம் துளசி இலைத் தூள் சாப்பிட்டு வந்தால் ஆறு மாதத்திற்கு கருத்தரிக்காது. தூதுவளை இலை உடலுக்கு உரத்தைக் கொடுக்கும். காமம் பெருக்கச் செய்யும். பசியைத் தூண்டும். மலச்சிக்கலை நீக்கும்.

பொன்னாங்கண்ணிக் கீரை உடலைத் தேற வைக்கும். கண் நோய்கள், மூல நோய், கல்லீரல் நோய்கள், மண்ணீரல் நோய்கள் ஆகியவற்றிற்கு மருந்தாகச் சாப்பிடுவர். இந்தக் கீரையை மிளகு, உப்பு சேர்த்துச் சாப்பிட எடை குறையும். துவரம் பருப்பும், நெய்யும் சேர்த்துச் சாப்பிட்டால் எடை கூடும்.

வல்லாரை இலையை 21 நாட்களுக்கு நாள்தோறும் ஒவ்வொரு இலை அதிகமாகச் சாப்பிட்டு உப்பில்லாத கஞ்சியை குடித்து வர மூளை பலமடையும். நினைவாற்றலுக்கு உகந்தது.

வெந்தயக்கீரையை அரைத்து நெய் சேர்த்து உணவின் ஆரம்பத்தில் சாப்பிட தொண்டைப் புண்கள் குணமாகும். வாய்ப்புண்களும் குணமாகும். வெந்தயக் கீரையோடு பாசிப்பருப்பைச் சேர்த்து உண்பதால் கல்லீரல் பலப்படுகிறது. இரத்த விருத்தி ஏற்படுகிறது.

வெற்றிலையை எண்ணெய் தடவி மார்பில் போட உடலில் உள்ள கபத்தன்மை குறையும். தலை பாரமாக இருக்கும் பொழுது வெற்றிலைச் சாற்றில் 2 அல்லது 3 துளிகளை மூக்கில் விடலாம். காது வலி ஏற்படும்பொழுது காதுக்குள் விடலாம்.

வேப்பமரப் பூ மட்டும் உணவாகப் பயன்படுகிறது. வேப்ப மரத்தின் ஏனைய பாகங்கள் மருந்தாகப் பயன்படுகின்றன. கசப்புச் சுவை கொண்ட வேப்பம் பூ பித்தப் பிரச்சினைகளைத் தடுக்கும். வயிற்றில் காணப்படும் கிருமிகளைக் கொல்லும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப் பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோ சனையை மேற்கொள்ளுங்கள் என்று வலி யுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற் கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

**Food Handler Certification**
Are you serving in a restaurant? or PSW or ECA
உங்களுக்கு Food handler certificate தேவைப்படலாம்.
Call experienced Instructor.
கலா: 647.624.2314/kalasarvaa@gmail.com
( Group classes conducted at MARKAM & STEELS and at your location.)

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat

Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

**Presents**

# GeniusMath Seminar

## for G7 & G8 June 1st 2019

## Register @ www. GTAmath.com

*GeniusMath program helps students by starting the foundation in their early years of education. By enrolling in this program students start building high level of Math Skills that would help them achieve great success in high school and university.*

## BENEFITS OF GENIUSMATH PROGRAM

- Target on Grade 8 Math Award, Score more than 90% from Gr8 to Gr12.
- Specialized high school training workshops for IB, TOPS, Enriched programs and AP
- Attain University scholarships
- Be a topper in University with high marks in math courses and contests
- Weekend programs to suit parents' commute needs
- Work ahead of school syllabus so there is no overlap at school
- We can guarantee your best math scores, so you can concentrate on other subjects at school

IF YOU FALL UNDR ANY OF THE BELOW CATEGORIES AND WOULD LIKE TO BENEFIT FROM THIS PROGRAM. WE ENCOURAGE YOU TO REGISTER ASAP!!!

- **Students graduating Grade 8 in June 2019**
- **Outstanding Grade 7 students**
- **Students requiring extra help in math currently in/ done Grade 9**

## பிரம்மாண்டமான கணித தகவந்திரள்:

29 வருடகால அனுபவ கற்பித்தலை மையமாகக்கொண்ட விசேட கணிதப்பயிற்சி பற்றிய சிறந்த ஆய்வுத்தகவல்கள் தரும் பயிலரங்கம்

***" Come on in and have an opportunity to meet OUR successful students and their parents "***

Venue: 1160 Tapscott Rd., Unit 2, 3 Toronto, ON M1X 1E9 (TET Entertainment Television)

**416-666-5515**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன."

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை



- கனி -
ptons@hotmail.ca
416.261.1348

'தமிழரின் பரிமாணங்களைப் பல் கோணங்களிலும் அலசப் போகும் இப் பகுதியைத் தவற விட்டு விடாதீர்கள்!' மே 01. இந்நாளின் சிறப்பை நாமெல்லாம் நன்கு அறிந்தவர்கள்தானே, தொழிலாளர் தினமல்லவா! இதுபற்றி நான் அதிகம் உங்களுக்குக் கூறத் தேவையில்லை. எனவே எங்கள் பாதைக்குள் செல்வோம்.

கீழடியின் ஐந்தாம் கட்ட ஆகழ்வுகள் நடைபெறுமா தெரியாது. இன்னமும் ஆரம்பமாகவில்லை என்றே தெரிகிறது. ஆனால் என் போன்ற சிலருக்கு கீழடி கிளறித்தந்த இன்னொரு விடயம் பற்றிப் பார்ப்போம். கடந்த ஓரிரு மாதங்களாக இந்தியத் தொல்லியலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பரபரப்பான விடயம் பற்றி நீங்கள் கூட அறிந்திருக்கலாம். தென்னிந்தியாவின் ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இரண்டு பொருட்களின் வயதினை புளோரிடாவின் பீற்றா ஆய்வகம் காபன் கதிர்வீச்சு முறையில் ஆய்வு செய்து கூறியுள்ளது. ஒன்று கி.மு. 905 ஆகவும், மற்றது கி.மு. 679 ஆகவும் கூறியிருந்தனர். இந்திய வரலாற்றினையே திருப்பிப் பார்க்க, திருப்பி எழுதவைக்கக் கூடியதான இம்முடிவு ஏப்பரல் 11இல் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இப் போது அந்த வகையில் முக்கியத்துவம் அடைந்ததுதான் ஆதிச்சநல்லூர்.

**ஆதிச்சநல்லூர்** - ஆதிச்சநல்லூரில் பலகாலத்திற்கு முன்னரே அகழ்வாய்வுகள் நடந்திருக்கின்றன. அவற்றின் ஊடாக அரிய பல விடயங்கள் வெளிக் கொண்டு வரப்பட்டு இரகசியப்படுத்தப்பட்டுள்ளன. தமிழரில் பலருக்கு இது தெரிந்திருக்க வில்லை. அவர்களினது சிந்தனைகள் எல்லாம் வெவ்வேறு திசைகளிற் சிதறிக் கிடந்ததால் ஆதிச்சநல்லூரும் இன்னும் வேறு பல தமிழர் தொன்மையைக் கூறும் விடயங்களும் மறைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் கீழடி, அவ்விடயங்களைச் சிறிதளவில் வெளியே கொண்டு வந்தது என்பது ஓரளவுக்கு ஆறுதலளிக்கிறது. அந்த வகையிற் சிறிய அளவில் வெளியே வந்த ஆதிச்சநல்லூரின் சுவையான ஆய்வுகள் பற்றியும் சிறிது தெரிந்து கொள்வோம்.





ஆதிச்சநல்லூர் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது. தூத்துக்குடி அந்நாளின் முத்துக்களுக்குப் பெயர் போன இடமென்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே. இதற்குக் கிட்டவாகத் 'தாமிரபரணி' என்னும் 128 கிலோமீற்றர் நீளமான சிற்றாறும் ஓடுகின்றது. இதனை முன்னாளில் 'பொரணை' ஆறு என்றனராம். இது என்பது செப்பு உலோகத்திற்கான எங்களின் பழைய பெயர். இந்த ஆறு பாயும் இடத்தின் மண் பழுப்பான சென்னிறத் தன்மையதாக இருப்பதால் இது தாமிரபரணி என அழைக்கப்படுகிறது. தாமிரபரணி என்ற பெயர் இலங்கையிடம் இருந்து 'கடன்' பெறப்பட்டது என்பர் சிலர். ஏனெனில் இலங்கை, கி.மு. 4ஆம் நூற்றாண்டுகளில் தாமிரபரணி என அழைக்கப்பட்டதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றனர். குமரிக் கண்டம், கடல்கோள் என்பவற்றைத் தாமிர பரணி என்கிற இலங்கையினது பழைய பெயரையும் பொரணையின் தற்போதய பெயரையும் இணைத்துப் பார்த்து உண்மையெனக் கூறுபவர் உளர். இவ்வளவு சுற்றுப் புறச் சிறப்புகள் உள்ள ஆதிச்சநல்லூர் அந்நாளின் பாண்டியரின் கொற்கை பட்டினத்தில் இருந்து 15 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இன்று அரசினாற் பாதுகாக்கப்பட்ட இடமாகக் கூறப்பட்டுள்ள இவ்விடத்தில் நடந்த அகழ்வாய்வுகள் பற்றித் தெரிந்து கொள்வோம்.

ஆதிச்சநல்லூரை முதன்முதலில் ஜெர்மனியின் அகழ்வாய்வாளர் டாக்டர் ஜகர் (Dr. Jagor) என்பவர் 1876இல் அறிமுகப்படுத்துகிறார். இவரது ஆய்வுகளின் முடிவுகளினால் ஈர்க்கப்பட்டு இவரைத் தொடர்ந்து பிரித்தானிய அகழ்வாய்வாளர் அலெக்சாந்தர் றே. பிரான்சின் வரலாற்றாசிரியர் லூயிஸ் லபிக்கியு என்பவர்கள் 1889க்கும் 1905ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலங்களில் ஆதிச்சநல்லூரின் மண்ணை தோண்டிப் பார்க்கின்றனர். அதன் பின்னராக 2004_2006ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்திய அகழ்வாய்வாளர்கள் T. குருமூர்த்தி என்பவரின் தலைமையில் ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வுகள் செய்தனர். இவ்வளவுதான் கதைச் சுருக்கம். இக்கதைச் சுருக்கத்தில் இருந்து வெளிப்பட்ட சுவாரசியமான உண்மைகளைத் தெரிந்து கொள்வோம்.

ஜேர்மனியரான ஜகர் ஆதிச்சநல்லூரை தனது அகழ்வுக்காக ஏன் தெரிந்தெடுத்தார் என்பதும் பெரிதாகத் தெரியாது. ஆனால் இந்தோ-ஐரோப்பியத் தொடர்பினை உறுதிப்படுத்துவதே அவரது உண்மையான நோக்கம் என்கிறார்கள். அகழ்வுகளின்போது ஆச்சரியமான முடிவுகள் அவருக்குக் கிடைத்திருந்த போதிலும் உண்மையில் அது அவருக்குக் 'கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது' போலாகி விட்டது. ஆதிச்சநல்லூரின் மண்மேட்டுக்குள் ஐம்பதுக்கும் மேற்பட்ட 'தாழி'களை ஜகர் அகழ்ந்தெடுத்தார். மண்ணைச் சுட்டு ஆக்கப்பட்ட சிவப்பு, கறுப்பு நிறங்களில் இருந்த இத்தாழிகள் சிலவற்றில் எழுத்துகளும் இருந்தன. 'முதுமக்கள் தாழிகள்' எனப்படும் இவை 'ஈமத்தாழி'கள் எனச் சங்க இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.

டாக்டர் ஜகர் அகழ்ந்தெடுத்த தாழிகளுக்குள் மனிதரின் முழு உடம்புகளுக்குமான எலும்புகள் காணப்பட்டன. அவ்வெலும்புகளுடன் கூடவே மனிதர் பாவித்த பல பாவனைப் பொருட்களும் இருந்தன. இரும்பு, செப்பு, வெண்கலம் போன்றவற்றாலான ஆயுதங்களும் இருந்தன. சிறிய வாள், வேல், அம்பு போன்ற ஆயுதங்களைக் குறிப்பாகக் கூறலாம். இன்னமும் மட்பாண்டகள் சிலவும் அத்தாழிகளினுட் கிடந்தன. பல அளவுகளிலும் ஜகர் பெற்ற தாழிகளினுள் நெல்லரிசி, துணிகள் போன்றவற்றின் உக்கல் அடையாளங்களும் இருந்தன. விளக்குகள், விளக்குத் தண்டுகள் போன்றனவும் வைக்கப்பட்டு இருந்தன.



படம் ஆதிச்ச நல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழியொன்றை அதில் இருந்த எலும்புகள், பொருட்கள் என்பவற்றுடன் காட்டுகிறது.

டாக்டர் ஜகரின் கணிப்புப்படி, கி.மு. 600, 700 ஆண்டுளாவது பழமையான பொருட்களாக அவை இருந்தன. ஐம்பதுக்கும் அதிகமான தாழிகளில் நாலாயிரத்திற்கும் அதிகமான, தமிழரின் பழமைப் பொருட்களை தொல்பொருட்களாகப் பெற்ற ஜகருக்கு அவரது அடிப்படை நோக்கமான இந்தோ_ ஐரோப்பியத் தொடர்புக்கான தடயங்கள் எதுவுமே கிடைக்கவில்லை. ஆனால் அவரின் இம்முயற்சியினால், முதன் முதலாக இந்தியாவில், அதுவும் தமிழ் நாட்டில், உயர்ந்த நாகரிகப் பண்புடைய மனிதர் கி.மு. எழுநூறு ஆண்டுக்கு முன்னரே வாழ்ந்ததற்கான சான்றுகள் வெளிப்பட்டது. சிந்து சமவெளி நாகரிகத் தடங்கள் கூட அப்போது அறியப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் ஜகர் ஆதிச்சநல்லூரில் எடுத்தவை எல்லாவற்றையும் ஜெர்மனிக்குக் கொண்டுசென்று விட்டார். அப் பொருட்கள் எல்லாம் இன்று ஜெர்மனியின் சில அருங்காட்சியகங்களில் வைக்கப் பட்டுள்ளன. ஆனால் எவ்வெவ் அருங் காட்சியங்களில் உள்ளன என்பது சரியாகத் தெரியாது. அண்மையில் அவற்றினைப் பார்த்து ஆய்வுகள் செய்வதற்காக ஜெர்மனிக்குச் சென்றிருந்த சிலர், அவை எங்கே உள்ளன என்ற

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது...

09 ஆம் பக்கத்தொடர்ச்சி

| மாவட்டம் | உயர்தரத்துக்கு தகுதியானோர் | சகலபாடங்களிலும் சித்திபெறாதோர் |
|---|---|---|
| மன்னார் | 68.26% | 0.73% |
| வவுனியா | 64.01% | 1.66% |
| மட்டக்களப்பு | 63.63% | 2.38% |
| யாழ்ப்பாணம் | 56.59% | 4.21% |
| திருகோணமலை | 56.59% | 4.21% |
| முல்லைத்தீவு | 51.98% | 4.82% |
| கிளிநொச்சி | 46.44% | 8.64% |

## 2016 ஆம் ஆண்டு மாவட்ட அடிப்படையில்

| மாவட்டம் | உயர்தரத்துக்கு தகுதியானோர் | சகல பாடங்களிலும் சித்தி பெறாதோர் |
|---|---|---|
| மன்னார் | 69.71% | 3.51% |
| வவுனியா | 65.35% | 2.72% |
| மட்டக்களப்பு | 64.95% | 4.08% |
| யாழ்ப்பாணம் | 61.68% | 3.76% |
| திருகோணமலை | 57.22% | 4.88% |
| முல்லைத்தீவு | 56.22% | 4.99% |
| கிளிநொச்சி | 49.31% | 8.08% |

2017ஆம் ஆண்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலும், கிழக்கு மாகாணம் எட்டாவது இடத்திலும் உள்ளது. வடக்கு மாகாணத்தில் மாத்திரம் 623பேர் எல்லாப் பாடங்களிலும் சித்தி பெறத் தவறியுள்ளனர். யாழ். மாவட்டம் 2016ஆம் ஆண்டு 20ஆவது இடத்திலிருந்து 2017இல் 19ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. 2016இல் வடக்கு மாகாணத்தில் 10ஆயிரத்து 562பேர் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றனர். இது பரீட்சைக்கு தோற்றியோரில் 60.66%. 2017இல் வடக்கு மாகாணத்தில் 11ஆயிரத்து 901பேர் உயர் தரத்துக்குத் தகுதிபெற்றனர். இது பரீட்சைக்கு தோற்றியோரில் 66.12%. தேசிய ரீதியில் வடக்கு மாகாணம் 2016ஆம் ஆண்டு ஒன்பதாவது மாகாணமாக உள்ளது. 2017ஆம் ஆண்டு 6ஆயிரத்து 219பேர் உயர்தரத்துக்கு தகுதி பெற்றனர். இது பரீட்சைக்கு தோற்றியோரில் 67.77% ஆகும். இவ் ஆண்டு ஆங்கில பாடத்தில் 51.12%மானோர் சித்தி பெற்றுள்ளனர்.


2018ஆம் ஆண்டின் பெறுபேறுகளின்படி வடமாகாகணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களின் தர நிலையில் மன்னார் மாவட்டம் முதலாம் இடத்தையும், வவுனியா மாவட்டம் இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாண மாவட்டம் மூன்றாம் இடத்தையும், தொடர்ந்து முல்லைத்தீவு நான்காம் இடத்தையும், கிளிநொச்சி ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன. மன்னார் மாவட்டத்தில் பரீட்சைக்கு தோற்றிய 3,638 மாணவர்களில் 1,321 மாணவர்கள் உயர் தரம் கற்பதற்கான தகுதி நிலையை அடைந்தனர். வவுனியாவில் 5,143பேர் தோற்றி 1,929 பேர் உயர்தரத்துக்குத் தகுதிநிலையை அடைந்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 17,495பேர் தோற்றி 6337பேர் தகுதி பெற்றனர். முல்லைத்தீவில் 3,494பேர் தோற்றி 1,246பேர் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றனர். கிளிநொச்சியில் 4,405பேர் தோற்றி, 1434 பேர் உயர்தரத்துக்கு தகுதி பெற்றனர். நாடளாவிய ரீதியில் 518,184 மாணவர் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். 71.66%த்தினர் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளனர்.

ஒப்பீட்டுக் கல்வி ஆய்வுகளின் கோட்பாடுகளைப் பிரயோகித்து மேற்கொள்ளும் பகுப்பாய்வில் தேசிய மட்டத்தில் பின்னடைவான பெறுபேறுகளை கிழக்கு, வடக்கு மாகாண வலயங்கள் பெற்றுள்ளன.

மாவட்ட அடிப்படையில் பெறுபேறுகளின் வீழ்ச்சி தமிழர் கூடுதலாக வாழும் மாவட்டங்களில் காணப்படுகின்றன. இனவாதம், சுயமிழந்த அரசியல், புத்தி ஜீவிகளின் விழிப்புணர்வின்மை, கதிரை



களைப் பாதுகாக்கும் அரச ஊழியர்கள், நிர்வாகச் சீர்கேடுகள், பொருத்தமற்ற வளப்பிரயோகம் எமது கல்விப் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன.




# சேயின் சிரிப்பினிலே

இல்லறமே நல்லறமென் றேற்ற இணையர்க்கு
நல்லறத்தில் வந்துதித்த நம்பியைச் - செல்வமென
உற்றார் உறவுடனே ஊரார் மகிழ்ந்துமே
பற்றுடனே ஏற்றனரே பார்.

சேயின் சிரிப்பினிலே தெய்வத்தைக் காண்பீரே
தாயின் அரவணைப்பே தக்கதென - சேயறிஞர்
கூறுவது மட்டுமல்ல குற்றமில்லாத் தாய்ப்பாலே
ஆறுதலைத் தந்திடுமே ஆம்.

அன்பின் திருஉருக்கள் ஆற்றலுள்ள தெய்வங்கள்
இன்பம் அளிக்கும் இதயங்கள் - துன்பமிலாத்
தூயநல் உள்ளங்கள் தூங்கிஎழும் சுந்தரங்கள்
மாய விளையாட்டின் மன்.

பாட்டிமார் வைத்யந்தான் பாலகர்க்கு ஏற்றதென
நாட்டிலுள்ள வைத்யர்கள் நன்கறிவர் - வீட்டிலுள்ளோர்
வேதனைப் பட்டாலும் வேறுவழி காணாரே
மாதவனே மாவைத்யன் ஆம்.



வீட்டு வளர்ப்பினிலே வித்தைக்காம் ஆரம்பம்
பாட்டும் பரதமும் பற்றுடனே - வீட்டினிலே
பள்ளியிலே பிள்ளைகளின் பாசப் பிணைப்புடனே
வெள்ளைமன ஆசிரியர் வேட்பு.

தந்தை கடனதுவே தக்ககல்வி தான்வழங்கல்
செந்தமிழோ டாங்கிலமும் செம்மொழிகள் -
புந்தியராம்
நல்லா சிரியரின் நற்றுணையும் சேர்ந்திட்டால்
செல்வச் செருக்குறுவான் தேர்.
புந்தியர் - அறிவுடைஓர்

கற்றோர் சபையினிலே காட்டும் திறமைக்கு
வற்றாத சொற்பெருக்கு வாய்ப்பாமே - நற்கல்வி
பெற்றவரே நற்சபையில் தோன்றிப் பெருமையுடன்
நற்பெயரும் பெற்றிடுவர் நன்கு.

தாய்சொல்லை மந்திரமாய்த் தாங்கினாலும் தந்தையின்
வாய்ச்சொல் வலிமையென் றாகித்தே - வாய்மைதனை
வாழ்விலே கொண்டவர்க்கு வாய்ப்பதிகம் என்றுணர்ந்தோர்
தாழ்வின்றி வாழ்வரே தான்.

இல்லையொரு பிள்ளையென ஏங்கித் தவமிருந்தே
செல்லாத கோவிலில்லை தீர்த்தமில்லை - நல்லதோர்
பிள்ளைக்காய் நாம்பட்ட பாடதனை ஊரறியும்
எள்ளலிலா ஏந்தல் எமக்கு.

பிள்ளைக் கனியமுதைப் பேதலிப் பேதுமின்றித்
தெள்ளத் தெளிவுடனே தேர்ச்சியும் - உள்ளங்
களிப்பூட்டப் பாசமுடன் கல்வியுந் தந்தே
தெளிவாய் வளர்த்தோமே தேர்.

- முருகேசு மயில்வாகனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் வாழும் கருணா...

**- அன்ரனி மனோகரன் -**

அண்மையில் மறைந்த ஓவியர் கருணா, பல இலக்கியவாதிகள் பத்திரிகையாளர்கள் என்று பலருடனும் மிகவும் நெருக்கமாகப் பழகியவர். தொண்ணூறுகளில் கனடாவில் வெளிவந்த சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளில் பிரசுரிக்கபட்ட அநேகமான விளம்பரங்கள் கருணாவின் கைவண்ணத்தில் வடிவமைக்கப் பட்டவையே. அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சில பத்திரிகைளின் முகப்பு மற்றும் வடிவமைப்பு போன்றவற்றை உருவமைத்தவர் அவர்தான்.

ஆரம்பகாலங்களில் கனடாவில் பலர் தமது தொழிலை ஆரம்பித்தபோது அவர்களுக்கு கணினியைப் பற்றிய அறிவு பெரிதாக இருக்கவில்லை. அப்போதெல்லாம் அவர்களுக்கு எவ்வித தயக்கமும் இன்றி கணினியை அறிமுகப்படுத்தியது மட்டுமல்லாமல், அவர்களுடன் சென்று அவர்களுக்குப் பொருத்தமான கணினியினை, அவர்களின் தேவைக்கேற்ப தெரிவுசெய்து, அதற்குத் தேவையான மென்பொருள்களைப் பதிவேற்றம் செய்து, அவற்றின் பாவனை பற்றிய ஆரம்ப அறிவை சொல்லிக் கொடுத்து, அவர்களை கணினி உலகுக்கு இட்டு சென்றவர் அவர்தான் என்பதை பலரும் அடிக்கடி ஞாபகப்படுத்தி கொள்வர்.

இன்று இணைய வலையமைப்பில் எத்தனையோ தமிழ் கணினி எழுத்துருக்கள் இலகுவாகக் கிடைக்கின்றன.



அப்போது எல்லாம் அவற்றை தேடிக் கண்டுபிடித்து கணினியில் பதிவேற்றம் செய்வது மிகவும் கடினம். அவ்வெழுத்துருக்களை அப்போது வடிவமைத்துக் கொண்டிருந்த தமிழ் மென்பொருள் வல்லுனர்களைக் கண்டறிந்து, அவர்களைப் பலருக்கு அறிமுகப்படுத்தி, அவற்றின் பாவனையை பலருக்கும் அறியத்தந்தவரும் அவர்தான்.

தாயகத்தில் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் மார்க்கு என்ற ஓவியக் கலைஞரை ஆசானாகக் கொண்டு ஓவியக்கலை நுட்பங்களை பயின்று தன்னை ஓவியக்கலையில் ஈடுபடுத்திக் கொண்டார். தொண்ணூறுகளில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த கருணா, ஊரில் கையால் கீறிப் பழகிய ஓவியக்கலையை மேலும் மேம்படுத்த, ஜோர்ச் பிரவுன் கல்லூரியில் இணைந்து கணினியில் வரையும் ஓவியக்கலையின் நுணுக்கங்களைக் கற்று, முழுநேர வேலையாகப் புகைப்படத் துறையிலும், விளம்பர கட்டமைப்பிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இத்துறைகளில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதாலோ என்னவோ, பலரும் அவரின் சேவையை நாடி, அவருடன் அறிமுகமாகி, பின்பு நீண்டகால நண்பர்களாயினர். அவரின் இச்செயல்பாடுகளால் பெரிதும் நன்மை அடைந்தோர் பலர் என்றுதான் சொல்ல முடியும்.

இப்படியாக பலவழிகளிலும் தமக்கு உதவியவர், திடீரென்று ஒருநாள் மறைந்து போனது, அவருடன் பழகிய எல்லோரையும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அவர் இறந்த செய்தி கேட்டுக் கண் கலங்கி நின்ற அவரின் நெருங்கிய சில நண்பர்கள், அவரின் மரணசடங்கின் போது, அவருக்காக என்ன செய்யலாம் என்று யோசித்தனர். பணத்தை ஒருநாள் நிகழ்வுக்காகப் பூச்செண்டாகவோ, பூமாலையாகவோ அல்லது நினைவுப் பத்திரத்திரமாகவோ செலவழிப்பதிலும் பார்க்க, கருணாவின் பெயர் நிலைத்து நிற்பது போல் ஏதாவது செய்யலாம் என்று அவர்கள் ஆராய்ந்த போதுதான், அவர்களுக்கு, திறமையாக நிர்வாகிக்கப்பட்டு வரும், கல்வி சம்பந்தமாக இயங்கும் அமைப்பு ஒன்றைப்பற்றித் தெரியவந்தது.

அந்த அமைப்பைப்பற்றி அவர்கள் அறிய முற்பட்ட போதுதான், கருணா ஏற்கனவே அந்த அமைப்புடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது அவர்களுக்கு மேலும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அந்த அமைப்பால் தாயகத்தில் உதவி பெறும் மாணவர்களின் பாவனைக்கு அனுப்பப் பட்ட மடிக்கணினிகள் எல்லாம் கருணாவின் கைபட்ட பின்புதான் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. ஏற்கனவே கருணா அந்த அமைப்புடன் ஈடுபாடு கொண்டிருந்தபடியால், அவரின் பெயரில், அந்த அமைப்பில் ஏதாவது செய்வதுதான் சாலச் சிறந்தது என்று நண்பர்கள் முடிவெடுத்தனர். அவரின் நண்பர்களிடமிருந்து சேர்க்கப்பட்ட ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நிதியை இந்த அமைப்பின் ஊடாக கருணாவின் பெயரில் கல்வி அறக்கட்டளை ஒன்றை ஆரம்பித்தனர். இப்பணமானது அந்த அமைப்பின் பெயரில் வங்கியில் வைப்பு செய்யப்பட்டு, அதில் இருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டு, ஒரு பல்கலைக்கழக மாணவருக்கு மாதாந்தக் கொடுப்பனவாக ரூபாய் 5,000 மாணவரின் பல்கலைக்கழகப் படிப்பு முடியும்வரை கொடுக்கப்படும். அந்த மாணவர் படிப்பை முடித்ததும் இன்னொரு மாணவர் இதன்மூலம் தொடர்ந்து பயன் பெறுவார்.

இந்த அமைப்பானது, தாயகத்தில் முடிவடைந்த கோரயுத்தத்தில், பாதிக்கப் பட்டு, வறுமையில் இன்னலுறும் திறமையான மாணவர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் 2014ஆம் ஆண்டு சில நண்பர்களால் கனடாவில் ஆரம்பிக்கப் பட்டது. அமைப்பின் ஈடுபாடுகள் நேர்மையாகவும், வெளிப்படை தன்மையாகவும், உதவிகள் எவ்வித நிர்வாகச் செலவுமின்றி நேரடியாக மாணவர்களை சென்றடைய வேண்டும் போன்ற பல குறிக்கோள்களை கொண்டு பல விதிகள் இந்த அமைப்பின் யாப்பில் உள்ளெடுக்கப்பட்டன. மாணவர்கள் வறுமை, திறமை என்ற அடிப்படையில் மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வமைப்பில் வேலை செய்யும் தொண்டர்களுக்கு சம்பளம், பிரயாணப் படி, மற்றும் இதர செலவுகள் எதுவும் வழங்கப்படாது. வருடாந்தம் நடைபெறும் மாணவர்களைக் கௌரவப் படுத்தும் விழாவுக்கு உதவித்தொகையில் இருந்து பணம் செலவழிக்கப்படமாட்டாது.

வகுப்பாசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர் ஊடாக மாணவர்கள் தெரிவுக் குழுவுக்கு சிபாரிசு செய்யப்படுவர். பிரதேச செயலாளர் ஊடாக அவர்களின் குடும்ப நிலமை அத்தாட்சிப்படுத்தப்பட்டு தெரிவுக் குழு அவற்றை தீர விசாரித்து தகுதியானவர்களை தெரிவு செய்யும். தெரிவுக் குழுவினரின் உதவியுடன் வங்கியில் மாணவர்களுக்கான கணக்கு ஆரம்பிக்கப் பட்டு, உதவித்தொகை, கணக்கில் போடப் படும். மாணவர்கள் வேறு திட்டங்களின் ஊடாகப் படிப்புக்கு உதவி பெற்றால், இவ்வமைப்பில் இருந்து கிடைக்கும் உதவி நிறுத்தப்படும். குடும்ப நிதிநிலை மேம்பட்டால் அதுபற்றி தேர்வுக் குழுவுக்கு அறியத்தரப்படவேண்டும். மேற்கொண்டு உதவு செய்வது பற்றிக் குழு ஆராய்ந்து முடிவு எடுக்கும். உதவி பெறுபவர்கள் சம்பந்தமாக ஏதாவது புகார்கள் குழுவுக்கு தெரியப்படுத்தப்பட்டால் அவை விசாரிக்கப் பட்டு, தவறு இருந்தால் உதவி உடனடியாக நிறுத்தப்படும்.

இவ்வமைப்பானது உதவி அரசாங்க அதிபரை தலைமையாக கொண்டு, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள் கொண்ட ஒன்பது

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# என்றும்...

16 ஆம் பக்கத்தொடர்ச்சி

பேர் அடங்கிய தன்னலமற்ற குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இரண்டு வகையான அன்பளிப்புகள் ஊடாக மாணவர்களுக்கான உதவித்தொகைகள் தற்போது வழங்கப்படுகிறது. முதலாவது ஏற்கனவே குறிப்பிட்டது போல், முழுத் தொகையும் ஒரே தடவையில் கொடுக்கப் பட்டு, விரும்பிய ஒருவரின் பெயரில் அறக்கட்டளை ஒன்றை ஆரம்பிக்கலாம். அந்நிதியில் இருந்து பெறப்படும் வருமானத்தில் பல்கலைகழக மாணவருக் கான மாதாந்த உதவித்தொகை வழங்கப் படும். இரண்டாவது, நன்கொடை யாளர்களால் மாதாந்தம் அல்லது வருடத்துக்கு ஒருதடவை கொடுக்கப்படும் பணத்தை வங்கியில் வைப்புச் செய்து, மாணவர்களுக்குகான மாதாந்த உதவித் தொகை பகிர்ந்து அளிக்கப்படும். ஐந்தாம் வகுப்பில் இருந்து பல்கலைக்கழகம் வரை கல்வி கற்கும் மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர். தற்போது 286 மாணவர்கள் இந்த திட்டத்தின் கீழ் உதவி பெறுகின்றனர். 11 மாணவர்கள் மருத்துவ பீடத்திலும், 14 மாணவர்கள் பொறியியல் பீடத்திலும், 11 மாணவர்கள் மற்ற பீடங் களிலும் தற்போது கல்வி கற்கின்றர். மிகுதியானவர்கள், ஐந்தாம் வகுப்பில் இருந்து கபொதா உயர்தரம் வரை, 18 பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். மாதந்த உதவித் தொகையாக, 5ஆம் வகுப்பு மாணவர்கள் 500 ரூபாயையும், 6 ஆம் வகுப்பில் இருந்து 9ஆம் வகுப்பு வரையான மாணவர்கள் 1000 ரூபாயை யும், கபொத சாதாரணம் மற்றும் உயர் தர மாணவர்கள் 1,500 ரூபாயை பெறு கின்றர். பல்கலைகழக மாணவர்கள் மாதந்த உதவித் தொகையாக 5,000 ரூபாயையும் அதைவிட ஒரு மடிக்கணினி யும், உடைகளுக்காக 10,000 ரூபாயும் பெறுகிறனர்கள். பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கு கணினி வகுப்புக்கள் நடத்தப்பட்டு சான்றதழ்களும் வழங்கப்படும். தற்போது மாதந்த முழுக்

Nelliady Community Charity

கொடுப்பனவாக நாலு லட்சம் ரூபா இந்த அமைப்பால் மாணவர்களுக்கு கொடுக்கப் படுகிறது, ஏறத்தாள 150க்கு மேற்பட பொதுநல நோக்குடைய நண்பர்களின் பங்களிப்பால் இயங்கும் இவ்வமைப்புக்கு, இலண்டன் நண்பர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

வருடாந்தம் நடைபெறும் உதவி பெறும் மாணவர்கள் ஒன்று கூடலுக்கு எல்லா மாணவர்களும் அழைக்கப்பட்டு, அரசாங்க உயர் அதிகாரிகளால் கௌரவிக்கப்படுவர். ஐந்ததாம் வகுப்பு புலமை பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி பரிசாக வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை 99 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் இவ் ஒன்று கூடல் நடைபெறும். சக மாணவர்கள் இந்நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டு, அவர்களிடையே நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தி பிற்காலத்தில் இந்த அமைப்பை தாமே பொறுப்பெடுத்து நடத்தக்கூடிய ஒரு தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதே அமைப்பாளர்களின் நோக்கமாக இருக்கிறது. அமைப்பாளரில் ஒருவர் பகிர்ந்துகொண்ட ஒரு சம்பவம் ஒன்று அப்படிப்பட்ட ஒரு தலைமுறையை அங்கு உருவாகுவதை காணக்ககூடியதாக இருக்கிறது. அவர் அண்மையில் தாயகம் சென்றபோது யாழ். போதனா வைத்திய சாலைக்கு நோயாளர் ஒருவரை பார்க்கப் போயிருந்தார். பார்வையிடும் நேரத்துக்கு முன் போயிருந்தபடியால், உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டு, நேரம் வரும் வரை வாசலில் காத்திருந்ததார். அப்போது அவரை கடந்து உள்ளே சென்ற பெண் பிள்ளை ஒருவர், சற்று நின்று திரும்பி, அவரைப் பார்த்து விட்டு, அவரிடம் வந்து ஏன் இவ்விடத்தில் நிற்கிறீர்கள் என்று வினாவினார். அவர், தான் ஏன் நிற்கிறேன் என்பதை கூறியதும், வாயில் காப்பவரிடம் கதைத்து, அவரை உள்ளே அழைத்து சென்றார். இவர் ஆச்சரியத்துடன் அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்த போது, என்னை உங்களுக்கு தெரியாது. ஆனால் எனக்கு உங்களை தெரியும், நேற்று உங்களை விழாவில் கண்டேன். நானும் உங்களுடைய திட்டத்தின் கீழ் உதவி பெறும் மருத்துவ பீட மாணவி, இந்த ஆஸ்பத்திரியில்தான் பயிற்சி பெறுகிறேன் என்று கூறிச் சென்றுள்ளார். பெற்ற உதவியை, கௌரவ குறைவு என்று வெட்கத்தில் சொல்ல மறுக்கும் எமது சமூகத்தில், தானாகவே வந்து அவருக்கு உதவி புரிந்து, தான் பெறும் உதவியையும் சொல்லிச் சென்றது அவருக்குப் பெருமையாக இருந்தது,

இன்று எம்மில் பலர் உதவி செய்ய ஆசை இருந்தாலும் பல நடைமுறை பிரச்சனைகளை எண்ணி அதில் இருந்து பின்வாங்குவதை எம்மால் காணக்கூடிய தாக இருக்கிறது. சேர்க்கப்பட்ட பணம் இங்கிருந்து முழுமையாகப் போகுமா, சரியான ஆட்களுக்கு உதவி கிடைக்குமா போன்ற கேள்விகள் அவர்களை ஆட்கொள்ளும். அவர்களுக்கு இந்த அமைப்பு ஒரு முன்மாதிரியாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. இந்த நற்காரியங்களை சமூகத்தின் மேற்பாட்டுக் காகத் தொடர்ந்தும் எந்த வித விளம்பரமோ, சலசலப்போ இன்றி அர்பணிப்புடன் புரிந்துவரும் நெல்லியடி சமூக அறக்கொடை அமைப்புடன் இணைந்து உதவி செய்ய விரும்பினால், கீழ் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம் ***416 826 6039***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்க்கரை நோய் எனும் மதுமேகம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy( India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)



இனிமையான நம் வாழ்வில் இனிப்பை விரும்பாதவர்களே இருக்க முடியாது. அவ்வகை இனிப்பு உணவுகளுக்கு 'குட்பாய்' சொல்லவைக்கும் சர்க்கரை நோயை சித்த மருத்துவம் 'மதுமேகம்' என்று பெயரிட்டு அழைக்கின்றது.

'மது' என்றால் தேன் 'மதுமேகம்' என்றால் சிறுநீரில் சர்க்கரை சத்து வெளியேறும் நிலை. சாதாரணமானவர்களுக்கு சிறுநீரில் சர்க்கரை வெளியேறாது.

இரத்தத்தில் சர்க்கரை தன் இயல்பான அளவைவிட அதிகப்பட்டு காணும் நிலை அதாவது 180 மி.கி சதவீதத்திற்கு மேலும் அதிகரிக்கும் போது சிறுநீரில் சர்க்கரைச் சத்து வெளியேறும்.

**இரத்தப்பரிசோதனையில் சர்க்கரை அளவு:**

காலை வெறும் வயிற்றில் :
70 - 110 மி.கி./dl
உணவு உண்டபின் 1½ - 2 மணி :
100 - 140 மி.கி./dl

**சர்க்கரை நோய் வரக்காரணம்:-** 'இன்சுலின்' எனும் சுரப்பிச்சத்து அளவில் குறைவதாலும் மற்றும் அதன் செயல் திறன் குறைவதாலும் இந்நோய் உண்டாகிறது என்று ஆங்கில மருத்துவம் கூறுகிறது.

**சித்த மருத்துவம் மதுமேக நோய் வருவதற்கான காரணங்களாக கூறுவது:**

"கோதையர் கலவி போதை கொழுத்த
மீனிறைச்சி போதைப்
பாதுவாய் நெய்யும் பாலும்
பரிவுடனுண்பீராகில்
சோதபாண்டு ருவமிக்க சுக்கில
பிரமேகந்தாள்
ஒது நீரழிவு சேரவுண்டெடன அறிந்து
கொள்ளே" (அகத்தியர் 12,000)

அளவு கடந்த நெய்ப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருட்களை உண்ணுதல், எப்பொழுதுமே மனம் நோதல், மிகுதியாக கலவி செய்தல், சோம்பித்திரிதல் மற்றும் தாய் தந்தையரின் மரபு வழியாகவும் மதுமேக நோய் வரலாம். நெய், பால், இறைச்சி, இனிப்புச்சுவை பொருந்திய உணவுகள், கள் போன்றவையும் மதுமேக நோய் வரக் காரணிகளாகும்.

**மருத்துவ வழிமுறைகள்:** 1. உணவுக் கட்டுப்பாடு 2. மருத்துவம் 3. உடற்பயிற்சி

**உணவுக்கட்டுப்பாடு :** ◆ உணவில் சர்க்கரைச் சத்து அதிகமுள்ள உணவு வகைகளை குறைத்துக்கொள்ள வேண்டும்
◆ உதாரணமாக கரட், பீற்ரூட், உருளைக் கிழங்கு, வாழைப்பழம், மாம்பழம், இனிப்புப் பண்டங்கள், அரிசியினால் செய்யும் உணவு வகைகளான சாதம், இட்லி, தோசை,




இடியப்பம் ஆகியவற்றை அதிகமாக சாப்பிடக்கூடாது.
◆ இரவில் கோதுமை மாவு, ராகி ஆகியவற்றாலான உணவு வகைகளை சாப்பிடலாம்.
◆ கொய்யா, நாவல் பழம், பேரிக்காய், வெள்ளரி, நெல்லிக்காய் ஆகியன சாப்பிடலாம்.
◆ ஒரே நேரத்தில் வயிறு நிறைய சாப்பிடுவதை தவிர்த்து, நாளொன்றிற்கு 4 முதல் 5 முறை குறைவான அளவில் உண்பது நல்லது.

**சர்க்கரை நோய்க்கான எளிய மருத்துவ முறைகள்:**

"ஆவிரை கொன்றை நாவல் அலை கடல்
முத்தங்கோட்டம்
மேவிய மருதந்தோலும் விரைந்துட
னொன்றாக் கொண்டு
பூவிரி குழலினாளே பொருந்தவே தன்னை
யுண்ணக்
காவிரி நீரும் வற்றிக் கடல்நீரும்
வற்றுந்தானே" - தேரன் குடிநீர்100

1. ஆவாரை, கொன்றைவேர், நாவல் கொட்டை, கடலழிஞ்சில், கோரைக்கிழங்கு, கோஷ்டம், மருதம்பட்டை ஆகியவற்றை தால 10 கிராம் அளவு எடுத்து, 4 ரம்ளர் நீர் சேர்த்து, 1 ரம்ளராக வரும்வரை காய்ச்சி தினமும் இருவேளை குடிக்க நீரிழிவு நோய் குறையும்.

2. தேற்றான் விதை, கடுக்காய்த் தோல், ஆவாரை விதை, விளாம் பிசின், ஆகியவற்றை தலா 10 கிராம் அளவு எடுத்து முதல்நாள் இரவு மோரில் ஊறப்போட்டு மறுநாள் காலை அரைத்து, பசுமோரில் கலந்து சாப்பிடலாம்.

3. தேவருலகில் இந்திரன் அமிர்தம் அருந்தியபோது, சிறிது பூமியில் சிந்தி நெல்லி மரமானது. உண்மையில் நெல்லி ஒரு அமிர்தம்தான். நெல்லிக்காய் சாறு, தேன், எலுமிச்சை சாறு, ஆகியவற்றை தலா 15 மி.லி எடுத்து, மூன்றையும் கலந்து காலை மட்டும் சாப்பிடுவது நோயைக் குறைக்கும்.

4. அருகம்புல்லை நிழலில் உலர்த்தி, பொடியாக்கி காலை, மாலை 1 ஸ்பூன் வெந்நீரில் சாப்பிடவும்.

5. இலவமரப்பட்டை - 10 கிராம், கருஞ்சீரகம் -5 கிராம் எடுத்து பொடியாக்கி, 1 ஸ்பூன் மோரில் கலந்து உணவுக்கு முன் மூன்று வேளை சாப்பிடலாம்.

**உடற்பயிற்சி :**

◆ தினமும் அரைமணி நேரம் முதல் 1 மணி நேரமாவது காலை மாலை நடைப் பயிற்சி செய்ய வேண்டும்.
◆ இளம் வயதினராயின் ஓட்டப்பயிற்சி, யோகாசனம் போன்றவை செய்யலாம்.
◆ பகல் உறக்கத்தை தவிர்க்க வேண்டும்.

**தடுப்பு முறைகள்:**

◆ நெல்லிகாய் சாறு 1 மேசைக்கரண்டி, பாகற்காய் சாறு 1 மேசைக்கரண்டி கலந்து தினமும் காலையில் சாப்பிட கணையம் தூண்டப்பட்டு இன்சுலின் சுரப்பை அதிகப் படுத்தி சர்க்கரை வியாதியை தடுக்கலாம்.

◆ நெல்லிக்காய் பொடி, நாவல் பழப்பொடி, பாகற்காய் தூள் தலா 1 ஸ்பூன் எடுத்து காலை, மாலை வெந்நீரில் சாப்பிட சர்க்கரை நோய் வராது.

உடல் ஆரோக்கியத்திற்கான சத்தான காய்கறி, கீரைகள் உண்டு, நொறுக்குத் தீனி வகைகளை உணவுக்கு இடையில் உண்பதைத் தவிர்க்க வேண்டும்.




### வாசகர் கடிதம்

கனடாவில் வெளிவரும் மூத்த பத்திரிமையான விளம்பரம் பத்திரிகையில் இளையோர் ஆக்கம் என்ற பகுதி இளையோர்க்கு பெரும் நன்மையாய் அமைகிறது. இக்களத்தில் தம் படைப்புக்களை வெளிக்கொணரும் விதுசிகா அருள்தாசன், அபிரா சத்தியநேசன், மீரா தவராஜா ஆகியவர்களின் சமீபத்திய கட்டுரைகள் வரவேற்கப்பட வேண்டியவை. தமது இளம் வயதிலேயே நல்ல விடயங்களைச் சொல்லும் இவர்களின் ஆக்கத்திறன் மென்மேலும் வளர எனது வாழ்த்து.

- ச. அன்ரன் இராசநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்டம்



அபிரா சத்தியநேசன்
அகவை -17

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களுள் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள முக்கிய மாவட்டம் திருகோணமலை ஆகும். இம் மாவட்டத்தைச் சுற்றி எல்லைப் பகுதிகளாக முல்லைத்தீவு, அனுராதபுரம், பொலநறுவை, மட்டக் களப்பு ஆகிய மாவட்டங்கள் அமைந்து உள்ளன. இம் மாவட்டத்தில் இன்றும் தமிழ், சிங்கள முஸ்லீம் ஆகிய மூவின மக்கள் ஒன்றாக வாழ்கின்றனர். இந் நகரத்தில் தமிழரே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இலங்கையில் 2018 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி திரு கோணமலை மாவட்டத்தின் மக்கள் தொகை 421,000 ஆகும். இதில் 213,000 பேர் பெண்கள் 208,000 பேர் ஆண்கள் ஆவர். திருகோணமலை மாவட்டம் 11 பிரதேச சபைகளாக வகுக்கப்பட்டுள்ளது.

இங்கு இரு காலநிலைகள் காணப் படுகின்றது. கோடைகாலம் அதிகமாக காணப்படுகின்றது. குளிர்காலம் கார்த் திகை, மார்கழி ஆகிய மாதங்களில் காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் சுற்றுலா நிறைந்த இடங்களான: புறா மலை, திருகோணேச்சரம், நிலாவெளி கடற்கரை, மாபிள் பீச், கன்னியா வெந்நீர் ஊற்று, திருகோணமலை கோட்டை, புல்மோட்டை அரிசி மலை என்பன காணப்படுகின்றது. இதனால் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இலங்கையிலே திருகோண மலை மாவட்டத்தில் மட்டுமே இயற்கை துறைமுகம் அமைந்துள்ளது.

**திருக்கோணேஸ்வரம்:** இம் மாவட்டத் திலேயே மிகவும் தொன்மையான சிவன் கோயிலான திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ளது. பிரட்றிக் கோட்டை(Fort Fredrick) மேற்கத்தேய ஆதிக்கத்தின் மையமாக திருகோணமலை நகரத்தில் காணப்படுகின்றது. அந்தக்கோட்டையின் உள்ளே புகழ் பூத்த திருகோணேச்சர ஆலயம் அமைந்துள்ளது. மனு மாணிக் கராஜா என்கின்ற மன்னனே கி.மு 1300 ஆண்டிற்கு முன்னர் திருக்கோணேஸ் வரத்தைக் கட்டினான் என்று சான்றுகள் கூறுகின்றன. இவ்வாலயத்தினை போத்துக் கீசர் தமது ஆட்சியின் போது கோயில் குருமார் போன்று வேடம் தரித்து கோயினுள் புகுந்து அதன் சொத்துக்களை கொள்ளையிட்டதுடன் கோயிலையும் அழித்தனர். அழிக்கப்பட்ட கற்களைக் கொண்டே கோட்டையையும்



கட்டினர். மீண்டும் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு சுமார் 450 வருடங்களின் பின்னர் 1952இல் திருகோணமலையில் உள்ள பெரியார்களால் மீள கட்டுவிக்கப்பட்டது. முன்னைய கோயிலுடன் ஒப்பிடும்போது இப்போது இருக்கும் கோயில் மிகச்சிறியதே.

**நிலாவெளி கடற்கரை:** நிலாவெளி கடற் கரை திருகோணமலையின் வடமேற்கில் அமைந்திருக்கும் கரையோரப் பிரதேசம் ஆகும். இது பிரசித்தி பெற்ற ஒரு கடற்கரைப் பிரதேசமாக விளங்குகின்றது. இன்றைய காலகட்டத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளால் கவரப்படுகிறது. இங்கே படகுப் பயணம் சிறந்து காணப்படுகிறது. இக் கரையோரப்பிதேசத்தில் இருந்து படகுப் பயணம் மூலமாக புறாத்தீவுக்குப்



சுற்றுலாப் பயணிகள் செல்வர். மற்றும் அதற்கு அருகே நட்சத்திர சுற்றுலா விடுதிகளும் காணப்படுகின்றன.

**புறாத்தீவு:** புறாத்தீவு சுற்றுலாப் பயணி களை கவரும் ஓர் இடமாகும். இது நிலாவெளிக்கடற்கரையிலிருந்து 1 கி.மீ தொலைவில் உள்ளது. இத்தீவிற்கு பெயர் அங்கு வாழ்கின்ற பாறைப் புறாவின் பெயரால் ஏற்பட்டது. இத்தீவு 1963 இல் புறாக்களின் புகலிடமாக அறிவிக்கப்பட்டடு பின்னர் 2003ஆம் ஆண்டில் 17 ஆவது தேசிய பூங்காவாக (Pigeon Island National Park) அறிவிக்கப்பட்டது. புறாத்தீவு பெரிய புறாத்தீவு, சிறிய புறாத்தீவு என இரு தீவுகளாகக் காணப்படுகின்றது. சிறிய புறாத்தீவிலே அதிகமாக பவளப் பாறைகளே காணப்படுகிறது. இத்தீவிற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகள் படகின் மூலம் செல்வர். ஒக்ரோபர் முதல் மார்ச் வரையான காலப்பகுதியில் அதிக மழைவீழ்ச்சியினை பெறுகின்றது.

**கன்னியா வெந்நீரூற்று:** இம் மாவட்டத்தில் இயற்கை வெந்நீரூற்றான கன்னியா வெந்நீரூற்று காணப்படுகின்றது. தமிழ் வரலாற்றுப்படி இராவணன் தனது தாயாருக்கு இறுதி கிரிகைகள் மேற்கொள்வதற்கு உடைவாளை உருவி ஏழு இடங்களில் குத்தியதாகவும் அவ் விடத்தில் இருந்து வெந்நீர் ஊற்று




உருவாகியதாகவும் ஐதீகம் உண்டு. இது 90 - 120 செ.மீ ஆழத்தைக் கொண்ட தாகவும் ஏழு சிறிய சதுர வடிவான முறையில் கிணறு அமைந்துள்ளது. இங்கே ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் வெவ்வேறு வெப்பநிலையில் நீர் ஊற்று வந்துகொண்டு இருக்கும். தற்போது இவ் இடத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். தற்போது இப் பிரதேசத்தை சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. இங்கே தமிழ் மொழியில் செய்தியைக் கொண்டிருந்த அறிவிப்புப் பலகை நீக்கப்பட்டு தற்போது சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கே விநியோகிக்கப்படும் நுழைவுச்சீட்டில் இப் பிரதேசம் பௌத்தமத பிரதேசம் எனக் குறிப்பிடப்படுகிறது.

**சைனாபே:** திருகோணமலையின் சைனாபே என்னும் இடத்தில் நீலப் பளிங்குப் பாறை கொண்ட கடற்கரை அமைந்துள்ளது. இங்கு கடல் அலைகள் மிகவும் குறைவாக இருப்பதால்



அச்சமின்றி நீராடுவதற்குரிய இடமாகும். முன்பு இது இராணுவ கட்டுப்பாட்டில் இருந்தது. தற்போது உல்லாசப்பயணிகள் செல்கின்றனர். இவ்வாறாக உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் விடுமுறை நாட்களை மகிழ்ச்சியாக கழிக்கும் ஓர் இடமாகவும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நகரமாகவும் விளங்குகிறது.

SHANAA CAKE HOUSE
Cake decoration for all occasion
* Wedding Cake
* Birthday Cake
* Rich Cake
And More.....
Also we are offering
* Saree Pleating
* Stitching one minute saree
* Blouse Design
* Tutu dresses
Contact: 647.448.0449

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழடி...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

விபரம் தெரியாது 'வெறுமையாக'த் திரும்பினர். 'எங்கள் பாட்டன் சொத்து'களைக் கூடக் காண்பதற்கு எங்கெங்கெல்லாமோ அலைய வேண்டியுள்ளது. ஆனாலும் ஒரு திருப்தியும் உள்ளது. உலகின் எங்கேயோ ஓர் இடத்தில் அவை பத்திரமாக உள்ளன. உலகம் இன்னமும் சிறுகும் போது அவற்றை இலகுவாகப் பார்க்கலாம்,

அண்மையில், ஒக்ரோபர் 2018இல் நானும் ஜெர்மனி சென்றிருந்தேன். அச்சமயம் ஜெர்மனியின் சில அருங்காட்சியகங்களுக்கும் நூலகங்களுக்கும் சென்றேன், அங்கெல்லாம் எங்களின் ஓலைச் சுவடிகள், ஆதிச்சநல்லூரின் தாழிகள் உள்ளனவா எனத் தேடிய போதிலும் எனக்கு எதுவும் தென்படவில்லை. பதிலாக 5000 ஆண்டு பழமையான எகிப்தியரதும் பழமைக் கிரேக்கக் கிறிஸ்தவர் பாவித்த பொருட்களையும் ஜெர்மனியர் முற்காலத்திற் பாவித்த பொருட்கள் போன்றவற்றையும் பார்த்து அதிசயிக்கக் கூடியதாக இருந்தது. ஜெர்மனியரின் பழையவற்றைச் சேகரித்துப் பத்திரப் படுத்தும் இயல்பு நம்மிடையே இல்லாமற் போனது எங்களின் பின்னடைவுக்கும் காரணமாகவும் உள்ளது.



இவையிப்படியிருக்க, டாக்டர் ஜகர். அந்நாளில் ஐரோப்பாவில் வெளியிட்ட ஆதிச்சநல்லூரின் அகழ்வாய்வு அறிக்கையும் ஐரோப்பியர் சிலரின் ஆதிச்சநல்லூரின் அகழ்வுகளுக்குக் காரணியாக அமைந்து விட்டது.

அடுத்த தடவையில் அவை பற்றியும் பார்ப்போம். சரிதானே!

# நாமும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

தொகை கணிக்கப்படுகின்றது. இதனால் முதல் தடவை ஆதனம் வாங்கும் பலர் அடமானக்கடன் பெறுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது. அநேக நிதி நிறுவனங்களின் அடமானக்கடன் வியாபாரம் கீழ் நோக்கிச் செல்கின்றது. தனியாக அல்லது தனிப்பட்ட நிறுவனங்கள் அதிக அடமானக் கடனை வழங்குகின்றன.

ரொறொன்ரோ, வன்கூவர் போன்ற நகரங்களில் கடந்த வருட மார்ச் 2018உடன் ஒப்பிடும்போது விலை இறக்கத்தை காணலாம்.

அடமானக்கடன் பெறுவதில் இந்த முறையை நீக்க வேண்டுமென முக்கிய



நிதி நிறுவனங்களின் மற்றும் ஆதனம் விற்று/வாங்கும் சபை அரசைக் கேட்டு கொள்கின்றது.

- பயம்தான் நம்மைப் பயமுறுத்துகிறது. பயத்தை உதறி எறிவோம்.
- நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் விவாதிப்பது சிறப்பாகும்.
- உண்மை புறப்பட ஆரம்பிக்கும் முன் பொய் பாதி உலகத்தை வலம் வந்துவிடும்.
- உண்மை தனியாகச் செல்லும். பொய்க்குத்தான் துணை வேண்டும்.
- உலகம் ஒரு நாடக மேடை ஒவ்வொருவரும் தம் பங்கை நடிக்கின்றனர்.
- ஒரு துளி பேனா மை பத்து இலட்சம் பேரைச் சிந்திக்க வைக்கிறது.

# ஆலயத்துள் குண்டுவீசி அழித்ததென்ன?

இரக்ககுணம் மனிதருள்ளே இருந்திருந்தால்
இப்படியொரு இழிசெயலிங்கு நடக்குமாமோ?
அரக்ககுணம் கொண்டோரின் கைகளோங்கி
அகிலமே இவர்காலடியில் வீழ்ந்ததென்ன?
நரம்பில்லா நாவினாலிதை மறுப்பாருண்டோ?
நல்லெண்ணம் கொள்ளுங்கள் நாடுவாழும்
தரங்கெட்ட இழிசெயலால் தாழ்ந்துபோனார்
தாய்கூட மன்னிக்க மாட்டாளிவரை!

ஆண்டுக்கோர்நாள் மலர்கின்ற பண்டிகை
ஆவிநீத்த ஆண்டவர் உயிர்த்தெழும்நன்னாள்
மீண்டுவந்து பாவிகளை மண்ணுலகில்
மீட்சிபெற ரட்சித்த திருநாள் பெருங்
கூண்டுக்குள் சிக்குண்ட பறவைகளாய்
கூனிக்கிடந்த மனிதஇனம் எழுச்சியுற
ஈண்டு அவதரித்த ஏசுபிரான்
ஈடில்லா மரியாள்பெற்ற தேவதூதன்!



ஆண்டவரைத் தரிசிக்க வந்தவரை
ஆலயத்துள் அழித்ததென்ன குண்டுவீசி?
கண்டபலன் ஏதென்று சொல்வீரிங்கு?
கால்வேறு கைவேறு உடல்வேறாய்
துண்டாடிப் போகத்தான் மாண்டுபோனார்
துயரத்தைத் தாங்கிடத்தான் முடியுமாமோ?
பெண்டாட்டி பிள்ளையுடன் பூசைக்குவந்து
பிணமாகி வீழ்ந்த கொடுமையென்ன?

இதுவரையில் உயிரிழந்தோர் இருநூறுக்குமேலே
இடர்பாட்டில் காயமுற்றோர் பலநூறன்றோ
புதுமையில்லை இலங்கையிலே இச்செயல்கள்
புகழுரைப்பார் யாருண்டு இவர்செயலை?
எதுவரையில் நடக்குமிந்தக் கொடுமையெலாம்?
ஏனென்று கேட்பதற்கோ நாதியில்லை
செதுக்கிவிட கருங்கல்கூடச் சிலையாய்மாறும்
செகத்தினிலே கல்மனங்கள் என்றுமாறும்?

நெஞ்சமெலாம் நெருப்பாகிக் கொதிக்கிறதே
நேசமிலா நீசர்தம்மின் கொடுமைகாண
தஞ்சமென்று ஆண்டவரை நாடிவந்தார்
தலைவேறு உடல்வேறாய் சிதறிப்போனார்
கெஞ்சுகிறோம் கொடியோரைக் கேட்பீரா?
கெடுமனம் கொண்டிங்கு வாழாதீர்
மிஞ்சிநிற்கும் காலமெலாம் இதுபோலும்
மிருககுணம் கொள்ளாமல் திருந்திவாழும்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

(21.04.2019 ஈஸ்டர் ஞாயிறு அன்று காலையில் இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் சூழவுள்ள சில புறங்களிலும் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களிலும் உல்லாசப் பிரயாணிகள் தங்கியிருந்த நட்சத்திர கொட்டல்களிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த நூற்றுக் கணக்கான மக்களுக்கும் இரங்கலும் அஞ்சலியும் செலுத்தும் முகமாக எழுதப்பட்ட கவிதை இது.)


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு
• வாகன விபத்து • மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VENI CANADIAN IMMIGRATION SERVICES

UTHAYAVENI THURAIRAJA

416-587-6971

2425 Eglinton Ave. East, Suite 211, Toronto, Ontario M1K 5G8, Canada
email: immigrationconsultant.veni@yahoo.ca
web: www.veni.ca

*Licenced & Regulated Canadian immigration consultant*



- Family Class Sponsorship
- Parent and Grandparent Super Visa Application
- Student/Visitor/Worker – Temporary Resident Visa
- Work Permit Application with job offers
- Skilled worker applications and Employers hiring foreign workers
- Business applications Investor/ Entrepreneur/Self employed
- Provincial Nominee Program
- Refugee Claim
- Spousal Sponsorship
- Visitors Visa – Invitation Statutory Declarations
- Canadian Citizenship Application
- Canadian Experience Class
- Permanent Resident Card Renewal
- Removal Order Hearings
- Humanitarian and Compassionate Application and PRRA


# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 25ஆவது ஆண்டு விழா

- வீரகேசரி மூர்த்தி -

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 25ஆவது ஆண்டு விழா இம் மாதம் 12ஆம் திகதி மாலை ஸ்காபுறோவிலுள்ள 'குயீன்ஸ் பலஸ்' மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் "புலம்பெயர்ந்து வாழும் சிறுவர், எழுத்தாளர்களது தமிழ் அறி வினை வளர்ப்பதே எமது நோக்கம்!" என கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் திரு. குரு அரவிந்தன் தெரிவித்தார். மேலும் "புலம்பெயர்ந்த நாடான கனடாவில் தமிழ் எழுத்தாளர் இணையம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இலக்கியப் பணியாற்றி வருகின்றது. குறிப்பாக இளம் சந்ததியினருக்குத் தமிழ் மொழியின் மீதான ஆர்வத்தினையும், ஈடுபாட்டினையும் ஏற்படுத்துவதில் அதிக அக்கறை கொண்டுள்ளது. அத்துடன் அகில உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அண்மையில் உலகளாவிய ரீதியில் சிறுகதை போட்டி ஒன்றினையும் நடத்தி இருந்தோம். அவற்றின் முடிவுகள் இன்னும் மூன்று வார காலத்தில் அறிவிக்கப்பட இருக்கின்றது. அவற்றுக்கான பரிசுகள் அடுத்த வருட ஆரம்பத்தில் வழங்கப்படும். இப்போட்டியை நடத்துவதற்கு எமக்கு ஆதரவு தந்த "ஓசன் சுப்பர் மார்க்கெட்" உரிமையாளர்களுக்கும் மற்றும் திருவாளர்கள்: நாதன் ஸ்ரீதரன், சபேசன் தங்கத்துரை, பிரபு பாலா, குமார் தம்பிஜயா ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்" எனக் கூறினார்.

இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திரு. ஹரி ஆனந்தசங்கரி எம்.பி.யை குரு அரவிந்தன் பொன்னாடை



போற்றி வரவேற்றார். அப்போது பார்வையாளர்கள் கரகோஷம் செய்து தமது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டனர். திரு.ஹரி ஆனந்தசங்கரி எம்.பி. உரையாற்றியபோது பின்வருமாறு கூறினார்:
கல்வி, விஞ்ஞானம், கலாசாரம் ஆகியவற்றினை அகில உலக ரீதியில் பேணி வளர்த்து வரும் "UNESCO" என்ற ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் அகில உலகெலாம் உள்ள மொழிகளில் இருந்து 90 மொழிகளை தெரிவு செய்து அவற்றின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எமது தொன்மை மிக்க தமிழ் மொழியினை நாமும் அடுத்த சந்ததியினருக்கும் கொண்டுசெல்ல வேண்டியது அத்தியாவசியமாகும். இங்கு ரொறொன்ரோ மாநகரிலுள்ள தோமஸ் அல்வா எடிசன் பாடசாலையில் எண்பது வீதமான மாணவர் தமிழ் மாணவராவர். இம்மாதம் அங்கே நடைபெற்ற ஒரு விழாவில் புத்தகக் கண்காட்சியும் இடம்பெற்றது. அதில் 20 அடி நீளத்துக்குப் புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் அவற்றுள் தமிழ் புத்தகங்கள் எதுவுமே இல்லாதிருந்தது எனக்குப் பெரும் கவலையை தந்தது. இத்தகைய நிகழ்வுகளில் எமது புத்தகங்களையும் காட்சிக்கு வைக்க நம்மவர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன். கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவரான திரு. குரு அரவிந்தன் பல தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் எழுத்தாளர் இணையத்தின் மூலம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக பல சேவைகளை செய்து வரும் அவருக்குப் பாராட்டுப் பத்திரத்தினை வழங்கி கௌரவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்."

கனடாவில் இருந்து வெளிவரும் 'விளம்பரம்' உட்பட பல்வேறு பத்திரிகை



களிலும் தொடர்ந்து பயனுள்ள கட்டுரைகளை எழுதிவரும் பிரபல எழுத்தாளரான 'சிந்தனைப் பூக்கள்' திரு.எஸ். பத்மநாதனுக்கு எழுத்தாளர் இணையத் தலைவர் குரு அரவிந்தன் பொன்னாடை போர்த்தியும், சான்றிதழ் வழங்கியும் கௌரவித்தார்.

ஈழத்தில் இருந்து வருகை தந்திருந்த பொதுத்தொண்டு நிறுவனமான சர்வோதய அமைப்பினை சேர்ந்த சமூக சேவகியான செல்வி பொ. ஜமுனாதேவியும் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார். அவரை திருமதி. பாலசுந்தரம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். திருமதி கோதை அமுதன் தனது மாணவிகளுடன் இணைந்து நாட்டிய நிகழ்ச்சியினையும் நாடகத்தினையும் நடத்திப் பார்வையாளரை மகிழ்வித்தது பாராட்டுக்குரியதாகும். இராப் போசன விருந்துபசாரத்துடன் விழா நிறைவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R.V Tailors & Textile

## Saree Blouse, Salwar

பட்டுப் பாவாடை,
சாறிக் குஞ்சம் கட்டுதல்
மற்றும் சகலவிதமான தையல்
வேலைகளும் செய்து தரப்படும்.

## புதிய வகை சாறிகள்

அத்துடன் தையலுக்கு தேவையான சகல
விதமான குக்ஸ், போடர், குஞ்சம்
போன்ற பொருட்களும்

**விற்பனைக்கு உண்டு.**



தொடர்புகளுக்கு: **647.656.1612**

# Beauty By Pirasha

## Makeup & Hair Artist

Toronto & GTA

- Bridal Makeup
- Reception Makeup
- Ceremony Makeup
- Makeup & Hair for all occation
- Saree pleats & drape

Contact:

**416.400.7189**

For bookings - Email: pirashabeauty@gmail.com
Instagram: beautybypirasha





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அம்மாவுக்கு ஒற்றைக் கண்



சுந்தரம் இந்திரராஜா
indrarajah@gmail.com

நான் கைக்குழந்தையாக இருக்கும்போது எனது அப்பா இராணுவத்தினரின் எறி கணை வீச்சுக்குப் பலியாகி விட்டதாக எனது அம்மா சொல்லி எனக்குத் தெரியும். அவரின் முகத்தையாகுதல் பார்க்க ஒரு படம் கூட எங்களிடம் இல்லை. அவர் எப்படி இருந்திருப்பார் என நான் அறிந் ததில்லை. நான் அறிந்த நாள் தொடக்கம் அம்மாவுக்கு ஒரு கண் மாத்திரம் தான் இருந்தது. அம்மா தான் நாங்கள் வாழும் வீட்டிற்கு அண்மையில் இருக்கும் பாட சாலையில் சிற்றூழியராக வேலை செய்து என்னையும் வளர்த்து வந்தார். நான் பாலர் பிரிவில் படிக்கும்போது நானும் அம்மாவும் நண்பர் போல் பழகி வந்தோம்.

அம்மா வேலை செய்யும் பாடசாலையில் படிக்க ஆரம்பித்து விட்டேன். அம்மா பாடசாலை இடைவேளை நேரம் மதிய போசன இடைவேளை நேரம் ஆசையில் என்னை பார்க்கவும், உணவு தரவும் என்னுடைய வகுப்புக்கு வருவது வழமை. அவதான் எனது அம்மா என்பது எனது வகுப்புத் தோழிகளுக்கு நன்கு தெரியும். சில தோழிகள் அம்மா எனது வகுப்பை நோக்கி வருகையில் உனது ஒற்றைக் கண் அம்மா வருகின்றார் எனச் சொல்லுவர். ஆரம்ப நாட்களில் அது என்னை பாதிக்க வில்லை. நாளடைவில் கூடுதலான தோழிகள் சேர்ந்து உனது ஒற்றைக் கண் அம்மா வருகின்றார் எனச் சொல்லிப் பெரிதாகச் சிரிப்பர். ஆரம்பத்தில் தோழிகள் மீதுதான் வெறுப்பு வந்தது. தோழிகளை வெறுத்து பாடசாலையை விட முடியாது தோழிகளையும் விட முடியவில்லை. அம்மா வந்து என்னை சந்திப்பதை நிறுத்து வதுதான் ஒருவழி என முடிவு செய்தேன்.

என்னை வந்து சந்திப்பதை நிறுத்தும்படி அம்மாவிடம் சொல்லி வைத்து விட்டேன். அம்மாவுக்கு அவ்வளவு சந்தோசம் இல்லை. ஆனாலும் சரி என்று ஏற்றுக் கொண்டார். நானும் வளர வளர பாடசா லையில் உள்ள எல்லா மாணவர்களுக்கும் என் அம்மாவுக்கு ஒரு கண் மாத்திரம்தான் என்பது தெரிந்து விட்டது. எல்லா வயது மாணவர்களும் என்னை கோபப்படுத்த கேலி செய்வது வழமையாகிவிட்டது. ஒவ் வொரு நாளும் நான் படும் அவமான வேதனை சகித்துக் கொள்ள முடிய வில்லை. என் அம்மா மீது வெறுப்பு தான் கூடியது. அம்மாவிடம் பாடசாலையில் வேலை செய்வதை நிறுத்தும்படி கேட்டும் பார்த்தேன். அவரும் நிறுத்துவதாக இல்லை. அம்மா கெதியில் மறைந்து விடவேண்டும் என கடவுளை வேண்டினேன். ஒரு தடவை அவரின் முன் போய் நின்று உனது ஒற்றைக் கண்ணால் நான் படும் அவமானத்தை தாங்க முடியவில்லை நீ செத்துப் போய் விடு என்றும் சொல்லிப் பார்த்தேன். அவர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் மௌனம் எனது வெறுப்பைக் கூட்டியது. வீட்டை விட்டு வெளியேறக்கூட யோசனை வந்தது. அம்மா வோடு பேசுவதை நிறுத்தினேன்.



வேறு பாடசாலைக்கு மாறினால் இந்த அவமானத்திலிருந்து தப்பலாம் அதற்கு எனக்கு ஒரு வழி தோன்றியது. பாடங்களில் கூடிய புள்ளிகள் எடுத்து ஸ்கொலஷிப் (Scholarship) வாங்கி பட்டணத்திலுள்ள தங்கிப்படிக்கும் (Boarding/Hostel) வசதி யுடன் உள்ள பெரிய கல்லூரிக்கு போவது என்று எனது மனத்தை திடப்படுத்தி கவனமாகப் படித்து ஒருவாறு ஸ்கொலஷிப் (Scholarship) கிடைத்ததும் அம்மாவை விட்டு தூர போவதையிட்டு எனக்குத்தான் இரட்டிப்பு மகிழ்ச்சி.

புதிய ஆண்டில் புதிய கல்லூரி. பல மைல்கள் தூரத்தில் உள்ள கல்லூரியில் படிப்பதனால் புதிய நண்பர்கள், கேலி அவமானம் இல்லை. இங்கும் முன்னேற வேண்டும் என்ற வெறி, வெற்றி மேல் வெற்றிகளை தந்தது. அம்மாவுடனான தொடர்பு குறைந்து கொண்டே சென்றது.

பல்கலைகழக அனுமதியும் கிடைத்தது. பல் கலைகழகப் படிப்பையும் பகுதிநேர வேலை பார்த்தும் வங்கியில் கடன் வாங்கியும் படித்து முடித்து விட்டேன். நல்ல பெறு பேறுகள் கிடைத்தமையால் தலைநகரத்தில் உள்ள பிரபல்யமான வங்கி தலைமைக் காரியாலயத்தில் உதவி கணக்காளராக தொழில் கிடைத்து. 25 வயது ஆனபோது சம காலத்தில் பல்கலைகழகத்தில் பொறி யியல் பிரிவில் கல்வி கற்ற எனது நண் பனையே திருமணம் செய்து கொண்டேன்.

30 வயது ஆனபோது எங்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டனர். மூத்த மகளுக்கு வயது 3 இளைய மகனுக்கு வயது 2. எங்களது சேமிப்பை முதலாக இட்டு பட்டினத்தில் வாங்கிய ஓர் அழகிய சிறிய வீட்டில் சந்தோசமாக எங்கள் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. எனது தாயார் பேரப்பிள்ளைகள் இருக்கிறனர் என அறிந்து விட்டார் போல் இருக்கிறது. பேரப்பிள்ளைகளை பார்ப்பதற்காக எங்கள்

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குகளுக்காக சாதிவெறியைத் தூண்டுகின்றனர்!

## ‘உறியடி’ இயக்குனர் விஜயகுமார் நேர்காணல்

**சந்திப்பு கண்ணன்**

“கலை மக்களுக்கானது. அது மக்களிடம் இருந்துதான் வருகிறது. அதனால், மக்களின் துயரம் குறித்தும் சமூக பிரச்சினைகளை மையப்படுத்தியும் படம் எடுக்கிறேன். இனிமேலும் எடுப்பேன்.” அழுத்தமாகப் பேசுகிறார், ‘உறியடி’ படத்தின் இயக்குநரும் நடிகருமான விஜயகுமார். அனைத்து தரப்பினர் பாராட்டுகளையும் பெற்றுக்கொண்டிருக்கும் ‘உறியடி 2’ திரைப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, விஜயகுமாரைச் சந்தித்து உரையாடினோம்.

**‘உறியடி 2’ வெற்றியை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

படத்தில் சொல்லப்படும் நிஜத்தோடு மக்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். அந்த நிஜமே படத்தை வெற்றியடைய வைத்துள்ளது. 36 நாட்களிலேயே இப்படத்தை எடுத்து முடித்தேன். இரவு, பகல் பாராமல் சரியான தூக்கமும் இல்லாமல், படப்பிடிப்பிற்கு அரைநாள் விடுப்புகூட விடாமல் கடுமையாக பணியாற்றி இருக்கிறோம்.

இவரால் எழுதப்பெற்ற பிரபல்யமான நூலான 'ஆழிக்குமரன்' நூலை றொறன்ரோ நகர் வாழ் மூத்த ஊடகவியலாளர் அன்பர் திரு. திருச்செல்வம் அவர்கள் தமிழ் வாசகர் களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். பத்திரிகை வாயிலாக இச்செய்தியை அறிந்து திரு. திருச்செல்வம் அவர்களுடன் தொடர்புகொண்டு 'ஆழிக்குமரன்' நூல் ஆசிரியர் திரு. இராஜகோபால் அவர்களுடன் அறிமுகமானேன்.

"உங்களது நூலை மொன்றியால் வாழ் மக்களுக்கும் அறிமுகம் செய்வதன்மூலம் இங்குள்ள தமிழருக்கும் ஆழிக்குமரன் ஆனந்தனின் பெருமையை, புகழை, வரலாற்றை அறியத்தரலாம் அல்லவா" என எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன். அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் எனது வேண்டுகோளை ஏற்று வருகைதரச் சம்மதம் தந்தார். அதற்கான ஏற்பாடுகளை இங்கு பழகிய சில அன்பர்களுடன் இணைந்து செயல்படுத்தினேன்.

திரு. இராஜகோபாலையும் அவருடைய குடும்பத்தினரும், 'தமிழர் தகவல்' ஆசிரியர் திரு. திருச்செல்வமும், உதயன் ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களும் நூல் அறிமுகவிழாவைச் சிறப்பிக்க வருகை தந்தனர். ஒரு பொது வைபவத்தினூடாக ஆசிரியர் இராஜ கோபால், ஆசிரியர் திருச்செல்வம், ஆசிரியர் லோகேந்திரலிங்கம் ஆகிய மூவரும் மொன்றியால் வாழ் மக்களுக்கு அறிமுகமாவது இதுதான் முதன்முறை யென்று இங்குள்ளவர்கள் பேசிக் கொண்டனர்.

இவ்விழாவை முன்னைநாள் சைவ மகாசபைத் தலைவரும் வல்வெட்டித்துறைப் பிரமுகருமாகிய (அமரர்) பரஞ்சோதி அவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

1994இல் நடைபெற்ற இவ்விழா 1987க்குப் பிறகு மொன்றியாலில் நடைபெற்ற முதலாவது நூல் அறிமுகவிழா ஆகும். அதற்குமுன் நூல் வெளியீடோ அறிமுக விழாவோ நடைபெற்றதாகத் தகவல் இல்லை. இந்நிகழ்விற்குப் பிறகு இம்முக்கிய




தமிழ் அன்பர்கள் மூவரும் எனக்கு நல்ல நண்பர்களானார்கள்.

எழுத்துலகில் 25 ஆண்டுகள் கடந்த வெள்ளிவிழா எழுத்தாளர் எனத் தமிழர் தகவல் ஆண்டுமலர் என்னைக் கௌரவம் செய்தது. ஆசிரியர் திருச்செல்வம் தனது அகிலன் அசோஷியேற் நிறுவனத்தினூடாக எனது தந்தையாரின் நினைவு மலரையும் கவிஞர் வைரமுத்து வெளியிட்டு வைத்துப் பெருமைப்படுத்திய எனது கன்னிப் படைப்பான முதல் நூலாகிய 'தமிழன் கனவு' கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டு எனது எழுத்துப்பணியை உற்சாகப்படுத்தினார். இலண்டன் வாழ் ஊடகவியலாளர்கள் நண்பர் திரு. பாமா இராஜகோபால் 2015இல் நடைபெற்ற எனது முத்தமிழ் நூல்களின் அறிமுகவிழாவில் அங்கு திரண்ட இலண்டன் வாழ் தமிழ் வாசகர்களிடையே நன்றியுடன் என்னைப் பற்றி பெருமையாகப் பேசினார். உள்ளம் குளிர்ந்தது.

மேற்கூறியவர்களுடைய நற்பண்புகள் எனது உள்ளத்திலிருந்து என்றென்றும் மறையாது. கவியரசு கண்ணதாசன் வரிகளுடன் வாழும் இவர்களை நன்றியுடன் பாராட்டுகிறேன்.

'பொன்னல்ல பொருளல்ல புவி ஆளும்
மன்னர்தரும் எண்ணவெல்லா மரியாதை யேதுமல்ல
மின்னிவரும் மெய்க்கவியின் கண்ணில் வரும்
ஓர் துளியே கவிஞனுக்குக் கோடி பெறும்'

- மனசு தொடரும் -

நாம் பேசாவிட்டால்
அதற்காக யாரும்
வருத்தப்படப்போவதில்லை..
நம் இடத்திற்கு வேறு ஒருவரை
தேர்ந்தெடுத்து கொள்ள
போகிறார்கள் அவ்வளவுதான்...!



### Math Tutorial 387

Answers to tutorial 386

1)Let the height of the box =x cm

Length =60-2x ,Width =30-2x

V(x)= x(60-2x)(30-2x)

$=4x^3-180x^2+180x$ ,for extreme values V'(x) =0 ,so $12(x^2-30x+150)=0$, solving for x using quadratic equation

X=23.7 or x= 6.3 but x≤ 15

Therefore the height of box =6.3,length and width are 47.4 and 17.4

2)When x=2 ,y $=2e^2$,so $(2,2e^2)$ is the point of contact of the tangent

Now y' $=e^x+xe^x$ ,when x=2w ,y' = $3e^2$ therefore the equ.of tangent is $y-2e^2=3e^2(x-2)$ or $3e^2x-y-4e^2=0$

3)Since $\bar{a}$ and $\bar{b}$ form the sides of a parallelogram and since |a| =|b| the parallelogram will be a rhombus , and $\bar{a}+\bar{b}$ and $\bar{a}-\bar{b}$ will be the diagonals of this rhombus , they will be perpendicular to each

Other.

4)probability =1/3.1/2=1/6

Tutorial 387

Questions

1)Determine the equn. Of tangent line to $y=e^x/x^2$

2)Determine y' for $y=e^{\sin x+\cos x}$

3)Suppose a spherical piece of ice is melting at a rate of $5cm^3$/min and retains its spherical shapes at all times.How fast is the radius changing at the instant when the radius is 4 cm?

4)The value of a new car depreciates at the rate of 25% per year .a)Write an equation to represent the approximate value ,V, of a car purchased for $30000 b)Determine the value of the car two years after it is purchased

4)Given a and b unit vectors and if the angle between them is 60 degrees,calculate vectors (6a+b)(a-b)

By Mr S.FXavier(Teacher) 6473409490/4167322228



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருந்துளை...

11 ஆம் பக்கத்தொடர்ச்சி

பொருளை) மேல் நோக்கியெறிந்தால், அது சிறிது தூரம் மேலே சென்று விட்டுப் பின்னர் கீழே திரும்பி புவியின் மேற் பரப்பில் விழும். சற்று வேகம் கூடவாக எறிந்தால், இன்னமும் சிறிது தூரம் கூடுதலாக மேலே சென்று விட்டு மீண்டும் கீழே வந்து தரையில் மோதும். காரணம் புவியீர்ப்பு எனக் கூறிவிடுவோம். ஒரு வேளை எங்களால் அக்கல்லினைச் செக்கனுக்கு 11.2 கிலோமீற்றர் என்ற வேகத்தில் அல்லது அதற்கும் மேலாக எறிய முடியுமானால் அக்கல் திரும்பிப் புவிக்கு வராமல் விண்வெளியிற் பயணப் பட்டு விடும். இந்த செக்கனுக்கு 11.2 கிலோமீற்றர் என்பதைப் புவிக்கான தப்பு வேகம் என்பர். அதாவது புவியின் ஈர்ப்பிற்குத் தப்பி எந்தவொரு பொருளும் போக வேண்டுமெனில் அது செலுத்தப்பட வேண்டிய வேகம் செக்கனுக்கு 11.2 கிலோமீற்றர் ஆகவாவது இருக்க வேண்டும்.

இதேபோலப் புவியை விடப் பெரிய கதிரவனின் மேற்பரப்பில் இருந்து தப்பி ஓடுவதற்கான வேகம், தப்புவேகம் செக்கனுக்கு 618 கிலோமீற்றர் ஆகும். இதன்படி பாரம் கூடிய பொருளின் மேற்பரப்பில் இருந்து தப்புவதற்கான இன்னொரு பொருள் தப்புவேகம் அதிகம் என்பது தெரிகிறது. கதிரவனையும் விடப் பலமடங்கு பாரமான பொருளில் இருந்து தப்பு வேகம் செக்கனுக்கு 300,000 கிலோமீற்றர் என்ற ஒளியின் வேகமாக இருந்தால், அப்பொருளில் இருந்து ஒளி (வெளிச்சம்) கூட வெளியில் போக முடியாது, இல்லையா! அதாவது



அவ்வளவு பாரமான பொருளில் இருந்து வெளிச்சம் கூட வெளியே வராது. அப்படிப் பொருளில் இருந்து வெளிச்சம் வராது இருப்பின், அது எங்கள் கண்களுக்குத் தெரியாது. அதனை எங்களாற் பார்க்க முடியாது. இப்படியான பொருட்களைத் தான் பொதுப்படையாகக் கருந்துளைகள் என்கின்றனர்.

**அருகில் இருப்பது கருந்துளை ஒன்றின் படம்** - பொதுவாக வெளியில் பெருமளவு திணிவு, ஒரு குறுகிய இடத்திற் திரளும் வேளை யில் அவ்விடத்தின் ஈர்ப்பு வலிமை அதிக மாகி, ஒளியைக் கூட வெளியே செல்ல விடாத நிலை ஏற்பட, அவ்விடத்திற் கருந்துளை ஒன்று உருவாகிறது. இங்கு கருந்துளை என்றால் ஏதோ ஒரு பிரமாண்டமான பொருளாகத்தான் இருக்க வேண்டும் என எண்ணி விடாதீர்கள். ஒரு வேளை என்னையோ அல்லது உங்களையோ, எங்களின் திணிவு மாறாமல் இருக்க, ஓர் அணுவினையும் விடச் சிறியதாகச் சுருக்கினால், நானும் நீங்களும் கூடக் கருந்துளையாகி விடுவோம். இந்தப் பென்னம் பெரிய கதிரவனையும் ஒரு 'கிரிக்கட் பந்து' அளவுக்கு அதன் திணிவினை மாற்றாமற் சுருக்க முடியுமானால், அப்போது கதிரவனும் ஒரு குட்டிக் கரும்பொருளாக மாறிவிடும். இவ்வண்ணமே எங்களது புவி கூடத் தனது பருமனை மாற்றாமல் ஒரு சிறிய மாபிள் அளவிற்குச் சிறியதாக மாறினால், புவியும் கருந்துளைதான். ஆனால் புவியினதும் கதிரவனதும் பௌதிக இயல்புகள் அவற்றினைச் சுருங்க விடா.

கருந்துளைகளின் ஒளி உட்படத் தமது அருகில் உள்ள எல்லாவற்றையும் தம்முள் இழுத்துக் கொள்கின்றன. இதனால் வானிலுள்ள இருண்ட துவாரம் போன்றிருக்கும் இவற்றை 'விண்வெளியின் பூதங்கள்' என அறிவியலாளர்கள் வர்ணிப்பர். ஆரம்பத்தில் இவ்வண்ணமான அடிப்படையில் கருந்துளை என்ற பதம் வந்த வேளையில், உண்மையிலேயே பேரண்டத்துள் கருந்துளைகள் உள்ளனவா என்ற கேள்வி எழுகையில் விஞ்ஞானிகள் 'ஆம்' என்றே பதிலளித்த னர். கணித முடிவுகளால் அதனை அவர்கள் உறுதி செய்த போதிலும் இதுதான் கருந்துளை என அவர்களால் ஒன்றைக் கூடச் சுட்டிக் காட்ட முடிய வில்லை. பொதுவாகவே பேரண்டத்துள் உள்ள கலக்சிகளின் மையங்களில் பெருந்திணிவுடைய கருந்துளைகள், சூழ உள்ளவற்றை உறிஞ்சிக் கொண்டு இருக் கின்றன எனக் கூறும் விஞ்ஞானிகள், புவியில் இருந்து 26,000 ஒளியாண்டு தொலைவில் உள்ள எங்களது கலக்சியின் மையத்திலும், கதிரவனின் திணிவினைப் போல் 4.6 மில்லியன் மடங்கு திணிவுடைய சகர்ரறியஸ் ஏ (Sagattarius A) என்ற கருந்துளை ஒன்று இருப்பதை உறுதிப் படுத்தியுள்ளனர். மேலும், பாரமான விண்மீன்கள் சிலவும் அவை இறந்து போகையில் கருந்துளைகளாக மாறுகின் றன என்ற அறிவியற் காட்டுகளும் உள.

**கருந்துளைகளை இனங்காணல்** - இருண்டு கிடக்கும் கருந்துளைகளை எவ்வண்ணமாய் இனம் கண்டனர் என்பதைத் தெரிந்து கொள்வோம். கதிரவன், விண்மீன்கள் என்பவை ஒளியை வீசிக்கொண்டு இருப்பதாலும் அவற்றினைச் சந்திரனும் மற்றக் கோள்களும் தம்மீது விழுகின்ற ஒளியைத் தெறிக்க வைக்க, அவ்வொளி எங்களை வந்தடைவதாலும் கண்டு கொள்ளுகிறோம். இப்படியாக எப்படியோ ஏதோவொரு விதமாக ஒரு பொருளில் இருந்து ஒளி வந்தால்தான் அதனை இனம் காணலாம். ஆனால் கருந்துளை களில் இருந்து ஒளியே வராதே! அப்படி இருக்கையில் எப்படி இனங்காண்பது?

கருந்துளையை இனங்காண்பதற்கு விஞ்ஞானிகள் ஓர் உத்தியைப் பாவித்தனர். கருந்துளைகள் தமக்கு அருகில் இருக்கும், தமக்கு அருகில் வரும் பொருட்கள் எல்லாவற்றையும் தம்முள் இழுத்துக் கொள்கின்றன அல்லவா. அவ்வேளையில் அப் பொருட் கள் நேராகவே கருந்துளையினுள் போய் விழுவதில்லை. கருந்துளையை வேக

(தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)

## ஊடக அறிவுறுத்தல்

இலங்கையில் இருந்து கனடாவுக்குள் வீசா இன்றிப் பிரவேசிக்கலாமெனத் தவறான தகவல் பரப்பப்படுவது தொடர்பாக

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பிலும், மட்டக்களப்பிலும் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து, இலங்கையர்கள் கனடாவுக்குள் பிரவேசிப்பதற்கான வீசாக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் கனேடிய அரசு நீக்கிவிட்டதென்ற கருத்தை ஏற்படுத்தும், இலங்கையில் உருவாக்கப்பட்ட தவறான தகவல்கள் ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பரவி வருகின்றன. இத்தகைய விலக்களிப்பு நடவடிக்கைகள் எவையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். இலங்கை நிலைமை குறித்துக் கனேடிய அரசு தொடர்ந்து கண்காணித்து வரும் இந்தவேளையில், இலங்கைக் குடிமக்களுக்கான வீசாக் கட்டுப்பாடுகள் அனைத்தும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கனடாவுக்குப் பயணம் செய்யத் திட்டமிடுவோர் யாராக இருந்தாலும், பொருத்தமான வீசாக்களுக்கு விண்ணப்பித்து, வழமையான அனைத்து நிபந்தனைகளையும் திருப்தி செய்யவேண்டும்.

தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களும், கனடாவுக்குப் பயணம் செய்ய விரும்பும் ஏனையோரும் தவறான தகவல்களால் மேலும் பாதிக்கப்படாதிருப்பது முக்கியமானது.

கனேடிய அரசு வீசா நடைமுறைகளில் ஏதாவது மாற்றங்களைச் செய்தாலோ, அல்லது சிறப்பு விலக்களிப்புக்களை வழங்கினாலோ, எனது அலுவலகம் உடனடியாக இந்த விபரத்தை வெளியிடும்.

மேலதிக தகவல்களுக்குத் தொடர்பு கொள்ள - டொறீன் சவுந்தரநாயகம்
Gary.Anandasangaree.c1a@parl.gc.ca / 416.559.1749

## மேதினி மகிழும் மேதினம்



எத்தனை எத்தனை தொழில்கள் உலகில்?
எத்தனை எத்தனை வழிகள் பிழைக்க
அத்தனை தொழிலையும் செய்வோர் மண்ணில்
அனுபவம் வாய்ந்த தொழிலாளர்க என்றோ?
சத்தமிட் டியங்கும் இயந்திரத்தோடு நின்று
சரிசமமாக வேலைகள் செய்வான் தொழிலாளி
சித்தம் மகிழ்ந்தவர் சிரிக்கும் நாளாமிந்த
சீர்மிகு மேதின நந்நாளினைப் போற்றுவோம்!

ஆண்டான் அடிமையெனும் இருண்ட காலம்
அந்நாளில் இருந்த துண்மை அறிவீரே!
தீண்டான் எளியோரை தீட்டென்று விலகினான்
திட்டமிட்டு அவருக்கு தீமைதனைச் செய்திட்டான்
வேண்டான் அவர்நலனை எந்நாளும் நிதம்
வேண்டுமட்டும் வேலைகளைச் செய்ய வைத்தான்
தூண்டான் துளிகூட அவர்தம் வாழ்வுயர
துன்பத்தைத் தந்தவரை துடிக்க வைத்தான்!

பணம் படைத்தோறென்லாவர் உயர்ந்தோரே
பட்டினி கிடப்போறென் றாலவர் தாழ்ந்தோரே
குணம் கொண்டு பாராமல் பிரித்தாரன்று
குவலயத்தில் அவர்தானே தாழ்ந்து போனார்
பிணம் தின்னிக் கழுகினைப் போல் வாழ்ந்திருந்தார்
பிடிசாம்ப லாகுமட்டும் துயர் தந்தார்
கணங்கூட ஓய்வின்றி உழைக்க வைத்தார்
காலமெலாம் கருணையின்றி வதைத் தெடுத்தார்!

இரவுபகல் பாராமல் உழைக்கும் தொழிலாளர்
இவர் வாழ்வில் ஒளிவீச வந்தநாளே 'மே'தினம்
வரவாகி வந்ததந்த இனியபொனாள் வாழ்வில்
வசந்தத்தை ஏந்தித்தான் வந்திங்கே நிதம்
சிரத்தின்மேல் கொண்ட பாரம் நீங்கிடவே இங்கு
சீரிய மாற்றங்கள் தந்தது காண் யாவர்க்கும்
வரம்போல கிடைத்ததிந்த எட்டுமணி வேலைநேரம்
எல்லோர் வாழ்வுக்கும் அமைந்த நல்ல நேரம்!

பொய்களவு கலவாத எந்தத் தொழிலும்
போற்றுதற்குரிய தொரு நல்ல தொழிலே
செய்கின்ற தொழிலினிலே கருத்தொன்றி நன்று
செய்கின்ற மனமிருந்தால் போதும் இங்கே
வெயிலிலே வயலுழும் உழவர் கூட்டம்
வெறுவயிற்றுக் குணவிடும் தொழிலாளர் கூட்டம்
மெய்வருந்தி உழைப்பதனால் உயர்ந்த தொழிலாளர்
'மே தினத்தை' வரவேற்பர், மேதினியில் மகிழ்ந்திருப்பர்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ALEXANDER IMMIGRATION SERVICES
CANADIAN IMMIGRATION & CITIZENSHIP CONSULTING FIRM
கனடா குடிவரவு குடியுரிமை ஆலோசனை நிறுவனம்

- Study Permit
- Spousal Sponsorship
- Express Entry
- Visitor Visa
- Citizenship Applications
- LMIA based Work Permits
- Visa Extension
- Super Visa - Parents
- Parents Sponsorship
- Business Immigration
- Provincial Nominees
- PR Card Renewals
- Post Graduate Work Permits
- Humanitarian Applications

தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் சேவை.
உன்னதமான தொழில்முறை சேவைக்கு அழையுங்கள்.

Canadian Government Regulatory Body Licensed Immigration Consultant

Hemalatha K Alexander, B.Sc, MBA, RCIC, Commissioner of Oaths
by Tel : +1 647 773 3673 or email : info@alexanderimmigration.ca

10 Milner Business Court Suite 354 Toronto M1B 3C6 ON Canada

வாகன விபத்தா?
At Fault? No Fault?
2019
416-803-5296
sktheesan@gmail.com



FILE YOUR TICKETS IN 15 DAYS
Don't miss your court date!
Traffic Ticket
Motor Vehicle Accident
Your limitation for 3rd party claim?
S.K.THEESAN

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier (Teacher)

# மே திருநாள்




மாதந்தான் "மே"யென்றால் மகிழ்ச்சிக்கு உரியதன்றோ
சீதமொளிர் மாதமிது சிந்தனைக்கு உரியதன்றோ
வேதனைகள் ஓங்கிடவே விடுதலை வேண்டிநின்றார்
சாதனை யாளராகச் சாதித்தார் தொழில்மூலம்.

போராட்டம் தந்தவெற்றி பெருமைக்கு உரியனவே
ஊராரே முன்வந்து உறுதுணையாய் நின்றதனால்
ஈராறு மணித்தியாலம் ஏற்புடைத் தல்லவென்றே
பேராத ரவோடு பெற்றிட்டார் எட்டுமணி.

வெற்றிபெற்ற திருநாளைப் பெருமையுடன் கொண்டாட
உற்றுணர்ந்தே தேர்ந்திட்டார் ஊற ற்ற "மே"டேயாய்ப்
பற்றுடனே தொழிலாளர் பங்குபற்றி மகிழ்ச்சியுறு
நற்றிருநாள் இந்நாளே நானிலத் திருநாளாம்.

வாக்குவங்கி நோக்கமாக வலிந்தேற்கும் கட்சிகளும்
தாக்கத்தை உண்டாக்கித் தவறுகள் செய்கிறார்கள்
ஊக்கமுடைத் தொழிலாளர் உண்மைநிலை தெரிந்துகொண்டே
ஏக்கமின்றித் தம்கையில் ஏற்றதனை நடத்தவேண்டும்.

அரசிய லாக்கியே ஆனந்தங் கொள்கின்ற
பரம விரோதிகள் பாராள் தலைவர்கள்
உரம்சேர்க்கும் தொழிலாளர் ஊர்காக்கும் தலைமையை
சிரம மின்றிப் பெற்றிட்டால் சீரான ஆட்சிகாண்பர்.

உழைக்கும் கரங்களே உண்மைத் தொழிலாளி
தளர்வின்றி வாழவைப்பர் தம்நாட்டை மட்டுமல்ல
களையெடுப்பர் ஊழல்களைக் காலந் தவறாதே
தளர்விலா ஆட்சியையும் தக்கவைப்பர் தாமுணர்ந்தே.

ஒற்றுமை ஓங்கிடில் ஊடுருவல் அற்றிடுமே
பற்றான சமுதாயம் பாரெங்கும் மிளிர்ந்திடுமே
தற்பெருமை அற்றவர்கள் தலைவர்கள் ஆகிவிட்டால்
கற்கைநெறி தந்திடுமே களிப்பான கூட்டுறவே.

- முருகேசு மயில்வாகனன்

# தாய்மை

பத்துத் திங்கள் சுமந்து
பக்குவமாய் பெற்றெடுத்து
பாலூட்டி வளர்த்த தாயே
பாரினுள் புகழை விஞ்சி வேறு புகழ்
வேர் ஊன்றுமோ?

கண்ணான கண்ணாய்
கண்ணதாசனின் கவிதைகளிலும் நீயே
வைரத்துள் வெகுமதியாய்
வைரமுத்துவின் வரிகளிலும் நீயே

உன்னைப் பெண்ணென
ஊரார் போற்றுவதற்கு
உதிரம் தந்து என்னை
உயிர்ப்பித்தவளே!
என்னைப் பாரோர்
புகழ்ந்து பேசுவதற்கு
உன்னையே தியாகம் செய்தவளே!

உன்னை நான் எத்தனை புகழினும்
அத்தனையும் உனக்கு சமமாகுமோ?
உலகம் போற்றிடும் உன்புகழ்
உன் சிரமங்களுக்கு ஈடாகுமோ?

கண்திறந்து நான்பார்த்த
முதல் தெய்வம் நீதான்
கடைசிவரை நான் வணங்கும்
என்கடவுள் நீதான்
உன்னைத் தாயாய் பெறுவதற்கு
என்னதவம் செய்து விட்டேன்!

முனிவர்களும் ஞானிகளும்
பெற்ற பேறு பெற்றுவிட்டேன்
முடிந்தவரை உன்புகழை
முயன்றிடுவேன் போற்றிடவே
கண்ணை இமை காப்பது போல்
கருணை கூர்ந்து காத்தாயே!
எனக்கு வரும் துன்பமெல்லாம்
உன் துன்பமாய் ஏற்றாயே!
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
என்னை நீ பார்த்திடவே
படாத துயரம் பட்டாய்
பட்டமும் பலபெற வைத்தாய்.

பள்ளிக்கு நான் சென்று பயில
பல பயிற்சிகள் எனக்களித்தாய்
என்பிள்ளை என்பிள்ளை யென்று
என்றும் நீ அரவணைப்பாய்
சிறுவயதில் நான் செய்த
குறும்புகளை மன்னித்தாய்



இளவயதில் நான் வாழ
அறிவுரைகள் சொன்னாய்

வளர்பிறைபோல் நான் வளர
தேய்பிறைபோல் தேய்ந்தாயே!
என் ஏழு ஜென்ம புண்ணியமும்
ஏங்கிப்போக வைத்தாயே!

அன்பின் அடையாளமாய்
அறிவின் திருவாய்
என்றும் என்மனதின்
எண்ணமெல்லாம் நீதான்!

என் எண்ணும் கனவெல்லாம்
உன் கண்ணும் காணுவதேன்
நான் எழுதும் கவிதையெல்லாம்
உன் தாய்மை தானே!

லோ. வேணிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருந்துளை...

36 ஆம் பக்கத்தொடர்ச்சி


மாகச் சுற்றிக் கிட்டக்கிட்ட வந்து, பின்னரே கருந்துளையுடன் இணைந்து மறைந்து விடுகின்றன. இது அப் பொருட்கள் கருந்துளையினுள் வந்து விழுந்து மறைவது போல இருக்கும். இப்படியாக கருந்துளையுள் வந்து விழும் பொருட்கள் எல்லாமும் சின்னச் சின்னத் துகள்களாக உடைந்து மிகப் பெரிய வேகத்துடன் கருந்துளையினைச் சுற்றி ஒரு தட்டு வடிவில் அவை வலம் வருவதுபோல இருக்கும். அத்தட்டினை 'அக்கிரிசன் தட்டு' (accretion disk) என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இப்படியாக மிக வேகமாக அக்கிரிசன் தட்டில் சுற்றி வரும் துணிக்கைகள், தமது உயர் வெப்பம் காரணமாக இயற்பியல் அமைப்பின்படியே 'எக்ஸ் கதிர்கள்' போன்ற மின்காந்தக் கதிர்களை வீசுகின்றன. இவ் எக்ஸ் கதிர்களைக் கொண்டுதான் கருந்துளைகளை ஆரம்பத்தில் இனம் கண்டனர். ஆக, விண்வெளியில் எந்தவொரு இடத்தில் இருந்து எக்ஸ் கதிர்கள் எந்தவொரு அடிப்படையும் இன்றிப் பெருமளவில் வருகிறனவோ, அவ்விடத்தில் ஒரு கருந்துளை உள்ளது என விஞ்ஞானிகள் துணிந்து கொண்டனர். ஆனால், எந்தவொரு கருந்துளையின் படத்தையும் அவர்களால் காட்ட முடியவில்லை.

இந்த விஞ்ஞானிகளிடம் ஒரு (கூடாத) பழக்கம் உண்டு. எதையும் சும்மா விட்டு விடுவதில்லை. தோண்டித் தோண்டி, துருவித் துருவிப் பார்ப்பர். அவ்வகையில் வந்ததுதான் எப்படி இந்தக் கருந்துளையின் படத்தை எடுத்துக் காட்டுவது? என்பதும். கருந்துளைகளைச் சுற்றியுள்ள அக்கிரிசன் தட்டு நினைவில் வர, அவர்களுக்கு ஓர் உத்தி பிறந்தது. கருந்துளையைத்தான் படம் பிடிக்க முடியாது. ஆனால் கருந்துளையைச் சுற்றியுள்ள அக்கிரிசன் தட்டு வீசுகின்ற மின்காந்த அலைகளின் படத்தைப் பிடிக்க முடியுமென்றால், அவ்வலைகளின் படத்தின் நடுவில் இருப்பது கருந்துளை யல்லவா! உற்சாகம் கொண்டனர், செயலிலும் ஈடுபட்டனர்.

படத்தைப் பிடிப்பதற்கான உத்தி வந்ததும் படத்தை எடுப்பதற்கான சிக்கலான நடவடிக்கைகள் தொடங்கின. புவியிலே அண்டவெளியில் இருந்து வரும் வானொலிச் சமிக்கைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வானொலித் தொலைகாட்டிகளைப் பல நாடுகளும் தத்தமது பகுதிகளில் வைத்திருந்தனர். அவற்றினைப் பாவிக்கலாம் என முடிவு செய்தனர். ஆனால் இன்னொரு சிக்கல் இருந்தது. கருந்துளைகள் பெரிய பருமனில் இருப்பினும் புவியில் இருந்து அவை மிகத் தொலைவில் இருப்பதனால் மிகவும் சிறியனவாக, ஒரு பொட்டுப் போலவே அவை தெரியும். அவற்றினைப் படமெடுப்பதெனில் இவற்றில் எந்தவொரு தொலைகாட்டியையும் பாவிக்க முடியாது. மிகப் பெரிய தொலைகாட்டி தேவை. அதன் பருமன் எவ்வளவு இருக்க வேண்டும் தெரியுமா? குறைந்தது எங்களது புவியின் பருமனளவாகவாவது இருக்க வேண்டும். முடியுமா?

வழி தேட பழையபடி மூளையிடமே போனார்கள், வழி கிடைத்தது. உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் இருந்த 8 பெரிய வானொலித் தொலைகாட்டிகளை தொழில் நுட்பத்தால் ஒன்றிணைத்து ஒரு கற்பனையான எங்களது புவியினது பருமனளவான பாரிய தொலைகாட்டியாகப் பாவித்தனர். அதனை ஈஎச்ரீ (நுர்வு – Event Horizon Telescope) எனவும் அழைத்தனர். தமிழில் இதனை 'நிகழ்வெல்லைத் தொலைகாட்டி' என அழைக்கலாம். இதனை எப்படித் தொழிற்பட வைத்தனர் எனில், ஒரே நேரத்தில் அந்த எட்டு வானியல் தொலைகாட்டிகளையும் எம்87ஐ நோக்கிக் குவித்து, அதன் அக்கிரிசன் தட்டில் இருந்து வந்து கொண்டிருந்த வானொலி அலைகளின் சமிக்கைகளை சில காலத்திற்கு ஒரே நேரத்திற் பெற்றுக் கொண்டனர்.

படம் நிகழ்வெல்லைத் தொலைகாட்டியின் மாதிரி அமைப்பைக் காட்டுகிறது.



2017 யூலை வரையில் பெற்றுக்கொண்ட ஏராளமான தரவுகளைத் தொகுத்து, பலரது பாரிய பங்களிப்புடன், இறுதியில் 2019 ஏப்ரல் 10இல் எங்களது வடையின் அமைப்பிலான கருந்துளை எம்87இன் படத்தினை வெற்றிகரமாக வெளியிட்டனர். 'சபாஷ்' ஒன்று போடுவோம்.

இவ்வேளையில் உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம். 26,000 ஒளியாண்டு தொலைவில் உள்ள எங்களது கருந்துளையான சகர்ரறியஸ் ஏ யின் படத்தினை விட்டு விட்டு ஏன் 55 மில்லியன் ஒளியாண்டு தொலைவில் உள்ள எம்87இன் படத்தினை எடுத்தனர்? விடை தெளிவானது. எம்87இன் அக்கிரிசன் தட்டு புவிக்குச் செங்குத்தாக இருக்கிறது. அத்துடன் எம்87 கருந்துளை முற்றாக உயிர்ப்புள்ளதாகவும் இருக்கிறது. அதனால், கருந்துளையினைச் சுற்றி உள்ள எல்லா இடங்களில் இருந்தும் வானொலி அலைகள் வருவதனால், அவற்றினைப் படம் பிடிப்பதில் இருந்து எம் 87ஐப் படமாக்கலாம் எனக் கண்டு கொண்டனர். எங்களின் பால்வெளி கலக்சியின் மையத்தில் உள்ள கருந்துளையின் அக்கிரிசன் தட்டு எங்களின் புவிக்கு, சற்றுப் பக்கவாட்டில் தெரிவதால் அதனை முழுமையாகக் காண்பது கடினம். அத்துடன் சகர்ரறியஸ் ஏ பகுதி உயிர்ப்புள்ள கருந்துளை எனவும் கூறுகின்றனர். அதனாலேயே தொலைவில் இருந்தாலும் எம்87 இனைப் படமாக்க முயன்று வெற்றியும் பெற்று விட்டனர்.

விளம்பரத்தில் முன்னர் கருந்துளை பற்றிய விபரங்கள் தொடர்ச்சியாக வந்தது சிலருக்கு இப்போது ஞாபகத்திற்கு வரலாம். தூசு தட்டுங்கள். கருந்துளைகள் பற்றிய பல புதிர்கள் தெளிவாகும்.

அடுத்ததோர் விஞ்ஞான விடயத்துடன் வருங்காலத்திலும் வருவேன்.

## என் அழுகையில்



பல இரவுகள்
வலியின் பிடியில்
சிக்கி அழுதது
ஓர் இதயம்.
துடிதுடித்திருந்தேன்
உறக்கமின்றி.
காலத்தின் உந்தலின்
வெளியேற்றப்பட்டேன் நான்
அன்றும் துடித்தாள் அவள்
பொறுக்க முடியாமல்
வாய் விட்டு அழுதேன் நானும்
என் அழுகையில்
அவளின் சிரிப்பொலி
பூரிப்பாய் வளர்கிறேன்
அவளின் பிள்ளையாய்
"அம்மா" என்று அழைத்தபடி....

- பிரஷா -

# எழில் நிலவாம் மழலை

கல்லும் கரைந்து விடும்
காய்கூடக் கனிந்து வரும்
செல்லக் கதை சொல்ல
செந்தமிழும் அழகு பெறும்
சொல்ல வார்த்தை ஏது?
சுட்டிகளின் குறும்புதனை நம்
அல்லல் போக்கும் அருமருந்து
அவனியிலே வேறு உண்டோ?

மெல்லப் புரண்டு பின்
மெதுவாக ஊர்ந்து தன்
முல்லைப் பூவுடலைத் தூக்கி
முழங் கால்களால் தவழ்ந்து
பல்லில்லா வாய் திறந்து
பனிமலர் போல் சிரித்து
எல்லையிலா மகிழ்வு தரும்
எழில் நிலவாம் மழலை!



கொஞ்சும் அழகில் மனக்
கொதிப் படங்கிப் போய்விடும்
நெஞ்சமெலாம் அமைதி பெறும்
நெருங்கிச் சென்ற ணைக்கையிலே
பிஞ்சுக் கரம் நீட்டியவர்
பிரியமுடன் தலை ஆட்டி
அஞ்சுதல் ஏதுமின்றி பெரும்
ஆறுதல் அளிக்கின்ற செல்வம்

வெண்ணிலா வானில் வரும்
பிள்ளை நிலா வீட்டுக்குள் வரும்
கண்ணில்லாக் குருடனுக்கும், மழலை
கனிமொழி கேட்டால் மகிழ்வுவரும்
எண்ணிலாச் செல்வங்கள் இருந்துமென்ன?
எழில்கொஞ்சும் மழலை இல்லையெனில்
மண்ணிலே வாழ்ந்தும் ஏதுபயன்?
மழலைதரும் இன்பத்திற் ஈடுமுண்டோ?

கவிஞர் புரட்சிபாலன், வன்கூவர்.

# தாய்க்குலமே வாழ்க



தாரமாக வந்து இல்லத் தரசியாய் ஆக
தலைவன் அவன் உள்ளம் கவர்ந்து
இல்வாழ்வுக்கு உறுதுணையாய் இணைந்து
இல்லறத்தைப் பேணுகின்ற தாய்க்குலமே வாழ்க

கணவனையே தெய்வமென அனுதினமும் தொழுது
கற்பதனை கணவனுக்காய் அர்ப்பணித்து
நல்மக்கட் பேறுதனை நலமுடனே பெற்றெடுத்து
நாடு உயர நற்பணி ஆற்றும் தாய்க்குலமே வாழ்க

உரிமை சொல்லி உடன் அழைத்து மடியில்வைத்து
உதிரத்தைப் பாலாக்கி ஊட்டி ஊட்டி வளர்த்தும்
வெட்டையிலே நின்று வெண்ணிலாவைக் காட்டி
வேக வைத்த பண்டம்தனை ஊட்டும் தாய்குலமே வாழ்க

பெற்றெடுத்த செல்வங்களை சிறப்புடனே வளர்த்திட
பரம் பொருளின் அருள் வேண்டி விரதமிருந்து
வீணர்கள் ஆகிவிடுமா கற்கைகள் பல கற்கவைத்து
விற்பன்னர் ஆக்கி வைக்கும் தாய்க்குலமே வாழ்க



தாய் நாட்டைக் காக்கவைக்கத் தாய்பாலில் வீரமூட்டி
தாய் மொழி தமிழைக் காக்க தாலாட்டுப்பாட்டுப் பாடி
பெற்றெடுத்துப் பேர் கொடுத்த அன்னையர்களே நீங்கள்
பேசுகின்ற தெய்வங்களே உங்களை வாழ்த்துகிறோம்

கவிநாதம் பரந்தாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட ஞாயிறு!



உயிர்த்த ஞாயி(று) அன்று இலங்கை
உதித்த ஞாயி(று) இருண்டதேன்
உயிர்கள் நூறு பலப நித்து
உதிர மோட வைத்ததேன்?
துயரம் நீங்க இறையை நம்பித்
தொழுது நின்ற மக்களை
வயிர நெஞ்சில் வன்மம் கொண்ட
வனத்து மாக்கள் மாய்த்ததோ?

வென்று பகையை வீழ்த்த வல்ல
வீர மற்ற கோழைகள்
என்றும் எதுவும் அறித லற்ற
ஏழை எளிய மக்களைக்
கொன்று தீர்த்து இன்பம் கண்ட
கொடிய காட்டுப் பேய்களா?
தின்று போடும் இலைக்கு ஏங்கும்
தீர மற்ற நாய்களா?

சுற்று வன்போல் வந்து ஆண்பெண்
குழந்தை பேதம் இன்றியே
போற்றும் புனித ஆல யத்துள்
புதைத்து விட்ட கொடியரை
ஏற்கும் கடவுள் இருக்கு மென்னில்
எதற்கு அந்தக் கடவுளே?
மாற்றம் செய்து ஆக்கி வைப்போம்
மதங்க ளற்ற உலகமே!

**கவிஞர் மாவிலி மைந்தன் - சி. சண்முகராஜா**

ஏப்ரல் 21, 2019 இலங்கையில் கத்தோலிக்க தேவாலயங்கள், சுற்றுலா விடுதிகள் ஆகியவற்றில் நடந்த 9 குண்டுத் தாக்குதல்களில் பல நூற்றுக் கணக்கான அப்பாவி மக்கள் பலியான துயரம் நெஞ்சை உருக்கியதால் வடித்த கவிதை.


## தமிழ் மாணவர்களுக்கான பரீட்சை_ 2019
### யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா

யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா, தரம் 2 இலிருந்து 12 வரையான தமிழ் மாணவர்களுக்கு தமிழ், கணிதம், பொது அறிவு ஆகிய பாடப்பரப்புகளில் பரீட்சை நடத்தவுள்ளது.
இடம்: Toronto - Sri Sathya Sai Baba Centre 5321 Finch Ave. E., Scarborough, ON M1S 5W2
Brampton - Terry Miller Recreation Centre, 1295 Williams Pkwy, Brampton, ON L6S 3J8
காலம்: May 11, 2019
பரீட்சைகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை www.jaffnahinducanada.com என்ற இணையத்தளமூடாக அனுப்பிவைக்க முடியும். விண்ணப்பங்களை உரிய நேரத்திற்குள் அனுப்பிவைக்க முடியாத மாணவர்கள், நேரடியாகப் பரீட்சை மண்டபங்களில் தங்களின் விபரங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும். தொடர்புகளுக்கு: மு.சாந்தகுமார்: 647-262-9430
கு.சிவகுமாரன்: 416-859-4977 ஐ.சண்முகநாதன்: 647-988-9367



## வாழும் திறன்

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள் பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர் வி. கணேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

வி. கணேஷ்: **416.816.2563** மகேன்: **416.893.1222**
ஆறுமுகம் (AGR): **416.832.9467**



## தொல்காப்பிய மன்றம் - கனடா
### Association for Tolkappiyam - Canada

கனடா
தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

அறிவித்தலும் அழைப்பும்:

1) மாணவர்களுக்கான தமிழ் மொழித்திறன் போட்டி: மே 05, 2019 (ஞாயிறு – 9.00am- 5.00 pm)
Place: Scarborough Civic Centre 150, Borrow Drive Scarborough. (Free parking available)

2) தொல்காப்பியக் கருத்தரங்கு மே 26-05-2019 (ஞாயிற்றுக்கிழமை)
ஆய்வுரை: பேராசிரியர் நா. சுப்பிரமணியன்
"தொல்காப்பியத்தின் வரலாறும் வரலாற்றில் தொல்காப்பியமும்"
Place: Annamalai University Canada Campus, 1240 Ellesmere Rd. Scarborough.

3) பரிசளிப்பு விழாவும் ஆண்டு விழாவும்: 15-06-2019 (சனிக்கிழமை)
Place: Middlefield Collegiate Institute, 525, Highlen Ave. Markham. (Middlefield & Highglen)

மேலதிக விபரங்களை எமது இணையத்தளத்தில் (www.tolkappiyam.ca) பெற்றுக் கொள்ளலாம்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!
தொல்காப்பிய மன்றம் - கனடா
தொலைபேசி: 647–706–6124 / 416–546–1394 / 647-850-0152 / 416-270-4303
தொடர்பாளர்: அருள் - 647- 706 - 6124


# EDUCATION

## Review Questions19-9

### ➢ CALCULUS

Find $\lim_{n\to\infty} \frac{\sqrt{x^4+1}-2x^2-1}{x^2}$

(ii) $\lim_{h\to -4}\left(\frac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$

(iii) $\lim_{x\to 1}\frac{x^6-1}{x^{10}-1}$

(iv) $\lim_{x\to -3}\left(\frac{3x^3-4x+3x^2-12}{x^2-9}\right)$

(v) Find the equation of the tangent line to the function $f(x) = \ln\left(\frac{x^2}{x^2+1}\right)$ at $x=1$


### ➢ PHYSICS 12

A bullet mass 0.010 kg is fired with a velocity of 330m/s into a pendulum bob of mass 0.990 kg, initially at rest. How high does the bob swing above its initial position?

## Answer Key : 19-8

### ➢ CALCULUS & VECTORS

Car speed is given 54km/ h, (typo)




Assume that the shortest distance occurs "$t$" seconds after passing the overpass.

Truck speed = 30m/s

Car speed = 15 m/s

From the point P, The truck travelled 30 t m.

The car travelled ( 15 × 2 + 15t ) m

$d^2 = {d_1}^2 + (30t)^2$

${d_1}^2 = (10)^2 + (30+15t)^2$

$d = \sqrt{1125t^2 + 900t + 1000}$

$\frac{d_{(d)}}{d_{(t)}} = 2250t + 900$

$2250t + 900 = 0$ ; $t = -\frac{900}{2250}\ s$

Shortest distance occurs before truck comes to point P

By substituting the t value,
Distance = 28.6m

### ➢ CHEMISTRY 12

(1) (a) Rate = k $[NO]^x\,[Cl_2]^y$

k $[0.02]^x\,[0.04]^y$ =3.10x$10^{-5}$ ......(1)

k $[0.02]^x\,[0.08]^y$ =6.10x$10^{-5}$ ......(2)

k $[0.04]^x\,[0.12]^y$ =3.610x$10^{-4}$ ......(3)

solve for x and y ;

Rate = k $[NO]^1\,[Cl_2]^1$

(b) substitute the values in one of the equation to determine k value

K =3.8 x $10^{-2}$ $mol^{-1}Ls^{-1}$

(ii) $\Delta H = 2\,H_f\,NOCl - 2\,H_f\,NO$

= -77.1kJ


Answer key
19- 9 next issue
☎ 647 341 3975
*Dr. K.A. Srikrishnaraj*
KEEN TUTORING CENTRE




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நகைச்சுவைத் தொடர் 395

# மாசம்மா ராச்சியம்

கலகலப்பு நீதன்



முள்ளை வளைத்தொரு மகுடம் அளித்ததும்
ஆணி அடித்தொரு சிலுவை அறைந்ததும் அன்று நடந்தது.
ஆவி துடித்தது... இன்று நடந்தது....



எப்படி இந்தப்பாடலை கண்ணதாசன் சிந்தித்தாரோ!
கவிதையாக வடித்தாரோ!
கல்லறையில் அடைக்கப்பட்ட யேசுபிரான் 3ஆம் நாள்
உயிர்த்தெழுந்த ஞாயிறு. புனித உயிர்த்த ஞாயிறு.
உலகெங்குமுள்ள கிறிஸ்தவர் பிரமாண்டமாக வழிபடும் புனித தினம்.
ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் பல உயிர்கள்
தேவாலயத்தினுள் அடங்கிய நாள், ஆண்டவருடன் இரத்தம்
தோய்ந்த உடல்களாக அமைதியான நாள்.




அடையாளம் தெரியாதளவிற்கு மரணித்த உடல்கள்...
திட்டமிட்டு ஒரே நேரத்தில் பல இடங்களில்...

இது பிரச்சினையின் ஆரம்பம் தினமும் குண்டுவெடிப்பு,
கைது, தற்கொலை, அழிவுகள்...அண்மைக்காலங்களில் இடையிடையே நடைபெற்ற
பொலீசாரை தாக்கியவர்கள் கொலைசெய்தவர்கள் புலி உறுப்பினர்கள் என
மூக்குச்சாத்திரம் பார்த்து கைது செய்து (அடித்து உதைத்து சித்திரவதை) விசாரணை
செய்த பொலிசாரும் உடந்தையானவர்களும் பொறிகலங்கி நிற்கின்றனர்.

உலகண்ணை! ஈழப்போரிலை (பயந்து) ஆயுதங்களை பறிகொடுத்து முகாம்களையே
விட்டிட்டு ஓடிப்போன இராணுவத்தினரையும் பொலிசாரையும் திருப்பி கடமைக்கு
வரச்சொல்லி ராஜபக்ச அரசாங்கம் அறிக்கை விட்டும் ஒருதரும் போகேல்லையாம் என
தனது வட்ஸ்அப் பிஸி வேலையையும் விட்டு உலகருடன் வட்ஸ்அப் வரதன்
தொடங்க...

இப்ப கொழும்பு குண்டுவெடிப்புக்குப் பிறகு கன அரச படையினர் வேலையை
ராஜினாமா செய்யினமாம் என அரைகுறை தூக்கத்தினிடையே இடைவிடாது எல்லா
ரி.வி சனல் செய்திகளைப் பார்த்த செக்கண்ட்புளோர் செல்லம்மா ஆட்டிலறி
அன்னம்மாவுக்கு சொல்ல......

எங்கே நிம்மதி...எங்கே நிம்மதி... அங்கே எனக்கோர் இடம்
வேண்டும்.




சுகிள் கோகிலா...முகம் இருண்டுபோயிருந்தது. சிறையிலுள்ள
சசிகலா நடந்த தேர்தலின் முடிவு எப்படியிருக்குமோ என
மண்டையைக் குழப்புவதுபோல... கோகிலாவின் திட்டங்கள் மே
மாதம் கொழும்புக்கு போய்...வெசாக் போனால்...வெசாக்
பார்க்கலாம். பிறகு யூலை மாதம் ஆடி வேல்விழா அதுவும்
கொழும்பிலை...சிறப்பாகக் கொண்டாடும் விழா எனப் போட்ட
திட்டம் சிதறு சன்னமாகி விட்டது.



எங்கும் போக முடியாது...நிலவுக்கு ஒளித்து பரதேசம் போனது போலத்தான்.

யு..நோ..கோகி...என தொடங்கினா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.
இண்டைக்கு...ஒரு தேரர் (புத்தபிக்கு) கையிலை குர்ஆன்
வைச்சிருந்தவராம். கண்ட ஆக்கள் பிடிச்சு பொலிசிலை
குடுத்தவையாம். அந்தத் தேரோ சாமியார் சொன்னாராம்
சிங்களத்திலை உள்ள குர்ஆன் படிக்கிறாராம். தான் ஆராச்சி
செய்ய எனச் சொல்ல....ஆட்டிலறி அன்னம்மா குறுக்கிட்டு..அவரை கல்முனைக்கு
போகச்சொல்லு நல்லா ஆராய்ச்சி செய்யலாம் செய்யலாம்...என



உலகரின் மனம் எங்கேயோ எல்லாம் போய் வந்தது. வன்னியில்
விளைந்த எங்கள் நெல்லு, அரிசியை ஆனையிறவைத் தாண்டி
கொண்டு வருதற்கிடையில் எத்தனை செக்பொயின்ற்.



"குண்டையூர் சில நெல்லுப்பெற்றேன்... ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித்தரப்பணியேன்."

அன்று ஆறு கிலோ அரிசி
நெல்லுக்கே..10..15..இடத்திலை..செக்கிங்....



இப்போ ஏ.கே. 47, றொக்கற் வெடிப்பொருட்கள், தற்கொலை
அங்கிகள் லட்சக்கணக்காக அமெரிக்க
டொலர்கள்...தரைமார்க்கமாக..கடல்..மார்க்கமாக..வானெல்லையூடாக..எப்படி வந்தன?

ஈழப்போர் இறுதிக்கட்டப் போரில் முன்னின்று உதவிய இந்தியா இப்போ உதவுமா?
அவர்களுக்கு இலங்கை தவிர ஒவ்வொரு எல்லையிலும் தினம் தினம்
குண்டுவெடிப்பும்...துப்பாக்கிச்சூடும் சண்டையும்தான்...
தான் போக வழியைக் காணேல்லையாம் மூஞ்சூறு.........எப்படி?



சில துறவிகள் அவர்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக்
கவனித்த புத்தர் அவர்களிடம் சொன்னார்: "மிருகங்கள்
ஒன்றுக்கொன்று மரியாதையுடனும், விட்டுக்கொடுத்தும்,
நற்பண்புடனும் இருக்கும்போது நீங்களும் அவ்வாறே இருக்க
வேண்டும்.



அடக்கமில்லாத, ஒழுக்கமில்லாத அல்லது நிறைவடையாத ஒருவன்
மற்றொருவனை அடக்கத்தோடு, ஒழுக்கத்தோடு, நிறைவோடு வாழ வைக்க
முடியாது. ஆனால் அடக்கமுள்ள, ஒழுக்கமுள்ள, நிறைவுள்ள ஒருவன்
மற்றவரையும் தன்னைப் போலவே உருவாக்க முடியும்
முரண்பாட்டில் ஆபத்தைக் கண்டு, இணக்கத்தில் அமைதியைக் கண்டு,
ஒற்றுமையோடும் அன்புள்ளத்தோடும் வாழவேண்டும்." இதுவே புத்தரின் போதனையாம்.

மே 1...15




1. மே தினம்



1. ஒசாமா பின்லாடன் பாகிஸ்தானில் அமெரிக்க விசேட பாதுகாப்புப்
படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். (2011)



2. உலகம் முழுவதும் வயது வித்தியாசமின்றி விரும்பி பார்க்கும் மிக்கி
மவுஸ் எனும் காட்டூன் பாத்திரம் வால்ட் டிஸ்னி அவர்களால் 1928இல்
வரையப்பட்டது.

3. சர்வதேச பத்திரிகை சுதந்திர நாள்.



4. அனைத்துலக தீயணைக்கும் படையினர் நாள்.

5. சர்வதேச மருத்துவிச்சிகள் நாள்.




8. உலக செஞ்சிலுவை நாள்.

12. அன்னையர் தினம். (மதேர்ஸ் டே)




12. உலக செவிலியர் நாள்.

13. தவில் வித்துவான் லயஞான குபேர பூபதி தட்சணாமூர்த்தி
நினைவு தினம்.

15. கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை நினைவு நாள். (1928 - 2003)
நடிகர், நாடகத்தயாரிப்பாளர், இலங்கை வானொலியில்
தாளக்காவடி நாடகத்திற்காக பரிசு பெற்றவர்.

# அனைவருமே பணிந்து நிற்போம்!

கண்கண்ட தெய்வமாய் காருண்யக் கடவுளாய்
மண்மீது வந்திருக்கும் மாதாநம் வரமாகும்
எண்ணிநாம் பார்த்துவிடா இன்னல்களை அனுபவித்தும்
எமைப்பற்றி நினைத்திருப்பாள் என்னாளும் அன்னையவள்!

இரவுகண் விழித்திருப்பாள் எம்மருகே அவளிருப்பாள்
குளிர்சுரங்கள் வந்துவிட்டால் கொடுத்திடுவாள் பலமருந்தை
அவளுணவை நினைக்காமல் அழுமெம்மை அவள்பார்ப்பாள்
ஆசையுடன் எமையணைத்து ஆறுதலைப் பெற்றுநிற்பாள்!



நாம்சிரிக்கும் நாளெல்லாம் தான்சிரிப்பைக் காட்டிடுவாள்
நாமழுது விட்டுவிடின் தானுமே சேர்ந்தழுவாள்
ஓர்நொடியும் எமைவிட்டு அவளுணர்வு ஒதுங்கிவிடா
வேராக அவளிருந்து வீழாமல் காத்துநிற்பாள்!

அம்மாபோல் பொறுப்புள்ளார் இப்புவியில் யாருமுண்டோ
அம்மாவின் மடியிருத்தல் அனைவருக்கும் பெருமையன்றோ
அம்மாவை அணைத்துநிதம் அவழடியைத் தொழுதுநிற்றல்
அம்மாவை அகம்வைப்பார் அனைவருமே ஆற்றிடுவார்!

காப்பகத்தில் தாயைவிடும் காட்சியினை மறந்திடுவோம்
கர்ப்பத்தில் காத்தவளை காப்பகத்தில் விடலாமா
மூப்புவரும் முடுக்குவரும் மூச்சுவிடக் கஷ்டம்வரும்
காத்துயெம்மை வளர்த்தவளை காப்பாற்றல் கடமையன்றோ!



அம்மாவின் அழுகுரலை ஆருமே விரும்பாதீர்
அம்மாவை நோகவிட ஆருமே நினைக்காதீர்
அம்மாவின் தினமதிலே அன்னைதெய்வம் எனநினைப்போம்
அத்தெய்வம் தனைநாங்கள் அனைவருமே பணிந்துநிற்போம்!

எம். ஜெயராமசர்மா - மெல்பேண் அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

## வைத்திய ஆய்வு பெற்ற கீரைகளும், இலைகளும், தண்டு, கிழங்குவகை



வைத்திய கலாநிதி
கே.ரீ. கோபால்
647-456-9796

**பிரண்டைத் தண்டு** - இதனை வச்சிரவல்லி என மறுநாமம் கொண்டு அழைப்பர். இதில் களிப்பிரண்டை, புளிப் பிரண்டை என இருவகையுண்டு. உயிர் இயக்கங்களின் மாற்றம் உண்டாக்கி உடலைத் தேற்றும், மாதர்களுக்கு ஏற்படும் மாதவிலக்கை சீராக்கி உடலைத் தேற்றும் மற்றும் பசியைத் தூண்டும் ஆற்றல் உடையது. மேலும் பிரண்டையின் இளம் தண்டை நெய் கூட்டி வதக்கி அரைத்து துவையல் செய்து இடையிடையே பாவித்து வரலாம். இதனால் இரத்த மூலம் ஒழியும். அத்துடன் அக்கினி மந்தம், குன்மம், முளைமூலம், கபதோஷம், இரத்தபேதி, கை, கால் அசதி யாவும் அகல்வதுடன் பசியையும் தூண்டும்.

**களிப்பிரண்டை** - இது பிரண்டையின் ஒருவகையாகும். இதனை தூய்மை செய்து துவையலாகப் பாகம் செய்து உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் கபவிருத்தி, பித்த அதிகரிப்பு, கரப்பான், காணாக்கடி, விஷம் சிலந்தி விஷம் போன்றவை தீர்ந்து விடும் என அறிய முடிகின்றது.

'ஐயமறும் பித்தம் அணுகாம லோடி விடும் தையலார் போகமிகச் சாருஞ்சாண் - பையக் கரப்பான் விலகும் கடிசிலந்தியும் போம் உரப்பாங்க களிப்பிரண்டையுண்' என அழகாக கூறப்படுகின்றது.

**புளிப்பிரண்டை** - இதனை துவையல் செய்து உணவாகப் பாவித்து வந்தால்



செமிபாடு நன்னிலையடையும். அத்துடன் நின்று விடாது சீதபேதி, அதிமிக்க கொட்டாவி, விக்கல், கப ஆதிக்கம், வாத விருத்தியடக்கி, சுகநிலை பெறுவீர்கள். மேலும் சரீர வெளுப்பு, மார்பு நோய், வயிற்றுவலி, ஆகியவை தீர்ந்து விடும். 'பார்க்கும் புளிப்பிரண்டை பாண்டுரநோய் குன்மகயம் போக்குமது சூடாம் புகல்' எனக் கூறப்படுகின்றது.

**மரவள்ளிக் கிழங்கு** - மரவள்ளிக் கிழங்குச் செடியானது மாச்சத்தை உண்டு பண்ணி வேர்களில் சேகரித்து வைத்துக் கொள்ளும். இதன்வேர் தான் கிழங்காக



எமக்குக் காட்சியளிக்கின்றது.

கிழங்கைச் சமையல் செய்யும் முன் ஓரளவு கசப்புடையதாக இருக்கும். கிழங்கில் உள்ள சயனிக் (Cyanic) அமிலத்தன்மை உடையது. இந்நிலை கூடிக் குறைந்து காணப் படலாம். எனவே இந்த அமிலத்தன்மை யானது நஞ்சு பொருந்தியது. இந்த அமிலத் தன்மை கிழங்கு வகை காலத்தைப் பொறுத்து வேறுபடும். மேலும் அப்படி ஓரளவு அமிலத்தன்மையாக இருந்தபோதும் காலத்தையும் நேரத்தையும் பொறுத்து வேறுபடுவதுண்டு. கிழங்கை வேகவைக்கும் போது அல்லது வற்றலாகப் பாவிக்கும் போது அமிலத்தன்மையற்றுப் போகும் என அறியமுடிகின்றது.

கிழங்கை எடுத்துச் சிலநாட்கள் வைத்திருந் தால் கிழங்கின் நடுப்பகுதியில் கறுப்புநிறம் தோன்றும். இது சயனிக் அமிலம் உண்டு என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதனைப் பாவிப்பது நன்றன்று. கிழங்கு நல்ல நிலையில் இருக்கும்போது சீவல் செய்து நன்கு காயவைத்து மாவாக்கி பிட்டுத் தயாரித்துப் பாவிக்கலாம். மற்றும் மரக்கறி கூழ், மாமிசக் கூழ் போன்றவையும் தயாரிக்கும்போது பாவிக்கலாம். கறியாகவும் பாகம் செய்து சாப்பிடலாம். எல்லாம் அவரவர் உடல் நிலையைப் பொறுத்த தாகும். காலத்திற்கும், நேரத்திற்கும் உரிய வரின் உடல் நிலை நன்கு நிவிர்த்தியாக இருக்க வேண்டும்.

மரவள்ளிக் கிழங்கை எடுத்து 'சவ்வரிசி' தயாரிப்பதை நாம் நன்கு அறிவோம். அத்துடன் ரவையும் தயார் செய்கின்றனர். மரவள்ளிக் கிழங்கை, ஆள்வல்லிக்கிழங்கு, எழிலைச் கிழங்கு, மரச்சீனிக் கிழங்கு எனவும் வேறு பெயர் கொண்டு

அழைக்கப்படுகின்றது. மரவள்ளிக்கிழங்கு கைப்புச் சுவையுடையது. கைப்புச் சுவையாக இருந் தாலும் ஓரளவு இனிப்புச் சுவையும் இரண்டறக் கலந்துள்ளது. கால நிலைக்கு ஏற்ப எமது உடலை உரமாக்கும் இயல் புடையதாகும்.

இக்கிழங்கில் இருந்து எடுக்கப்படும் 'மா' எப்படி எடுக்கப்படுகிறது என்பதை நாமும் ஓரளவு அறிவது நன்று என அறிகின்றேன். அதாவது கிழங்கின் மேல்தோல் நீக்கி எந்திரங்களினால் துருவி தண்ணீருடன் கலக்கும்போது 'மாப்பொருள்' (Starch) பிரிந்து தண்ணீருடன் சேர்ந்து கொள்ளும். அப்பொழுது தண்ணீர் பால் போன்று வெள்ளையாகின்றது. அப்படி வந்தவற்றை தொட்டிகளில் வைத்திருந்தால் மாவுச்சத்து கீழே படிந்துவிடும். மேலேயுள்ள நீரை வடித்துவிட்டு வண்டல் போன்ற மாவுப் பொருளைச் சீமெண்டுத் தளங்களில் பரப்பி, உலர்ந்ததும் அவை மாவுப்பொருளாக எமக்கு கிடைக்கின்றன. தண்ணீர் நுரைத்துப் புளிப்படையாமல் இருப்பதற்கு குறைவான சோடாக்காரம் சேர்க்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

**சவ்வரிசி** - மாவுப் பொருள் தயார் செய்து உலர்த்தும் வேளை ஈரப்பதம் அற்று இருக்கும். அதை எடுத்து 'சல்லடை' மீது வைத்து தேய்த்தால், ஒரேயளவுள்ள சிறு துண்டுகளாக கீழ் இறங்கும். அதனை எடுத்து நாலுபுறம் இழுத்துக் கட்டப் பட்டதுணியில் தயாரான தொட்டிலில் வைத்து அங்கும் இங்கும் பலமுறை அசைக்கும்போது அவை ஓரளவு உருளைத் தன்மையாகின்றது. இவற்றை எடுத்து எண்ணெய் தடவிய பாத்திரத்தில் மினுங்கும் வரை இளம் வறுவலாக வறுத்தபின் சல்ல டையினால் தரவாரியாகப் பிரித்தெடுக்கும் பொருள்தான் சவ்வரிசியாகும்.

மரவள்ளிக்கிழங்கை அதிகம் பாவித்து வந்தால் பித்தவாத குணமும், தொந்தமும், அக்கினி மாந்தமும் உண்டாகலாம் எனவும் கூறப்படுகின்றது. எனவே எதற்கும் நாம்



தேவையற்று அதிகம் பாவிக்காமல் இருத்தல் வேண்டும். தொடரும்...



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

## அம்மா என்னும் அழகிய உறவு!



அன்னை என்பவள் அன்பின்வடிவம்
அவளின் மலரடி தினமும்தொழுவம்
தன்னை அழித்து ஒளிதரும்
தகைமை உள்ள மெழுகினைப்போல
பொன்னை நிகர்த்த அன்னையாமவள்
பொறுமைகாத்தே தன்னையே தருவாள்
முன்னைவாழ்ந்த மூதோர் சொன்னார்
முன்னறி தெய்வம் அன்னையாமென்றே!

தனக்கென வாழாத்தன்மையைக் கொண்டாள்
தருவாள் உயிரும் மனையறம்காக்க
மனதினில் தூயஅன்பினைச் சுமப்பாள்
மக்களின் நலனே தன்நலமென்பாள்
வனத்தினில் வாழும் மிருகங்கள்கூட
வலுவில்வந்து தாய்மையை உணர்த்தும்
தனத்தினில் ஒப்பிலாத் தங்கத்தைப்போலும்
தரணியில் பெருமைக்கு உரியவர்தாய்தான்!



எத்தனை பிறவிகள் எடுத்தாலென்ன?
எத்தனை உறவுகள் இருந்தாலென்ன?
அத்தனை உறவிலும் உச்சம்பெறுவது
'அம்மா' என்னும் அழகியஉறவே
புத்தனை உலகிற்கீந்தவள் அன்னை
புனிதயேசுவை நமக்குத்தந்தவள் அன்னை
நித்தமும் தொழுகை ஐந்துஎன்றே
நினைத்த நபிகளைப்பெற்றவள் அன்னை!

கத்தும் கடலதும் ஓதுவதுமுண்டு
காயும் வெண்ணிலா தேய்வதுமுண்டு
வித்தும் விளைந்திடா திருப்பமுண்டு
வீசும் புயலும் வீழ்வதுமுண்டு
சொத்தும் சுகமும் இல்லாவிடினும்
சொர்க்கம் மலர்ந்திடும் அன்னையின்மடியில்
முத்தாய் விளையும் அன்னையின்அன்போ
முடிந்தோய்வதோ தேய்வதோ இல்லை!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம் 2019 Mahudam









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A New project by TRIDEL "WELL" in TORONTO

## FRONT ST. & SPADINA




## 3 CONDO BUILDINGS TOTAL 756 HIGH END UNITS FOR SALE

• 38 STOREYS 400 SUITES • 22 STOREYS 258 SUITES • 14 STOREYS 98 SUITES

## FOR YOUR UNITS
## PLEASE CALL HomeLife/ GTA Realtors

New and Experienced Sales reps/Brokers are welcome to join our successful team.

Free Real Estate classes start every week.

• Office open 7 days • 9:00 am - 9:00 pm
• Over 5,000 Sqft. office • Conveniently Located in GTA Square Mall

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

## For More info. Call 416.321.6969

HOMELIFE HIGHER STANDARDS

# HomeLife / GTA Realty Inc. *Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977
*INDEPENDENTLY OWNED AND OPERATED

we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
(University of Toronto)
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)

வீடு வாடகைக்கு பெற்றிட...
Mega Financial Group
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416.670.7436
vanyjeganmohan@gmail.com
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
Buy / Sell / Lease
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2

GT|Brokers
Protect You & Your Family
YOUR FINANCIAL FREEDOM IS OUR SERVICE
DON'T WAIT! LET'S START
Pathmini Wigna
Financial Security Advisor
647.868.7443
pat.gtbrokers@gmail.com
Wigna Somasundram
Financial Security Advisor
647.409.6429
wigna.gtbrokers@gmail.com

வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416-716-1540
vasanta.raviendren@gmail.com
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2
Life Insurance
Non Medical
Super Visa
RESP

வீடு வாடகைக்கு, வாங்க மற்றும் விற்க
New Constructions : $700 Per Sq Ft. In Markham
Markham & Buroak
Markham & Steeles Ave ($399 000)
வீட்டின் பெறுமதியின் 10% வரை சேமிப்பது எப்படி?
இலவசமாக தெரிந்துகொள்ள அழையுங்கள்
647-296-0596 www.tisipara.com
Get to know how to SAVE 10% of Your Home price and more Incentives.
Para Tisikulasingam
Sales Representative

வீடு வாங்க, விற்க, வாடகைக்கு
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
*Independently Owned & Operated
INCOME TAX E' FILE 416-288-1548

IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
*Each Office Independently Owned And Operated*
2100 Ellesmere Rd,
Scarborough, ON M1H 3B7
Office: 416-289-2155
E-mail: msudharshan@hotmail.com
Web: www.ez2home.com
TEAM TITANS
Sudharshan
Muthucumaraswamy, CPA, CGA
Broker
Direct: 416.567.6209
Residential / Commercial Purchase Sale Investment Leasing
*Not intended to solicit properties under contract

FREE HOME EVALUATION
BUY & SELL WITH CONFIDENCE
Free Home Staging, Professional Photography, Floor Plan & Flexible Commission
THELEPAN VIGNESWARAN
416-666-1401
www.thelepan.com
Scan me
HomeLife Galaxy Real Estate Ltd. Brokerage Independently Owned & Operated

HOMES & COTTAGES FOR SALE
BRAMPTON
2 years old
$799,000
2-Storey - Detached 4BR
OSHAWA
$699,900
2-Storey - Detached 4BR
Danforth & Vic. Park
0.5 Acres
Redevelopment
HAWARTHA LAKES
$299,990
Bungalow - 5BR
UXBRIDGE - ONTARIO
$1,389,000
Gas Station & Property
GEORGINA -KESWICK
$899,900
Restaurant&Property
Cottages Availabe for (20 People) Rent starting from $149 Perday
1st & 2nd Mortgage available upto 1Million
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110

ATSEY FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE LIC# 10530
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES

வீடு என்பது நமது கனவு
The Realtor for your Dream House
BUY... SELL... LEASE... INVEST...
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East, #203 Toronto ON M1C 0C2 Tel: 416.321.6969
*Independently Owned & Operated



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org